# தமிழை அறிவோம் !
# தமிழராய் வாழ்வோம் !



## தமிழண்ணல்

மெய்யப்பன்
பதிப்பகம்

# தமிழை அறிவோம்!
# தமிழராய் வாழ்வோம்!

தமிழ் இலக்கணம்
புதிய பார்வைகள்
புதிய காட்டுக்கள்
அடிப்படை மரபை
அறியவைக்கும் - ஒரு
புதிய பாடநூல்

**தமிழண்ணல்**

**மெய்யப்பன் பதிப்பகம்**
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : டிசம்பர், 2007

திருவள்ளுவர் ஆண்டு : 2038

உரிமை : ஆசிரியர்க்கு

**விலை : ரூ. 35.00**

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 234



**நினைவில் வாழும்**

**நிறுவனர்**

**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச்செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடங்கள் :

**மணிவாசகர் நூலகம்**

12–B, மேல சன்னதி, **சிதம்பரம்–608001.** ☎ **230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை–600108.** ☎ **25361039**

6, சிவஞானம் தெரு, தி. நகர், **சென்னை–600017.** ☎ **24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை–625001.** ☎ **2622853**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர்–641001.** ☎ **2397155**

78, செரி சாலை, **சேலம்–636001.** ☎ **3207722**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி–620002.** ☎ **2706450**

---

**அச்சிட்டோர் :** மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 021.

தொலைபேசி: 25954528

# பாயிரம்

தமிழ் இலக்கணத்தின் இன்றியமையாக் கூறுகள் மட்டும் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

இடையிடையே சோர்வு தட்டாமல், பல்வேறு குறிப்புக்கள் கூறுவதோடு, இலக்கணங்களுக்கான காரணங்களை இந்நூல் எடுத்துக் கூறுகிறது. இதுவே இதன் தனித்தன்மையாகும்.

தமிழ் இருவகை வழக்கு மொழி; பேசுவதுபோல் எழுதக் கூடாது; எழுதும் தமிழே கட்டளைத் தமிழ்; அதில் கொச்சையாகவோ, மொழிக் கலப்புடனோ அச்சடித்துப் பரப்புவது கொடுமை.

நாளிதழ், தொலைக்காட்சி, திரைப்படம் போலும் பொதுமக்களுக்கான ஊடகங்கள் தமிழைச் சிதைப்பதைத் தடுக்க வேண்டும். அதற்கான விளக்கம் தந்து, மாணவர்கள் அல்லது இந்நூலைப் படிப்பவர்களின் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி, அவர்களை ஒரு புரட்சிக்கு ஆயத்தப்படுத்த இந்நூல் பெரிதும் உதவும்.

தமிழாசிரியர்கள் படித்தால், சிறப்பாகப் பாடம் நடத்தலாம். தமிழ் ஆர்வலர்கள் படித்தால் அவர்களும் தமிழறிந்தவர் ஆகலாம். தமிழின் தனி இயல்பை எடுத்துரைப்பது இந்நூல். அனைவரும் படித்துப் பயன்பெற அன்புடன் அழைக்கின்றேன்.

*தமிழண்ணல்*

# உள்ளுறை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | புலி பூனையாக முடியுமா? | .... 5 |
| 2. | நமக்கு ஆங்கிலம் வேண்டாமா? | .... 7 |
| 3. | வடமொழி தமிழர்க்குப் பகையா? | .... 8 |
| 4. | தமிழைத் தெரிந்து கொள்வோம்! | .... 9 |
| 5. | வாக்கிய அமைப்பின் அடிப்படை | .... 14 |
| 6. | ஆகுபெயர் | .... 21 |
| 7. | வேற்றுமை | .... 25 |
| 8. | வேற்றுமை, அல்வழி | .... 31 |
| 9. | திணை பால் எண் இடஇயைபு | .... 36 |
| 10. | பிரித்தெழுதுதல், சேர்த்தெழுதுதல் | .... 47 |
| 11. | சந்தி – ஒற்றெழுத்து மிகுதல் | .... 52 |
| 12. | தமிழ்ச்சொல் கட்டமைப்பு | .... 60 |
| 13. | நான்குவகைத் தமிழ்ச்சொற்கள் | .... 67 |
| 14. | மொழி முதல் எழுத்துக்கள் | .... 71 |
| 15. | மொழியிறுதி எழுத்துக்கள் | .... 79 |
| 16. | சார்பெழுத்துக்கள் | .... 88 |
| 17. | மெய்ம்மயக்கம் | .... 92 |
| 18. | பிறமொழிச்சொற்கள் | .... 98 |
| 19. | உலக வழக்கும் செய்யுள் வழக்கும் | .... 107 |

# 1. புலி பூனையாக முடியுமா? புள்ளி போட்டுக் கொண்டால், பூனை புள்ளிமான் ஆகிவிடுமா?

நீ யார்?

உன் பெயரென்ன?

உன் நிலையான முகவரி எது?

உனக்கு – அதாவது உன்னை நீதான் என உறுதிப்படுத்துவதற்கு, உன் உடம்பில் ஏதும் 'மச்சம்' இருக்கிறதா? வேறு அடையாளம் ஏதும் இருக்கிறதா?

உனக்குச் சொந்த வீடு இருக்கிறதா?

உனக்கென்று ஏதேனும் சொத்து, செல்வம், தோட்டம் துரவு உள்ளனவா?

உனக்குத் தெரிந்த, பெரியவர்கள் யாரும் இருக்கிறார்களா?

உனக்குக் குடும்பம், பிள்ளைகள், உறவுகள் உள்ளனவா?

இவ்வளவும் கேட்கிறார்களே? ஒரு குடும்ப அட்டைக்கு, ஒரு வங்கிக் கணக்குக்கு, கடவுச் சீட்டுக்கு (Passport), வீடு கட்டக் கடனுக்கு – இவ்வாறு எதற்கெடுத்தாலும் நாம் உரிய விடை கூறி, எழுதிக் கொடுத்து, நம்மை அடையாளப்படுத்திக் காட்ட வேண்டியுளதே?

தமிழர்களாகிய நாம் நம் தய்மொழியை இல்லை என்று மறுக்க முடியுமா? ஓங்கி அறைந்தால், உண்மை வெளிப்படுமே, 'அம்மா!' என்று.

நமக்கு ஆங்கிலம் தொடர்புக்கு வேண்டும்; அதற்காக நாம் ஆங்கிலேயர்கள் ஆக முடியுமா?

வருமானம் வேண்டும்; வயிற்றுப் பிழைப்புக்கு வழி வேண்டும். அதற்கு இன்று ஆங்கிலம் உதவுகிறது. அது என்றும் உதவும் என்று கூற முடியுமா?

தன்னை இழந்து வாழ்வதா? தரம் இழந்து தாழ்வதா? நாம் நம் அடையாளத்தை, முகவரியை இழப்பதா?

நீ என்னதான் குட்டிக் கரணம் போட்டாலும், உன்னைத் 'தமிழ்' – 'தமிழன்' என்றுதானே, பிறமொழியான் அழைக்கின்றான். அருமைத் தமிழர்களே, உங்கள் அடையாளத்தை இழக்காதீர்கள். உலகமே வியக்கும்படியான இலக்கியம், கலை, பண்பாட்டுச் செல்வங்கட்கு உரிமையுடையவர்கள் நாம்! உலகத்திற்கு வழங்கக்கூடிய கருவூலங்கள் நம்மிடம் உள. எனவே தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்; தமிழராய் வாழக் கற்றுக் கொள்ளுங்கள்!

தாய்த்தமிழை முதலிற் கற்போம்! குருதியிலும் குருதி மரபணுவிலும் கலந்த தாய்த்தமிழில் கற்பதே கல்வி உளவியல். காந்தியடிகள் காட்டிய வழி! இரவீந்திரநாத தாகூர் போற்றிய வழி! மகாகவி பாரதி முழங்கிய நெறி!

நாம் சமஸ்கிருத மொழிக்குப் பகையல்லர்; சமஸ்கிருதத்தைத் திணித்து, அதன் மீது நமக்குப் பகைமை உணர்ச்சியை வளர்ப்பவர்களே, அந்த மொழியின் அழிவுக்கும் வழிதேடுகிறார்கள்!

நாம் தெலுங்கு மொழிக்கும் பகைவர்கள் அல்லர். தமிழகத்தில், தமிழ் மண்ணில் வாழ்ந்து, தமிழ்நீர் பருகி, இம் மண்ணுக்குப் பகையாய், நன்றிகொன்று – பல ஆயிரம் தமிழர்களைச் செவியிருந்தும் செவிடர்களாய் ஆக்கி, அவர்களுக்குப் பொருள் தெரியாத மொழியில் பாடி, பகைமையை வளர்ப்பவர்கள் தமிழர்கள் அல்லர்; தமிழர்களேயாயினும் தங்களை அன்னியப்படுத்தி, நாளும் அழிவு தேடும் அவர்களே, மொழிப்பகைவர்கள்!

நாம் இந்திமொழிக்கும் பகைவர்கள் அல்லர். தொடர்புக்கு இந்தி கற்க ஆயத்தமாக உள்ளோம். ஆனால்....

ஒருவன் மற்றவனைக் குனியவைத்து, அவன் முதுகின்மீது ஏறித்தாவி, பச்சைக் குதிரை விளையாடுவானாம். காலமெல்லாம் குனிந்தவன், குனிந்தபடி நிற்பதே, இந்தியத் தேசிய ஒற்றுமையாம்!

யாரும் இனிக் குனிய ஒப்பமாட்டார்கள்! இருவரும் நிமிர்ந்து நிற்போம்; ஒருவருடன் ஒருவர் சமமாகக் கைகொடுத்துச் சிரித்து மகிழ்ந்து வாழ்வோம். பகைமையை விரட்டியடிப்போம்!

இந்தியப் பெருமொழிகள்அனைத்தும், இந்தியாவின் ஆட்சி மொழிகளாகும். United States of America (USA) போல United States of India (USI) உருவாகும். ஐக்கிய இந்தியப் பேரரசில் அனைவரும் இணைந்து வாழ்வோம்!

எந்த மொழிக்கும் நாங்கள் என்றும் பகையாக இருந்ததில்லையே?

சொந்த மொழியை விட்டுவிடச் சொல்லும் நீங்கள்தான் கல்வி வணிகர்கள்! குடி கெடுக்கும் கூட்டுக் கொள்ளையர்கள்!

இவ்வாறு நாங்கள் சொல்லவில்லை; உங்கள் மனச்சான்றே சொல்லவில்லையா?

பணம் வரும்; போகும். அதற்காக தாய்த் தமிழை அறவே புறக்கணிப்பது கீழ்மைப்படுத்துவது அவமானப்படுத்துவது கொடுமை – கொடிதினும் தீய கொடுமை!

✣ ✣ ✣

## 2. நமக்கு ஆங்கிலம் வேண்டாமா?

நமக்கு ஆங்கிலம் வேண்டும். உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் வேண்டும். கணினிப் படிப்புக்கு ஆங்கிலம் வேண்டும்.

உணவு விடுதிகள் வேண்டும்; அதற்காகக் குடியிருக்கும் சொந்த வீட்டை விற்றுவிடலாமா?

கல்விக்குத் தாய்மொழி; தொடர்புக்குப் பிறமொழி.

இன்று ஆங்கிலம் மட்டும் போதவில்லையே....

| | | |
|---|---|---|
| இரசிய மொழி | – | அந்நாட்டிற்குப் போக |
| செருமன் மொழி | – | அங்கு படிக்க |
| சப்பான் மொழி | – | அங்கு தொடர்பு கொள்ள |
| பிரெஞ்சு மொழி | – | அந்நாட்டைச் சுற்றிப் பார்க்கவும் |
| இத்தாலி மொழி | – | ஒரு பன்னும் தேநீரும் வாங்கவும் |
| சீன மொழி | – | அவர்களுடன் உறவாட |
| இந்தி மொழி | – | அங்குபோய்த் தொழில் செய்ய, வேலை பார்க்க. |

ஆங்கிலம் கட்டாயத் தேவையெனில், மற்றையவை விருப்பத் தேவையல்லவா?

ஆங்கிலத்தையும் மனப்பாடக் கல்வியாகக் கற்றால் போதுமா? முன்பு ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகவே கற்றவர்கள், இன்று உலகை வலம் வருகிறார்களே?

ஆங்கிலத்தை ஒரு தொடர்பு மொழியாக, பயன்பாட்டு மொழியாக, எடுத்துரைக்க ஆற்றல் தரும் மொழியாக, உரையாடல் மொழியாக, விளங்கிக் கொள்ளும் மொழியாக, அதற்கேற்ற பாடத்திட்டங்களுடன் கற்கவோ, கற்பிக்கவோ இல்லையே?

நாம் ஆங்கிலத்திலும் வல்லுநராகவில்லை; தாய்த் தமிழையும் இழந்து வருகிறோம். இரண்டும் கெட்டான் நிலையில் தமிழ்தான் கலப்பட மொழியாகச் சிதைந்து வருகிறது.

✣ ✣ ✣

# 3. வடமொழி தமிழர்க்குப் பகையா?

சமஸ்கிருதத்தை யார் பகைத்தார்கள்?

சமஸ்கிருதமா நம்முடன் பகைத்தது? அம்மொழியைக் கையில் எடுத்துக்கொண்டு, கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக, அதை நம்மீது திணிப்பவர்களே, அம்மொழியையும், அவர்களையும் நாம் பகைக்கும்படி செய்கிறார்கள்!

தமிழில் வழிபட்டால், அருச்சித்தால் தவறாம்; கடவுள் ஒப்பமாட்டாராம்.

அருச்சனைத் தட்டைக் கையிலேந்தி, தமிழில் காணிக்கை கேட்கிறாயே; வெட்கமாக இல்லையா?

உனக்கும் எனக்கும் புரியும் மொழி கடவுளுக்குப் புரியாதா?

பிராமணாள் கிளப்பை; தந்தை பெரியார் தார்பூசி அழித்தார். இன்று அத்தனை கிளப்பும் – சாதிப் பெயரைக் கிளப்பிவிட்டனவே?

அங்கு தொழில் செய்தவர்கள் – சமையல் வேலையை விட்டுவிட்டு சட்டம் படித்து, கணினி கற்று, மேலாண்மைக் கல்வி பயின்று – மேலே மேலே முன்னேறிவிட்டார்களே! அஃதே போல, சமஸ்கிருதத்தைக் காட்டி, பகையை வளர்க்காமல் வெளியேறிவிடுங்கள். எங்களை உள்ளே விடுங்கள்! இறைவனுடன் மனங்கலந்து பாடித்தொழுது அருச்சித்து, நாங்கள் இறையருள் பெற வழிவிடுங்கள்!

எங்களுக்கு இனி 'இறைத் தரகர்கள்' வேண்டாம் என்று, பக்தர்கள் சொல்கிறார்கள்!

கோயில்களைப் பக்தி வாணிகக் கூடாரம் ஆக்காதீர் என்று சான்றோர்கள் புகல்கின்றனர்!

உண்மையை உணருங்கள்! மனச்சான்றைக் கேளுங்கள்! இறையன்பிலேயே, இடையூறு செய்து, இடையிலே நின்று தடுப்பது கொடிய பாவம்!

மூச்சுவிட, பசித்ததும் சாப்பிட, அயர்ச்சி ஏற்பட்டால் உறங்க – ஆகம விதிகள் தேடுவார் இல்லை. பக்தியும் அது போன்றதே!

நாம் கடைப்பிடிக்கும் நல்லனவே இன்று ஆகம விதிகளாகட்டும்! 'ஆகமம்' என்ற பூச்சாண்டி காட்டியது போதும்! புறப்படுங்கள்! முன்னேற்றம் காத்திருக்கிறது!

✣ ✣ ✣

## 4. தமிழைத் தெரிந்து கொள்வோம்!

ஒவ்வொரு தமிழனும் தமிழின் அடிப்படைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தாய்மொழி தமிழைப் பற்றி, அறவே தெரியாதவன் முழுமைத் தமிழனாக இயலாது.

நாமும் தமிழைத் தெரிந்து கொள்வோம்; ஏழை எளிய மக்களுக்கும், வண்டி இழுப்போர்க்கும், சுமை தூக்குவோர்க்கும், தானி (ஆட்டோ) ஒட்டுநர் முதல் மகிழுந்து ஒட்டுநர் வரை அனைவருக்கும் ஓரளவாவது தமிழைப் பற்றி அறிமுகப்படுத்துவோம். தமிழை இன்று அழித்துவருபவர்களை – தமிழ்ப் பகையை இனங்காட்டுவோம்!

இன்றைய உடனடித் தேவை தமிழராகப் பிறந்த அனைவருக்கும் தமிழ் உறவையும் பகையையும் பிரித்துக் காட்டுவதேயாகும்.

ஆங்கிலம் கற்பதாகச் சொல்லி, அதிலும் முழுமை பெறமாட்டாமல், தமிழும் தெரியாமல் ஒரு கலப்பட மொழி மிக விரைவாகத் தொற்றுநோய் போல் பரவி வருகிறது. இந்நோய்க்கு மருந்து தேடியாக வேண்டும்.

தாய்மொழியைக் கற்றுத் தாய்மொழி மூலம் பிறமொழி கற்பதே நெறிமுறை. தமிழைக் கற்று, தமிழ் மூலம் ஆங்கிலம் கற்றால்தான் அது விளங்கும்; மனத்தில் தங்கும்!

முதலில் தாய்த் தமிழைக் கற்றுக்கொடு; பிறகு தொடர்பு மொழியைக் கற்றுக்கொடு! தாய்க்கும் வேலைக்கு வந்தவளுக்கும் வேறுபாடு தெரியாது, தவிக்காதே!

**தமிழில் பேசு! தமிழிலேயே பேசு! தமிழில் தொடங்கினால், தமிழிலேயே முழுவதும் பேசு!**

**ஆங்கிலம் பேசு! ஆங்கிலத்திலேயே பேசு! ஆங்கிலத்தில் தொடங்கினால், முழுவதும் ஆங்கிலத்திலேயே பேசு!**

**இரண்டையும் கலந்து பேசி, இரண்டிலும் தெளிவாகக் கூச்சமின்றி, சரளமாகப் பேசுந்திறனை இழக்காதே! இரண்டையும் கலந்து பேசி, தாய்மொழியையும் சிதைக்காதே!**

உரிமைக்குத் தமிழ்! உறவுக்கு ஆங்கிலம்!

விளங்கிக்கொள்; விளங்காமற் போகாதே!

வீண் பகையை வளர்க்காதே!

# தமிழ்

தமிழ் – இனிய மொழி, இயற்கை மொழி.

தமிழ் – பண்பட்ட மொழி; இளமை மாறாத மொழி

தமிழ் – தமிழ் நம் தாய் மொழி மட்டுமன்று; உலகத் தாய்மொழி

தமிழ் – யாராலும் சிதைக்க அழிக்க முடியாத வலுவான அமைப்புடைய மொழி!

தமிழன் – முதுகெலும்பு வளைந்த கோழை.

மூளைச் சலவை செய்யப்பட்ட பேதை.

தாகூர் சொன்னதுபோலத் தன்னலம் தேடும் ஆசை மிக்கவன்.

யாருக்கும் எதற்கும் இடம் கொடுத்துவிட்டு, அவர்களின் கால்பிடித்து வாழ்ந்தாலும் அதுவே போதுமென எண்ணுபவன்.

மானம் பற்றிப் பேசியே மானம் இழப்பவன்.

தமிழை வளர்ப்பதாகப் பேசியே அதை அழிப்பவன்.

தமிழனைப் போல் தாழ்வுமனப்பான்மை உள்ளவனை, அடிமைப் புத்தி உள்ளவனை, எதிரிக்கு எளிதில் ஏமாறுபவனை, தங்களுக்குள்ளேயே ஒருவனை ஒருவன் காட்டிக் கொடுப்பவனை, தங்களில் ஒருவனை மதிக்க மறுத்து, ஊரானை மதித்து ஊட்டி வளர்ப்பவனை உலகில் எங்கும் காணுதல் இயலாது.

**தமிழ்மொழி முப்பது எழுத்துக்களை மட்டுமே கொண்டது.**

உயிர் பன்னிரண்டு: அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

மெய் பதினெட்டு : க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

ஃ – ஆய்தம் மென்மை குறிக்க வந்த குறியீடாய்த் தோன்றி, மிகச் சில சொற்களால் எழுத்தாந்தன்மை பெற்றது.

ஆய்தமும் ஏனைய சார்பெழுத்துக்களும் தனி எழுத்துக்களல்ல; மொழியிடையே வரும் எழுத்துக்கள். உயிர்மெய்யெழுத்துக்கள் 216. உயிர் 12, மெய் 18 சேர்ந்து, 216 உயிர்மெய் வடிவங்கள் தோன்றின. அவை தனி எழுத்துக்களல்ல; எழுத்து வடிவங்கள்.

ஆங்கிலத்தில் KA என்பதை, தமிழில் 'க' என எழுதிவிட வாய்ப்புள்ளது. எனவே உயிர்மெய் வடிவங்கள் தமிழுக்குக் கிடைத்த பேறு எனலாம்.

ஆங்கில எழுத்துக்கள் 26 என்றால், தமிழ் எழுத்துக்கள் 30 மட்டுமே. ஆங்கிலத்தில் உயிரும் மெய்யும் சேர்வதை, ஒரே எழுத்தால் எழுத இயலாது. தமிழில் ஒரே எழுத்தாக எழுத, நம் முன்னோர் கண்ட, வரிவடிவங்களே 216 உயிர்மெய்கள்.

உயிரும் மெய்யும் தனியே நிற்கும் எழுத்துக்கள்; சார்பெழுத்துக்கள், சொற்களிடையே வருவன. தத்தம் முதலெழுத்துக்களையும், தாம் இடம் பெறும் சொற்களையும் சார்ந்து வருவன. சில நீண்டு ஒலிக்கும். அவை அளபெடைகள்; சில குறுகி ஒலிக்கும். அவை குறுக்கங்கள்.

சார்பெழுத்துக்களில், மென்மை ஒலி இணைப்பாக வரும் ஆய்தம் தவிர, குற்றியலுகரமும், குற்றியலிகரமும் முக்கியமானவை.

நாம் அடிப்படையில் தெரிந்து கொள்ள வேண்டியது: தமிழ் எழுத்துக்கள் முப்பது என்பதே.

பிற யாவும் மொழியிடையே வரும்போது, ஒலிப்பு வேறுபாடும், சிலபோது பொருள் வேறுபாடும் தருபவை. ஆங்கிலத்தில் எழுத்து இருபத்தாறுதான் என்றாலும் அவை ஒலிப்பு வேறுபாட்டால், நூற்றுக்கணக்காக மாறுவன.

தமிழை க + ட + ல் என எழுத்துக் கூட்டினால் சொல் வந்துவிடும். ஆங்கிலத்தில் எழுத்துக் கூட்டல்படி உச்சரிப்பு வராது. But என்பதை, புட் என்று சொல்லாமல் 'பட்' என்று சொல்ல வேண்டும்.

ஆங்கிலத்தில் ஒலிப்புமுறை கடினம்; தமிழில் புணர்ச்சிமுறை (சொற்கூட்டுப் புணர் மொழிகள்) கடினம்.

ஒவ்வொரு மொழிக்கும் அவ்வவற்றிற்கு ஏற்ப தனித்தனி இயல்புகள் உண்டு. மனிதர்களைப் போல அவை குறைகளல்ல; தனி இயல்புகள் என அறிதல் வேண்டும்.

## இலக்கணம் எதற்காக?

ஆழமான தமிழ் இலக்கணமெல்லாம் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படட்டும்; மொழியியல் வல்லுநர்கட்குப் பயன்படட்டும்.

ஆம்! நம் நெஞ்சில் நிலைபெற வேண்டியது எது? தமிழின் இயல்பு, தமிழின் தனிப்பண்பு, தனிச்சிறப்பு! இவற்றைத் தெரிந்துகொண்டாற் போதும்.

## இலக்கணம் வாழ்க்கைக்கா? அல்லது மொழிக்கா?

இலக்கணம் வாழ்க்கைக்கு நிறையப் பயன்படுகிறது. எங்கே பயன்படுகிறது என்றா கேட்கிறீர்கள்? இந்நூலைப் படிக்கப் படிக்க அது புலனாகும்.

## மொழியின் இயல்பு என்பது என்ன?

ஆங்கிலத்தின் ஒலிப்பு முறையில் பல இடர்ப்பாடுகள் உள. ஒரே எழுத்துப் பல ஒலிப்புக்களைப் பெறுகிறது. Cut என்பதில் U அகர ஒலிப்புப் பெறுகிறது; Put என்பதில் U உகர ஒலிப்பைத் தருகிறது. dupe, duty - ஊகார ஒலி.

'A' என்பது அ, ஆ, ஏ என இவ்வாறு ஒலிப்பு வேறுபடுமிடங்கள் பலவாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| Adult | – | 'அடல்ட்' | – | 'அ' ஒலி |
| Tall | – | 'டால்' | – | 'ஆ' ஒலி |
| Van | – | 'வேன்' | – | 'ஏ' போன்ற சாய்வொலி |

இதனால் ஆங்கிலத்தில் சொற்களைக் கற்றால் போதாது; சொற்களின் ஒலிப்பு முறையையும் உடன் கற்க வேண்டும். அதனால் பெரிய ஆங்கில அகராதிகள் எல்லாம் இவ்வொலிப்பு முறையையும் உடன் தருகின்றன. இஃது ஆங்கில மொழியின் இயல்புகளுள் ஒன்று; இதனை ஆங்கில மொழியின் குறை என்று கூறுதல் இயலாது.

## ஒலி வேறுபாடும் பொருள் வேறுபாடும்

தமிழில் எழுத்துக்கள் தனித்துவரினும் மொழியிடையேவரினும் ஒரே ஒலிப்புடையவை. தமிழ் எழுத்துக்களை ஒலிக்கப் பழகிவிட்டாற் போதும்; சொற்களைக் கூட்டி ஒலித்துவிடலாம். சில மெய்யெழுத்துக்கள் மட்டும் ஒலிப்பு வேறுபாட்டைக் காட்டுகின்றன; ஆனால் அங்கும் ஒலி வேறுபாட்டிற்காகப் பொருள் வேறுபாடு தோன்றுவதில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடல் | - | Katal | – | K | ஒலிப்பு |
| அகம் | - | Aham | – | H | ஒலிப்பு |
| தங்கம் | - | Thangam | – | G | ஒலிப்பு |
| பக்கம் | - | Pakkam | – | KK | ஒலிப்பு |

வடமொழியில் ஒலிவேறுபாட்டினால் பொருள் வேறுபடும். தமிழில் ஒலிப்பு வேறுபாடு மட்டுமே காலப்போக்கில் விளைந்துள்ளது.

**மொழியின் இயல்புகள் காலந்தொறும் வழிவழியாகப் போற்றப்படுகின்றன. அவற்றின் நிறைகுறைகளை யாரும் ஆராய்வதில்லை. கண்ணை மூடிக்கொண்டு அவை பின்பற்றப்படுகின்றன.**

## இடையுருபுகளைக்கூட மாற்றவே இயலாது

ஆங்கிலத்தில் சில இடைச்சொல் உருபுகள் வினைப்பொருளை வேறுபடுத்துகின்றன: வினை அல்லது வினைப்பெயருடன் கூடிக் குறிப்பிட்ட பொருளைத் தருகின்றன. குறிப்பிட்ட வகைப்பெயர்களுடன் முடிகின்றன.

| | | |
|---|---|---|
| Referred to the manager | – | மேலாளரிடம் அனுப்பிப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. |
| Suffering from fever | – | காய்ச்சலால் துன்புறல் |
| Entrusted with me | – | என்னிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டது. |
| In front of the house | – | வீட்டின் முன்னர் |

இவற்றை மாற்ற யாரும் ஒப்புவதில்லை. suffering from fever என்பது காய்ச்சலால் துன்புறுகிறேன் என்றாகும்; அதைவிட suffering by fever என்றால் பொருந்தும். இங்ஙனம் விவாதிக்க இடம் தருவதே இல்லை. விடுமுறைக் கடிதம் எழுதுவதானால், As I am suffering from fever என்றோ, As I am suffering from stomack-ache என்றோதான் எழுத வேண்டும். by, with என வேறு இடையுருபுகளைப் போடுதல் இயலாது; கூடாது.

மேலும் இவ்விடைச் சொல்லுருபுகளை மாற்றுவதால் பொருள் வேறுபடுவதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| carry on | – | தொடர்ந்து செய் |
| carry off | – | துன்பச் சூழலிலிருந்து வெற்றிபெறு |
| carry through | – | முழுவதும் நிறைவேற்று |
| carry away | – | தற்கட்டுப்பாட்டை இழ, ஒன்றால் ஈர்க்கப்பட்டுத் தன்னை மற |

## தனிமனிதனும் மொழிமரபும்

எனவேதான் முன்னோர் வழியைப் பின்பற்ற வேண்டியுளது. இவையெல்லாம் ஒரு மொழியின் இயல்புகள் ஒருவருடைய இயல்புகளை அவருடன் நெருங்கிப் பழகித்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அதுபோல ஒரு மொழியின்இயல்புகளை அம்மொழியுடனும் இலக்கியத்துடனும் 'நெருங்கிப் பழகித்தான்' தெரிந்துகொள்ள முடியும். நாம் நினைக்கிறபடியெல்லாம் ஒரு மொழியின் இயல்பை மாற்றவோ, வேறுபடுத்தவோ முடியாது. அதனை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை.

பவணந்தி முனிவர் தம் நன்னூலில் சொல் மரபு பற்றிப் பேச வந்தவர் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்:

> எப்பொருள் எச்சொலின் எவ்வாறு யர்ந்தோர்
> செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. (388)

இஃது உலகமொழிகள் அனைத்திற்கும் பொருந்தும் பொது உண்மையாகும்.

ஒரு மொழியின் இயல்பு அது தோன்றிய நாட்டிற்கும் பூகோளத்திற்கும் தட்ப வெப்பத்திற்கும் ஏற்ப அமைகிறது.

ஒரு மொழியின் இயல்பு அது தோன்றிய மக்கட் சமுதாயத்திற்கும் அதன் பழக்க வழக்கம் நாகரிகம் பண்பாட்டிற்கும் ஏற்ப அமைகிறது.

**மொழியின் வழியில் தனிமனிதன் செல்லலாமே தவிரத் தனிமனிதனால் மொழியின் இயல்பை மாற்ற முடியாது.** ஒரு மொழியின் சிறுசிறு மாற்றங்களைப் புகுத்துவது வேறு; மொழியின் இயல்பை மாற்றுவதென்பது வேறு. இயல்பை மாற்றவே முடியாது. மொழியின் இயல்பு என்பது மொழியின் மரபாகும்.

✣ ✣ ✣

# 5. வாக்கிய அமைப்பின் அடிப்படை

## பேச்சு, உரையாடல், வினா வகைகள், விடை வகைகள், வணிகத்துறையில் ஒரு மரபு

### உரையாடலும் உரைநடையும்

உலகில் மனிதன் பிறந்து பேசப் பழகிய நாள் தொடங்கி ஒருவனுடன் ஒருவன் உரையாடத்தானே மொழி பயன்படுகிறது? உரையாடல்கள் கேள்வியாகவும் பதிலாகவும்தான் அமைகின்றன. எனவே மொழிவடிவம் உரையாடல்களின் வடிவாகவே பெரிதும் காணப்படுகிறது.

உரைநடையமைப்பே இந்த உரையாடல் மரபிலிருந்துதான் பிறந்தது.

மனிதன் முதலில் உரைத்தொடர்களாகவே சிந்தித்தான்; பேசினான். பின்னர் அத்தொடர்களிலிருந்து சொற்கள் பிரித்தெடுத்து ஆராயப்பட்டன என்பது மொழிநூலார் கருத்துக்களுள் ஒன்று.

### உரையாடலும் வாக்கிய அமைப்பும்

எழுத்து வடிவம் தோன்றுமுன் மொழி பேச்சு வடிவமாக இருந்தபொழுது, இந்த உரையாடல்கள்தான் அதன் வாக்கிய அமைப்பையும் இலக்கணத்தையும் தீர்மானிக்கும் அடிப்படைகளாக இருந்தன.

### நூல்களும் வினா–விடை வடிவமும்

அன்று ஏடுகளை வைத்துப் படித்த பொழுதும், ஒன்றிரண்டு ஏடுகளே கைவசம் இருந்ததால் பெரும்பாலும் வினா–விடை வடிவமாகவே நம் நூல்கள் கற்கப்பட்டன. மாணவன் கேள்விகேட்க, ஆசிரியர் விடைகூற இவ்வாறே வகுப்புகள் வாய்மொழி வடிவமாக நடைபெற்றன.

திருக்குறளில் வினாவடிவத் திருக்குறள்களும் வினாவிடை வடிவத் திருக்குறள்களும் பலவாகும்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும். (71)

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (219)

என்ற திருக்குறள் பாக்கள் வினாவிடை வடிவிலே உண்மையுணர்த்தும் மரபு கருதத்தக்கது.

''இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் – என்பது நுதலிற்று'' என்றிவ்வாறு நம் உரையாசிரியர்கள் எழுதுவர். அதிலுள்ள கேள்விபதில் வடிவம் மனங்கொளத் தக்கதாகும். **''உலகத்துப் பொருள் உணர்த்தும் சொல்எல்லாம் வினாவும் செப்புமாகிய இரண்டின்மேல் நிகழும்''** என்பது இலக்கணம்.

**வினா, கேள்வி** ஒருபொருட் சொற்கள்.

**விடை, இறை, செப்பு, மாற்றம்** ஒரு பொருட் சொற்கள்.

நம் இலக்கணிகள் வினா பற்றியும் விடை பற்றியும் நிறையச் சிந்தித்துள்ளனர். அவற்றின் தொடர்பான அனைத்தும் நாமும் சிந்தித்தற்கு உரியவை.

## வினா வகைகள்

வகுப்புக்கு ஆசிரியர் வருகிறார். மாணவன் ''ஐயா 'இறை' என்றால் என்ன?'' என்று கேட்கிறான்.

ஆசிரியர் அவனிடம் 'தம்பி! இறை, இரை இவற்றுக்கு வேறுபாடு தெரியுமா?' என்று வினவுகிறார்.

'ஐயா! இறை என்றால் இறைவனா அல்லது விடை கூறலா?' என்று மாணவன் மீண்டும் கேட்கிறான்.

முதலில் மாணவன் கேட்டது **அறியான் வினா.** இரண்டாவதாக ஆசிரியர் தாம் தெரிந்து வைத்திருந்தும் மாணவனுக்குத் தெரிகிறதா என்பதை அறியக்கேட்டது '**அறிவினா**'. இறுதியில் இருப்பது மாணவனின் '**ஐயவினா**'.

'இறை என்ற சொல் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? இறு என்ற அடிச்சொல்லுக்குத் தங்குதல் என்பது ஒரு பொருள்; விடை கூறுதல் என்பது பிறிதொரு பொருள். வேறு என்ன பொருள்?' என ஓர் ஆய்வாளர் கேட்டால் அஃது **அறிவினாவில்** அடங்கும். வேறு பொருள் உண்டா என்பதை அறிவதற்கும் தாம் அறிந்ததை விளக்குவதற்கும் அவர் அவ்வாறு கேட்கிறார்.

பெரும்பாலும் கேள்விகள் இந்த **மூன்றில்** அடங்கிவிடும். சிலர் மேலும் மூன்று வகை சுட்டுவார்கள்.

''ஏண்டா, உனக்குப் பனியன் இல்லையா?'' என்று தந்தை மகனிடம் கேட்டால், வாங்கித்தரக் கேட்கிறார் என்று பொருள். இதனைக் '**கொடைவினா**' என்றார்கள்.

ஒரு கடையில் போய் 'எட்டுமுழம், நான்குமுழம் இருக்கின்றனவா?' என்று வினவினால், வாங்குவதற்காகத்தானே கேட்கிறோம். இதனைக் '**கொளல்வினா**' என்றார்கள்.

இரயிலில் ஒருவர் மேலே படுத்திருப்பவரிடம் 'உங்களுக்கு விளக்கு வேண்டுமா?' என்று கேட்பது, 'வேண்டாவிட்டால் அணைத்து விடுங்கள்' என்று ஏவுவதாகும். தந்தை மகனிடம் 'தம்பி நான் சொல்வதைக் கேட்கமாட்டாயா?' என்பதும் 'கேட்டு நட' என ஏவுவதாகும். இவற்றை **'ஏவல்வினா'** என்பார்கள்.

பிற்கூறிய மூன்றும் ஒருவகையில் முன்னைய மூன்றில் அடங்குமாயினும், தெளிவு கருதித் தனியே கூறியுள்ளார்கள்.

**அறியான் வினா, அறிவினா, ஐயவினா, கொடைவினா, கொளல்வினா, ஏவல்வினா** என இங்ஙனம் வினாவகை ஆறு வகைப்படும்.

இவற்றுள் **அறிவினா** ஒன்றையே மூன்று வகைப்படுத்தலாம். அப்போது அறிவு மேன்மேலும் நுட்பமடைவதை உணரலாம்.

பாண்டியன் விரைவு இரயில் சென்னையைக் காலையில் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அருகிலிருப்பவரிடம் பயணம் செய்யும் ஒருவர் 'ஆறு ஐம்பதுதானே இது சேரவேண்டிய நேரம்?' என்று கேட்கிறார். அவருக்கே தெரிந்திருந்தாலும் உறுதிப்படுத்திக்கொள்ள, அடுத்தவரும் அதையேதான் தெரிந்து வைத்துள்ளாரா என்பதை அறிய அவர் அவ்வாறு கேட்கிறார். இதனை **'அறிவொப்புக் காண்டல்'** என்பர். 'மடையன் என்றால் சமையற்காரன் என்பதுதானே பொருள். முட்டாள் என்றாகாதே' என ஓராய்வாளன் மற்றவனைக் கேட்டால் அதுவும் தான் நினைப்பது சரியா என 'அறிவொப்புக் காண்டல்' ஆகும். இஃது அறிவினாவிலும் அடங்கும். தான் அறிந்து கொண்டதை ஒப்பிட்டுப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளுதல் இதன் கருத்தாகும்.

''தம்பி, இந்த இடம்தானே விளக்குத்தூண்!'' என்று மதுரைக்குப் புதியவர் கேட்டால், தெரிந்தவனிடமிருந்து ஒன்றைக் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்வதாகும். இதனை **'அவன் அறிவு தான் கோடல்'** என்பர். இஃதும் அறிவினாவில் அடங்கும். தான் அரைகுறையாக உணர்வதை வெளிப்படக் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்வது இது. ''இச்சூத்திரத்திற்கு நீங்கள் என்ன பொருள் கருதுகிறீர்கள்?'' என்று கேட்டால், தான் அறிந்த பொருளுக்கு மேலும் விளக்கம் தேடுகிறார் அவர் என்பது கருத்தாகும். 'இந்தப் பாட்டிற்கு உனக்குப் பொருள் தெரியுமா?' என ஆசிரியர் தொடங்கினால் **'மெய்யவற்குக் காட்டல்'** கருதி மாணவனை வினவுகிறார் எனக் கொள்ள வேண்டும். ''இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின்....'' என்று தொடங்கும் உரையாசிரியர் மரபும் மெய்யவற்குக் காட்டலில் அடங்கும்.

பிறரிடமிருந்து உண்மையை அறியவும் நம்மிடம் உள்ள உண்மையை உறுதிப்படுத்திக் கொள்ளவும் நாம் அறிந்து வைத்திருப்பது பொருத்தந்தானா என்று அறிஞன் ஒருவனிடம் கேட்டு அறிவொப்புமையை அறியவும் கேட்கும் இவையெல்லாம் சிறப்பாக **ஆராய்ச்சியாளர்களின் வினா வகைகளாகும்.**

## விடை வகைகள்

விடை வகைகளைப் பற்றியும், நம் இலக்கணிகள் மிக நுட்பமாகச் சிந்தித்துள்ளார்கள். உலகில் எப்படியெப்படி எல்லாம் சதுரப்பாட்டுடன் பொடிவைத்துப் பேசிக் கொள்கிறார்கள். சண்டை அடித்துக் கொள்ளும் பொழுது எவ்வாறெல்லாம் கேட்கிற கேள்விகளுக்கு விடைகூறி அடித்துப் பேசுகிறார்கள். நீதிமன்றத்தில் வழக்குரைஞர் தொடுக்கும் வினாக்களும் குற்றவாளியும் சாட்சிகளும் அளிக்கும் விடைகளும் எவ்வளவு நுட்பமாய் அமைகின்றன. அவர்கள் என்ன இலக்கணம் கற்றுவிட்டா உரையாடுகிறார்கள். வாழ்க்கைப் பிரச்சினைஅல்லவா? உயிர்ச்சிக்கல் அல்லவா? மான அவமானப் போரல்லவா? திட்பமும் நுட்பமும் ஓடிவருகின்றன.

எட்டுவகை விடைகளைப் பற்றி இலக்கணிகள் கூறியுள்ளார்கள். எனினும் அவை இரண்டில் அடங்கும்; **செவ்வன் இறை, இறை பயப்பது** என்பன அவை.

**செவ்வன் இறை** – நேரே விடைகூறுவது; பதில் வெளிப்படையாக இருக்கும்.

**இறை பயப்பது** – சுற்றி வளைத்து விடை கூறுவது: பதில் உட்பொருளாகவும் மறைமுகமாகவும் இருக்கும்.

உட்பொருள் விடைகள்தான் அதிகம்.

## விடை வகைகள் எட்டு

'மதுரைக்கு வழி எது?' – 'இதோ, இந்த வழி!' சுட்டு விடை எனப்படும். இஃது ஒன்றைச் சுட்டிக்காட்டிக் கூறுவது.

'பள்ளிக்கூடம் போகமாட்டாயா? – போகமாட்டேன்'. **மறைவிடை** எனப்படும் இஃது எதிர்மறையாகும்.

'பள்ளிக்கூடம் போகமாட்டாயா?' – 'போவேன்'. **நேர்விடை** எனப்படும் இஃது உடம்படுதலாகும்.

இவை மூன்றும் செவ்வன் இறை – நேர்முக விடையில் அடங்கும். இனி மறைமுக விடைகளைக் (இறை பயப்பன) காண்போம்.

'ஒழுங்காகப் படிக்கமாட்டாயா?' – 'நீ வாயை மூடு'.

'அது பற்றி எனக்குத் தெரியும் நீ தலையிடாதே' என்னும் கருத்துள்ள இஃது **ஏவல்விடை** எனப்படும்.

'ஏன் இன்னும் சாப்பிடவில்லையா?' –

'நான் என்ன, விரதமா?'

'நான் ஒன்றும் விரதமில்லை, இனிமேல் சாப்பிடுவேன்' என்பதை உணர்த்தும் இது **வினாஎதிர் வினாதல்.**

'இந்தத் தடவை தேர்வு எழுதவில்லையா? – போன மாதம் என் அம்மா இறந்துவிட்டார்கள்.''

இதனை **'உற்றதுரைத்தல்'** என்பார்கள். 'ஏன் சாப்பிடவில்லை?' என்பதற்கு 'வாந்தி வரும்போல் இருக்கிறது' என்று விடை வரின் அஃதும் உற்றதை உரைப்பதுதான்.

'ஏன் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளவில்லை?'

– கால் சுளுக்கிக் கொள்ளும்'

'ஏன் உணவுண்ணவில்லை'

– வயிறு வலிக்கும்,'

இவை **'உறுவது கூறல்'** எனப்படும்.

'எம்.ஏ. படிக்கப் போகிறாயா?'

'எம்.எஸ்சி. படிக்கப் போகிறேன்'

'மதுரைக்குப் போகிறாயா?'

– திருச்சிக்குப் போகிறேன்

இவை **இனமொழி விடை** எனப்படும்.

**இங்ஙனம் சுட்டு, எதிர்மறை, நேர்விடை (உடன்பாடு), ஏவல் விடை, வினா எதிர் வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என விடை எட்டு வகைப்படும்.**

## இரண்டு விடை வகைகள்

மேலும் நுட்பமாகச் **'சொல் தொகுத்து இறுத்தல்'** (சொல்ல வேண்டிய சொல்லை விட்டுவிட்டுப் பிறிதொன்றைக் கூறுதல்) **'சொல்லாது இறுத்தல்'** (கேட்காமலேயே விடை கூறுதல்) என்றும் இரண்டு வகை கூறுவர்.

'சொல் தொகுத்து இறுத்தல்' முற்கூறிய இனமொழியில் அடங்கும். 'கடைக்குப் போகிறாயா?' என்று வினவியவருக்குக் 'கல்லூரிக்குப் போகிறேன்' என விடையிறுத்தால் கடைக்குப் போகவில்லை என்பது அச் சொல்லைக் கூறாமலே உணர்த்தப்படுகிறதல்லவா?

'திருப்பணிக்கு நிதி திரட்டுகிறோம். நன்கொடை தாருங்கள்'

'கல்லூரிக்குக் கரும்பலகைகள் வேண்டும். அன்பளிப்புத் தருக'

இவை ஒருவர் வினவாமலே கூறும் கூற்றுக்கள். எனவே **'சொல்லாது இறுத்தல்'** என்றனர்.

இவ் வினா வகைகளையும் விடை வகைகளையும் படிக்கப் படிக்க அறிவாராய்ச்சி பெருகும். ஏதேனும் ஒன்றை வினாவாகக் கேட்டுக்கொண்டு, விடையிறுப்பதிலேதான் ஆராய்ச்சியே தொடங்குகிறது.

## இன்றைய வளர்ச்சி

இன்றைய இதழ்களைப் புரட்டுங்கள்; 'கேள்வி பதில்' இல்லாத இதழே கிடையாது எனலாம். நாடக நூல்களைப் புரட்டுங்கள்; எத்தனையோ வினா–விடைகள். கதை நூல்களிலும் இடையிடையே வினா–விடைகள் மிகுதியாக விரவிவரக் காணலாம். இவற்றையெல்லாம் எடுத்துத் தொகுத்து மேற்கண்ட வினா வகைகளுடனும் விடை வகைகளுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால் **இந்த இலக்கணப் பாகுபாடு மொழிக்காக அன்று நமக்காக என்பது புலப்படும்.**

அறிஞர் அண்ணா அவர்களை ஒரு நிருபர் கேட்கிறார்: "மூதறிஞர் இராசாசி நீங்கள் தொடங்கும் பரிசுச் சீட்டு முறையைச் (Lottery) சூதாட்டம் என்கின்றாரே. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று. இதனை ஒருவாறு **அறிபொருள் வினாவில்** அடக்கலாம். தவறில்லை என்று கருதித்தானே அரசு அதைத் தொடங்குகிறது. அது நிருபருக்குத் தெரியாதா? எனினும் அரசியலில் இழுத்துவிடும் தந்திரவுத்தி வினாவாக இஃதுளது.

அண்ணா, "அவர் விழுமிய கோட்பாடுகளையுடைய மூதறிஞர். நாங்கள் இன்னும் அவரளவு வளரவில்லை" என்று விடையிறுத்தார். பரிசுச் சீட்டை விடமாட்டோம் என்பதுதானே விடை. இது செவ்வன் இறையன்று; இறை பயப்பதில் அடங்கும். இறை பயப்பதில் இஃது எது? ஒருவாறு உற்றதுரைத்தலில் அடக்கலாம். எனினும் நிருபரின் வலையில் அகப்படாத அரசியல் தந்திரவுத்தி இவ்விடையிலும் உளது.

பாபுராவ் என்ற அறிஞர் 'பிலிம் இந்தியா' இதழாசிரியர். அவர்தான் முதன்முதல் இதழ்களில் இவ்வினாவிடை முறையை எழுதிக்காட்டிப் பெரும்புகழ் பெற்றவர். அவரிடம் ஒருவர் கேட்டார். "ஒரு வேலையும் கிடைக்காதவன் என்ன ஆவான்" என்று. அதற்கு அவர் 'முதலாளி ஆவான்' என்று அக்காலத்தில் விடையெழுதினார். வேலை கிடைத்தவன் செக்குமாடு போல் வேலையையே சுற்றுவான்; கிடைக்காதவன் முயன்று மேலே வந்து முதலாளியாகிவிடுவான் என்பது அவர் கருத்து. இங்கு ஐயவினாவும் உறுவது கூறல் விடையும் அமைந்திருக்கக் காணலாம்.

பெர்னாட்ஷாவும் ஜி.கே. செஸ்டர்டனும் சந்தித்துக் கொண்டதாகக் கூறுவர். பெர்னாட்ஷா மிக ஒல்லியானவர்; செஸ்டர்டன் மிகப் பருமனானவர். செஸ்டர்டன் பெர்னாட்ஷாவிடம் "உங்களைப் பார்த்தால் இங்கிலாந்தில் உணவுப் பஞ்சம் வந்துவிட்டது என்றல்லவா நினைப்பார்கள்!" என்று கேட்டாராம். உடனே பெர்னாட்ஷா "ஆமாம் உங்களைப் பார்த்தால் உணவுப் பஞ்சம் ஏன் வந்தது என்ற காரணத்தையும் தெரிந்து கொள்வார்கள் அல்லவா" என்று விடையிறுத்தாராம். நகைச்சுவை மிக்க இவ்வினாவிடைகள் அறிவினா–வினா எதிர்வினாதல்விடை என்பனவற்றுள் ஒருவாறு அடக்கத்தக்கனவாகும்.

## வாய்வாளாதிருத்தல்

ஒருவர் முட்டாள்தனமாகக் கேள்வி கேட்கும்போது பேசாதிருந்து விடுதலே நல்ல பதிலாகும். இதனை 'வாய்வாளாதிருத்தல்' (வாய்

பேசாதிருத்தல்) என்பர் **தெய்வச்சிலையார்.** ''ஆகாயப் பூ நன்றோ தீதோ? என்றார்க்கு உரையாடாமை' என்பது அவர் தரும் உதாரணம். ''விடுதலைப் புலிகளுக்குத் தமிழ்நாடு புகலிடமாகுமா?'' என வினவுவார்க்கு, வாய் பேசாதிருத்தலே தக்க விடையாகும் அல்லவா? இங்ஙனம் பேசாது இருப்பதையும் விடையெனக் கூறிய திறம் அறிந்து மகிழத் தக்கதன்றோ?

## வணிக மரபு

இவ் வினாவிடைகள் பற்றி எத்தனையோ மரபுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று வாழ்க்கையோடு மிக ஒட்டியது; வணிகத் துறையில் மிகவும் பயன்படுவது.

புடைவைக் கடையில் நுழைகிறோம். 'பட்டுப்புடைவை இருக்கிறதா?' என்று கேட்கிறோம். கடைக்காரர் 'பருத்தி, வாயல், நைலான் எல்லாம் இருக்கின்றன. பாருங்கள்' என்கிறார். பட்டு இல்லை என்று நேரே கூறாமல், இருப்பதைக் கூறுகிறார். 'வாயல் அல்லது இல்லை; நைலான் அல்லது இல்லை' என்று கூறலாம். வணிக மரபு இது, இல்லாததை விட்டுவிட்டு இருப்பதைக் கூறுதல் வணிகம் வளர வழி.

'பயற்றம் பருப்பு இருக்கிறதா?' என ஒருவர் கேட்டால் 'துவரம் பருப்பு இருக்கிறது' என்றோ, 'துவரம் பருப்பல்லது பிறிதில்லை' என்றோ கூறவேண்டுமாம்! இது முன்னைய மரபு.

'பட்டுப் புடைவை இருக்கிறதா'' என ஒருவர் புடைவைக் கடையில் வந்து கேட்டால், இருக்கிற புடைவைகளைச் சுட்டிக் கூறவும் வேண்டுமாம். எவ்வாறு?

''காஞ்சிபுரம் இருக்கிறது; ஆரணி இருக்கிறது; இன்னும் மைசூர், காசிப்பட்டு எல்லாம் உள்ளன'' என்று சுட்டிச் சொல்லவும் வேண்டுமாம்.

'பயறுளதோ வணிகரே?' என்று கேட்டால், 'பயற்றம் பருப்பல்லதில்லை; பெரும்பருப்பல்லதில்லை' என்று நல்ல திறமையான வணிகன் சுட்டிக் கூறுவானாம். தேங்காய் எண்ணெய் கேட்டு வந்தால், இக்கால முறைப்படி ''கொழும்புத் தேங்காய் எண்ணெய்தான் இருக்கிறது'' என்று சுட்டிக் கூறவேண்டும். எஃது இருக்கிறதோ அதைச் சுட்டிச் சொல்ல வேண்டும். வணிகம் வளர இம்மரபு மிகவும் பயன்படும்.

இவை எல்லாம் தொல்காப்பியத்தில் கூறப்படும் செய்திகள். **வாழ்க்கையோடு ஒட்டிய செய்திகளைத்தான் இலக்கணம் பேசுகிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?** சிறந்த வணிகர்கள் இலக்கணம் கற்றுவிட்டா இவ்வாறு தம்மிடமிருப்பதை அழுத்திக் கூறுகிறார்கள்? வாணிகத்தை வளர்க்கும் மொழிநடை அவர்கட்குத் தானே வந்துவிடுகிறது.

இவ்வாறெல்லாம் பயறு இருக்கிறதா? – 'இல்லை', உளுந்து இருக்கிறதா? – 'இல்லை', துவரை இருக்கிறதா? – 'இல்லை', இல்லை, இல்லை என்பதை மட்டுமே கேட்டால் வந்தவன் இந்தக் கடையில் ஒன்றுமே இல்லை என்று போய்விடுவானல்லவா?

✣ ✣ ✣

# 6. ஆகுபெயர்

வாழ்க்கை, மொழி, இலக்கணம் மூன்றும் ஒன்றினொன்று தொடர்புடையன. இலக்கணம் மொழியைச் செவ்வனே பயன்படுத்த உதவுகிறது. அதே இலக்கணம் வாழ்க்கையில் மிகவும் பயன்படுகிறது. இங்ஙனம் நம் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுகிற இலக்கணத்தை மட்டும் தெரிந்துகொண்டாற் போதும்.

வாழ்க்கை எவ்வளவோ மாற்றங்களைக் கண்டுவிட்டது, சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள் மாதிரியா இன்று நாம் வாழ்கிறோம்? எத்தனையோ மாறுதல்கள்? இருந்தாலும் இளமைத் துடிப்பு, காதல், போர், பொறாமை, போட்டி, நட்பு என்ற அடிப்படைச் செய்திகள் பல இன்றும் ஒரே விதமாகத்தான்உள்ளன. மொழியும் பல மாறுதல்கள்கண்டு வளர்ந்து, மாறி வருகிறது. இலக்கணமும் அதுபோல் மாறவேண்டாமா? ஆம். மாறக்கூடியனவற்றை மாற்றவும், அடிப்படையானவற்றைப் போற்றவும் வேண்டும்.

## சாப்பாட்டில் ஆகுபெயர்

உணவுண்ண உட்காருகின்றோம். வறுவல், கூட்டு, சுண்டல், துவையல், அவியல் எல்லாம் வைக்கப்படுகின்றன. எல்லாமே தொழிற்பெயர்கள். அங்ஙனம் செய்யப்பட்ட கறிவகைகளை அவை குறிக்கின்றன. ‘எனக்கு வறுவல் வை’ என்றால் வறுவலாக்கப்பட்ட உருளைக்கிழங்கையோ, இறைச்சியையோ அது குறிக்கிறது.

## ஆகுபெயர் இலக்கணம்

இங்ஙனம் ஒருதொழிலின் பெயர், அச்செயலுக்குட்படுத்தப்பட்ட ஒரு பொருளைக் குறிக்கிறது. ஒரு சினையின் பெயர் முதலைக் குறிக்கிறது; முதலின் பெயர் சினையைக் குறிக்கிறது; ஓரிடத்தின் பெயர் அங்கு உற்பத்தியாகும் பொருளைக் குறிக்கிறது; அல்லது அந்த இடத்தில் இறங்க வேண்டிய பயணியைக் குறிக்கிறது. இங்ஙனம் ஒன்றன் பெயரால் அதனோடு தொடர்புடைய ஒன்றை – இயைபுடைய ஒன்றை, பொருத்தமுடைய ஒன்றைக் குறிப்பது ஆகுபெயர் எனப்படும். முன்பு சொல்லிவந்த மரபின் அடிப்படையில் இவ்வாறு குறிக்கின்றோம்.

## நடைமுறை வாழ்வில் ஆகுபெயர்கள்

‘சினிப்பிரியா, மினிப்பிரியா எல்லாம் இங்கே இறங்க வேண்டும்’ – சீட்டு எடுத்தவர்களைக் குறித்தது.

'ஐயா அனுமார்கோவில்! இறங்கு' – அந்த நிறுத்தத்திற்குச் சீட்டு எடுத்தவரைக் குறித்தது. 'வானரமுட்டி' என்ற நிறுத்தத்தில் இறங்க வேண்டியவர்களை 'வானரமெல்லாம் இறங்கு' என்று கூறும் நடத்துநர்களும் உள்ளனர்.

'வெள்ளை கொண்டு வந்தாயா!' 'சலவை கொண்டு வந்தாயா?' – உருப்படிகளைக் குறித்தது,

'காஞ்சிபுரம் என்ன விலை?' – அவ்வூரில் நெய்த பட்டைக் குறித்தது.

'தண்ணீரை இறக்கு' – தண்ணீருள்ள குடத்தைக் குறித்தது.

'பணத்தைச் சட்டையில் வை' – 'பையில் வை' என்பது பொருள்.

'தலைக்குப் பத்து ரூபாய் கொடு' – தலை ஆளைக் குறித்தது.

'உங்களுக்குப் பலா பிடிக்குமா? வாழையா? – பழத்தைக் குறித்தது.

எண்ணல், எடுத்தல் முதலிய அளவைப் பெயர்கள் எல்லாம் ஆகுபெயர்களாகவே நடைமுறையில் பேசப்படுகின்றன.

'ஒரு கிலோ கொடு' – ஒரு கிலோ அளவுள்ள தக்காளி அல்லது ஒரு பொருள்.

'நூறு கிராம் தா' – அந்த அளவுள்ள பொருள்.

நூறு வேண்டும், பதினைந்து போதும், அவன் ஐம்பத்தைந்து பெற்றுள்ளான் – தொடர்புடையவற்றைக் குறிக்கின்றன.

மனிதனுடைய உறுப்புகளின் பெயர்கள் கால், அரை என்பன ஆகுபெயர்களாய், அவ்வவ்வுறுப்புக்களைக் குறிக்கின்றன.

தொந்தி வருகிறான், நோஞ்சல் வருகிறான் – ஆடவர்களைக் குறித்தன.

## ஆகுபெயர்களின் பயன்பாடு

1) சுருங்கக் கூறுதல்
2) விரைந்து வெளிப்படுத்துதல்
3) மறைமுகமாகக் கூற விரும்புதல்
4) ஒன்றன் தன்மையை, இயைபை வெளிப்படுத்தும் சிறப்பும் பொருந்தியிருத்தல்

நூற்றுக்கு நாற்பதாவது வேண்டாமா? – நூறு மதிப்பெண்ணிற்கு நாற்பது மதிப்பெண்ணாவது வேண்டாமா? சுருங்கக் கூறுகிறது; விரைந்து கருத்து வெளிப்படுத்தப்படுகிறது; கருத்து மறைமுகமாக உளது. வறுவல், காஞ்சிபுரம் – என்ன வகையில் சமைக்கப்பட்டது; எங்கே நெய்யப்பட்டது என்ற விளக்கங்கள் கிடைக்கின்றன.

## ஆகுபெயர் வகைகள்

ஆகுபெயர்களைப் பல்வேறு வகைப்படுத்துவர். அந்த வகைகளை எல்லாம் படிப்பது இன்றியமையாததன்று. எனினும் அடிப்படையான பத்து

வகைகளைக் கீழே குறிப்பிடலாம். இவை ஆகுபெயரை மேலும் விளங்கிக்கொள்ள உதவும் என்பதாலேயே இங்கே தரப்படுகின்றன.

1. பொருளாகு பெயர் அல்லது முதலாகு பெயர் – 'பலா நன்று' (பலாப்பழத்தைக் குறிக்கும்போது) முதலின் பெயர் சினைக்கு ஆயிற்று.

2. இடவாகு பெயர் – 'ஊர் சிரித்தது' (மக்களைக் குறிக்கும்)
'காஞ்சிபுரம்' என்ன விலை? (பட்டைக் குறித்தது)
'ஆலமரம் இறங்கு' (ஆலமர நிறுத்தத்தில் இறங்க வேண்டிய பயணி)

3. காலம் – கோடை விளைந்ததா? (கோடைப் பயிராகிய நெல்)

4. சினை – 'சீட்டாட ஒரு கை குறைகிறது' (கை ஆளைக் குறித்தது)

5. குணம் – 'வெள்ளை அடித்தான்' (சுண்ணாம்பைக் குறித்தது)

6. தொழில் – 'வற்றல் தின்றான்' (உணவு)

7. அளவையாகுபெயர் எண்ணல், எடுத்தல், நீட்டல், முகத்தல் யாவுமே ஆகுபெயராகப் பயன்படுத்தப்படும் – 'ஒன்றரை மீட்டர் கொடு' (துணியைக் குறித்தது) 'ரூபாய்க்கு நான்கு கொடு' (பழத்தைச் சுட்டியது)

8. தானியாகுபெயர் – 'நெஞ்சு வலித்தது' (உடலுறுப்பைச் சுட்டியது) 'தண்ணீரை இறக்கு' (குடத்தைச் சுட்டியது)

9. கருத்தா ஆகுபெயர் – ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் படி, மில்டனைப் படித்தாயா என்பர். தமிழில் முன்பு நூலையும் தொல்காப்பியன், திருவள்ளுவன் எனக் குறித்தனர். நூல் செய்த கருத்தாவை இவை சுட்டுவன.

10. கருவியாகுபெயர் – எண்சீரா? அறுசீரா? விருத்தப்பாக்களைக் குறிக்கும்போது இவை கருவியாகு பெயர்கள்.

## ஆகுபெயரும் சொற்பொருள் வளர்ச்சியும்

சொல்லின் பொருள் வளர்ச்சியை ஆகுபெயரால் அறியலாம். புளி என்பது சுவையின் பெயர், புளியம் பழத்தைக் குறிக்கும்போது ஓர் ஆகுபெயர்; அதுவே புளிய மரத்தைக் குறிக்கும்போது ஆகுபெயரின் மேல் ஆகுபெயராகிறது. அதனை இருமடியாகு பெயர் என்பர். ஆலமரம் என்பது ஒரு கார் நிறுத்தத்திற்குப் பெயர். அஃது ஆலமரம் நிற்பதால் வந்தபெயர். இங்ஙனம் நிறுத்தத்திற்கு ஆகி, அஃது அந்நிறுத்தத்திற்குக் கொடுக்கப்படும் பயணச்சீட்டைக் குறித்துப் பிறகு அதை வாங்கியவரைக் குறிப்பது மும்மடியாகுபெயர் எனப்படும்.

நாம் இத்தகைய ஆகுபெயர்களின் மூலம் சொற்பொருள் வளர்ச்சியைக் கண்டுபிடிக்கலாம். குறுவை, குறுமை என்பன ஒருபொருட் சொற்களே, குறுவை என்பது குறுகிய காலத்தில் விளையும் நெல் வகையைக் குறிக்கிறது. குறுமை என்றால் நாம் நெல்லை நினைக்கமாட்டோம். இவ்வாறு சொற்பொருள் வளர்கிறது.

இவ்வாறு கதைகளிடையே ஆகுபெயர்கள் ஆளப்படுவதைக் கண்டுபிடிப்பது நல்ல பயிற்சியாகும்.

இன்றைய உலக நடைமுறையில் எவ்வாறெல்லாம் ஆகுபெயர்கள் ஆளப்படுகின்றன என்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள முயல வேண்டும்.

## உருவகம் வேறு, ஆகுபெயர் வேறு

'பாத மலர்' என்பது உருவகம்.

'மலர்' என்றே கூறினாலும் மலர்போன்ற பாதத்தைச் சுட்டும்போது அஃது உருவகம். கண்ணே, மணியே, உயிரே என்று காதலியைச் சிறப்பிக்கும் ஆர்வத்தில் தான் கண்ணே, மணியே என்கிறான். அதில் உவமை அடிப்படை உளது. இலக்கிய அணிநலமும் ஊடாடுகிறது.

ஒன்றன் பெயரால் அதற்கு இயைபுள்ள பிறிதைத் தொன்முறை உரைப்பன ஆகுபெயர்கள். பண்பின் பெயர் அப்பண்புடைய ஒன்றைச் சுட்டுவது. தொழிற்பெயர் அதை உடைய ஒன்றைச் சுட்டுவது என இவ்வாறு ஆகுபெயர்கள் பலவகைப்படும். அன்பு, ஆர்வம், இலக்கிய நயம் அமைவன உருவகங்களாம்; ஒன்றன் பொருள் தொடர்புடைய ஒன்றிற்காவது ஆகுபெயராம்.

✣ ✣ ✣

# 7. வேற்றுமை

வேற்றுமை வேண்டுமா? ''சாதி வேற்றுமை, சமய வேற்றுமை, எல்லாம் வேண்டாம் என்கிறீர்களே. இந்த இலக்கண வேற்றுமை மட்டும் வேண்டுமா? இந்த வேற்றுமையும் போக வேண்டும் என்று ஒரு புரட்சி இயக்கம் கொண்டுவரக்கூடாதா?'' என்று ஒரு மாணவர் வகுப்பில் ஆசிரியரைக் கேட்டார். ஆசிரியர் என்ன செய்வார்? பேசாதிருந்தார். வாய்வாளாதிருப்பதும் ஒருவகை விடைதானே?

இலக்கணத்தில் வேற்றுமையை ஒழித்துவிடலாம். ஆனால் நம் அன்றாட வாழ்வில் அது தேவைப்படும் பொழுது என்ன செய்வது?

## பேருந்து நிலையத்தில் வேற்றுமை

திருச்சி திருவள்ளுவர் பேருந்து நிலையத்தில் ஒரு பேருந்து நிற்கிறது. அதில் சென்னை–மதுரை என்று அறிவிப்புப் பலகை மாட்டப்பட்டுள்ளது. ஒருவர் அவசர அவசரமாக ஓடிவந்தவர் ''சென்னைக்குப் போகிறதா? சென்னையிலிருந்து வருகிறதா?'' என்று மூச்சிரைக்கக் கேட்கிறார். அவருக்கு இப்போது வேறுபாடு–**வேற்றுமை** தெரிந்தாக வேண்டும். சென்னைக்கு போவதானால் உடனே ஏறிக்கொள்வார். எனவே அவருக்குப் பேருந்து சென்னைக்குப் போகிறதா? (நான்காம் வேற்றுமையா) சென்னையிலிருந்து வருகிறதா (ஐந்தாம் வேற்றுமையா) என்பது தெரிந்தாக வேண்டும். இந்த வேறுபாடு–வேற்றுமை தெரியாமல் வண்டியில் ஏறிவிட்டால் நடத்துநர்க்குக் கோபம் வரும். ''மூளை இருக்கிறதா? அறிவிருக்கிறதா?'' என்றெல்லாம் அவர் கேட்பார். எனவேதான் **வேற்றுமையைத்** தெரிந்துகொண்டு, உரிய வண்டியில் ஏற அப்பயணி துடிதுடிக்கிறார்.

பெயர்ச் சொற்களின் பொருள் வேற்றுமையைக் காட்டுவது **வேற்றுமை** என்பார்கள். அது மட்டுமன்றி, நாம் உலகில் வேற்றுமை தெரிந்து வாழவும் அது உதவுகிறதல்லவா? எனவே வேற்றுமையை ஒழித்தால் வாழ்க்கையே குழப்பமாகிவிடும்.

## பத்திரம் எழுதும்போது வேற்றுமையின் பயன்பாடு

ஒரு பத்திரம் எழுதும்போது வேற்றுமைகள் இடமறிந்து பயன்படுத்தப்படுகின்றன. ஒரு வீட்டைக் 'கிரயம்' செய்து ஒருவருக்கு விற்கும்போதும் பத்திரம் எழுதும்போதும் நீங்கள் உன்னிப்பாகக் கவனித்தால் இந்த வேற்றுமைகளின் அருமை புலப்படும்.

'இன்னார் மகனாகிய யான், இன்னார்க்கு மகனாகிய இவருக்கு ஆலமரத்தின் வடக்கு அனுமார் கோயிலின் தெற்கு வளைவுச் சாலையின் கிழக்கு தேனீர்க்கடையின் மேற்கு ஆகிய நான்கு எல்லைகட்குட்பட்ட, இந்த மாவட்டம் இந்த ஊரில் பாண்டிய நகரின்கண் உள்ள **எனது வீட்டை** என் கையெழுத்திட்ட இப் பத்திரத்தினால் கிரயம் செய்து தருகிறேன்'.

இது போன்றே பத்திரங்கள் எழுதப்படுகின்றன. இதில்,

| | | |
|---|---|---|
| யான்–எழுவாய் | – | முதல் வேற்றுமை |
| வீட்டை | – | இரண்டாம் வேற்றுமை |
| இப்பத்திரத்தினால் | – | மூன்றாம் வேற்றுமை |
| இன்னார்க்கு, இவருக்கு | – | நான்காம் வேற்றுமை |
| கோயிலின் தெற்கு சாலையின் கிழக்கு முதலியன | – | ஐந்தாம் வேற்றுமை |
| எனது | – | ஆறாம் வேற்றுமை |
| பாண்டிய நகரின்கண் | – | ஏழாம் வேற்றுமை |

இவ்வாறு எழுதவில்லையென்றால் யாருக்குரியது யாருக்குப் போய்ச் சேருகிறது என்பது விளங்காது. குறிப்பிட்ட வீடுதானா என்பது தெளிவுபடாது. கடைசியில் பத்திரமே செல்லாது போய் விடலாம். எனவே வேற்றுமைகள் மிக அழுத்தமாகச் செயற்படும் இடம் விற்பனைப் பத்திரம் என்றால் மிகையாகாது. ஏன் இந்த மனிதன் இங்கே மட்டும் அத்தனை வேற்றுமைகளையும் விடமாட்டேன் என்கிறான்? யாராவது தங்கள் உடைமைகளை இழக்க விரும்புவார்களா? **மொழியில் வேற்றுமைகளை வேண்டாமென்பது நம் செல்வங்களை இழப்பதற்குச் சமம்.**

## பெயர்ப் பொருளை வேறுபடுத்தும் விதம் காண்க:

| | | |
|---|---|---|
| முருகன் வந்தான் | – | முதல் வேற்றுமை |
| முருகனைப் பார்த்தேன் | – | இரண்டாம் வேற்றுமை |
| முருகனால் நலமுற்றேன் | – | மூன்றாம் வேற்றுமை |
| முருகனுக்குக் காணிக்கை | – | நான்காம் வேற்றுமை |
| முருகனிற் சிறந்தவர் இலர் | – | ஐந்தாம் வேற்றுமை |
| முருகனது திருவருள் | – | ஆறாம் வேற்றுமை |
| முருகனிடம் தஞ்சம் புகுந்தேன் | – | ஏழாம் வேற்றுமை |
| முருகா, காப்பாற்று! | – | எட்டாம் வேற்றுமை |

முருகன் என்ற பெயரே எட்டு வகையில் பொருள் வேற்றுமை பெற்றுள்ளமையைக் காண்க. வினைச்சொல் வேற்றுமை ஏற்பதில்லை. பெயர் பொருள் வேறுபாட்டிற்கு ஏற்ப, வேற்றுமை உருபு பெற்று வரும்.

"மரத்தில் மறைந்தது மாமத யானை
மரத்தை மறைத்தது மாமத யானை"

என திருமூலர் வாக்கிலும் வேற்றுமைப்படுத்திக் காட்டும் நுட்பத்தை உணரலாம்.

## வேற்றுமைப் பொருளை நுட்பமாய் விரிக்க வேண்டும்

கம்பரது இராமாயணம், கம்பரால் எழுதப்பட்ட இராமாயணம் என்ற இரு தொடர்களில் முன்னது உடைமை சுட்டும்; பின்னது அக்காப்பியத்தை எழுதிய கருத்தா கம்பர் என்பதை உணர்த்தும். என்னிடம் உள்ள புத்தகத்தையும் நான் 'எனது இராமாயணம்' எனலாம். ஆனால் 'என்னால் எழுதப்பட்டது' என்று கூற முடியாது. எனவே, இங்ஙனம் நுட்பமாய்ப் பொருள் வேற்றுமையறிந்து, உருபுகளைப் பயன்படுத்தவும் பொருளை விரிக்கவும் வேண்டும்.

'கல்லெறிந்தான்' என்ற தொடரை எடுத்துக்கொள்வோம். அத்தொடர் வருமிடத்தையும் சூழலையும் பொறுத்து உருபுகளையும் விரித்துப் பொருளறிய வேண்டும். "தெருவில் ஓடியவன் பேருந்தில் கல்லெறிந்தான்". இவ் வாக்கியத்தில் 'கல்லை எறிந்தான்' எனச் செயப்படுபொருளாக விரிக்க வேண்டும். 'கல்லால் எறிந்தான்'. கல்லென்ற கருவியால் எறிந்தான். வேறு கருவிகளால் அன்று எனப் பொருள்படும். கல்லில் எறிந்தான். (கல்லின்கண் எறிந்தான்) என ஏழாம் வேற்றுமையாக விரிப்பின், கல்லின்மேல் எதனையோ எறிந்தான் என்றாகும். கல்லிற்கு எறிந்தான், கல்லின் எறிந்தான் என்று நான்கு, ஐந்தாம் வேற்றுமைகளாக விரிப்பின் வலிந்து விரிப்பதாகும்.

பெயரின் பொருள் அச்சொல் வருமிடத்திற்கு ஏற்ப வேறுபடுகிறது. அங்ஙனம் பொருள் வேறுபடுவதைக் காட்ட ஏதேனும் ஓர் உருபு வருகிறது. காலப்போக்கில் சாரியைகளே வேற்றுமையுருபின் வேலையைச் செய்தன; சொல்லுருபுகள் வந்து, உருபுகளுக்குப் பதிலாக நின்றன. சில சமயங்களில் உருபுகள் மாறி வருவதும் உண்டு. அதனை உருபுமயக்கம் என்பர். ஆங்கிலத்திற்போல் வேற்றுமையுருபுகளை ஆள்வதில், மிகுந்த வரன்முறைகளைத் தமிழில் பின்பற்றவில்லை. எனினும், வேற்றுமையுருபுகளை நுட்பமாக ஆளுமிடங்களும் விரிக்குமிடங்களும் உள.

## தலைமை உருபுகள்

முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் தனிஉருபுகள் இல்லை. எனவே அவற்றை வேற்றுமை அல்லாத அல்வழியிலும் சேர்ப்பார்கள். தொல்காப்பியர்,

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெயர், | ஐ, | ஒடு, | கு, | இன், | அது, | கண், | விளி | என்பார். |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7· | 8 | |

## துணை உருபுகள், சொல்லுருபுகள்

பெயரின் பொருள் வேற்றுமையைக் காட்டுவதற்கே உருபுகள் பயன்படுகின்றன. காலப்போக்கில் உருபுகள் பலவாயின, சாரியைகள்

பயன்படுத்தப்பட்டன. இன்று சொல்லுருபுகளைப் பயன்படுத்துவதே பெரிதும் பேச்சு வழக்கிலுள்ளது. அதனால் எழுத்து–வழக்கிலும் சொல்லுருபுகள் மிகுந்து காணப்படுகிறது.

'மலையின் வீழ் அருவி' என்றால் இன்று பலருக்கும் விளங்காது, காலப்போக்கில் 'இன்' உருபு 'இல்' உருபாக மாறியது. 'மலையில் விழும் அருவி' என்றால் எளிமையாய்த் தெரிகிறது. இன்னும் மலையிலிருந்து விழும் அருவி என்பதே இன்று பெருவழக்காகும். 'இருந்து' என்பது ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு.

வாளான் வெட்டினான்
வாளால் வெட்டினான்

முன்னையது பழையது; பின்னையது புதியது. இன்று வாள் கொண்டு வெட்டினான், வாளைக்கொண்டு வெட்டினான், வாளை வைத்து வெட்டினான் என்றிவ்வாறு சொல்லுருபுகள் பயன்படுகின்றன.

'கண்' என்பது ஏழாம் வேற்றுமை உருபு. மரத்தின்கட் காக்கை, பரணின்கண் விறகு, முற்றத்தின்கண் விளக்கு, விரலின்கண் வீக்கம் என்று இன்று பேசுவதில்லை.

மரத்திலே காக்கை
பரணிமேலே விறகு
விரலில் வீக்கம்

என்றுதான் பயன்படுத்துகிறோம். கண், மேல், இல் என்பன போன்ற இடப்பொருளை உணர்த்தும் எல்லாச் சொற்களும் ஏழாம் வேற்றுமை உருபுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பழைய இலக்கண மரபுப்படி இராமனுக்குத் தம்பி, கண்ணனுக்கு அண்ணன் என்றிவ்வாறு வரவேண்டும். இன்னும் தென்தமிழ்நாட்டில் நாகர்கோயில் பகுதியில் பாண்டிக்குத் தம்பி, இராமனுக்கு அண்ணன் என்றே பேசுவர். ஆனால் இன்று இராமனின் தம்பி, கண்ணனின் அண்ணன் என்று 'இன்' சாரியைதான் பயன்படுத்தப்படுகிறது. இங்ஙனம் காலப்போக்கிற்கேற்ப வேறுபட்டு வருவனவற்றை அறிய வேண்டும்.

## உடைமையா? உரிமையா?

ஆறாம் வேற்றுமைக்கு உடைமை, உரிமை பொருளாகும். உடைமை மட்டுமே பொருள் என்பது தவறு. எனது மனைவி, என் மனைவி என்றால் அவள் என் உடைமை ஆகிறாள் எனலாமா? இக்காலச் சமுதாயத்தில் இஃது ஏற்கப்படமாட்டாது. எனக்கும் அவளுக்கும் உள்ள உறவை நான்காம் வேற்றுமை காட்டுகிறது (எனக்கு மனைவி); எனக்கும் அவளுக்கும் உள்ள உரிமையை ஆறாம் வேற்றுமை உணர்த்துகிறது (எனது மனைவி).

இது தற்கிழமை (எனது விரல்), பிறிதின் கிழமை (எனது வீடு) எனப் பகுக்கப்படுவதை அறிவோம்.

'ஆது' என்ற உருபு பழஞ் செய்யுட்களில் காணப்படும். 'அ' வைப் பன்மை உணர்த்தும் உருபு என்பர். என கைகள், தன கைகள் எனவும் எடுத்துக்காட்டுவதுண்டு. இன்றைய வழக்கில் இவை இல.

என்னிடம் ஒரு புத்தகம் உளது.
என்னிடம் பல புத்தகங்கள் உள்ளன.

'அது' ஒருமைக்கும், 'அ' பன்மைக்கும் முன்பு வழங்கியமைக்கும் இந்த வினைமுற்று விகுதிகட்கும் ஏதோ ஒற்றுமை இருப்பது தெரிகிறதல்லவா? தமிழைச் சிறப்புப் பாடமாகப் படிப்பவர் அதை ஆராயட்டும். நாம் அவை இன்று வழக்கில் இல்லை என்று தெரிந்துகொண்டு விட்டுவிட வேண்டும். அதற்காக இவற்றை இலக்கணத்திலிருந்தே ஒழித்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டக்கூடாது.

## எனது மகனா? என் மகனா?

'**எனது மகன்** திருமணத்திற்கு வருக' என அழைப்பிதழில் போடலாமா? கூடாது என்பர் ஒரு சாரார். அது என்பது அஃறிணைக்கே வரும்; உயர்திணைக்கு வாராது என்பது அவர்கள் கருத்து. 'அது' என்ற உருபு அங்ஙனம் அமைந்துவிட்டது.

என்னிடம் செல்வம் உளது.
எங்கள் ஊரில் செல்வர்கள் உள்ளனர்.

வினைமுற்று விகுதிகளைப் பார்த்தாலும் இது விளங்கும். இதனை மாற்றி 'உடைய' என்ற சொல்லுருபைப் போட்டாலும் மனநிறைவு தரவில்லை.

என்னுடைய மாடு
என்னுடைய வீடு
என்னுடைய மனைவி
என்னுடைய மகன்

மனைவியையும் மகனையும் உடைமைப் பொருளாக்குவது பலருக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. தொல்காப்பியரே 'எனக்கு மகன், எனக்கு மனைவி' என்றுதான் வரவேண்டும் என்பார். "அது என் உருபுகெடக் குகரம் வரும்" என்கிறார். அவர் காலத்தில் திருமண அழைப்பிதழ் வேறுவிதமாக எழுதப்பட்டது. "மாநாய்கனுக்கு மகளாகிய கண்ணகிக்கும் மாசாத்துவானுக்கு மகனாகிய கோவலனுக்கும் நடக்கும் திருமணத்திற்கு வருக" என்பது அன்றைய வாசகம். இன்று, எனக்கு மகனாகிய மாணிக்கத்திற்கும்---" என்று எழுத இயலாது. எனவே 'என் மகன் மாணிக்கத்திற்கும்' என்று மட்டுமே போடுகின்றனர். ஆறுமுக நாவலர் இடைக்காலத்தும் பிற்காலத்தும் ஏற்பட்ட மாறுதல்களைக் காட்டி, 'அது' உருபு உயர்திணை ஒருமை, பன்மைகட்கும் வரலாம் என்கிறார். 'அரனது தோழன்', 'குன்றவர் தமது செம்மல்', 'நினது அடியாரோடல்லால்' என்பன அவர் காட்டும் சான்றுகள்.

இன்று வரும் திருமண அழைப்புக்களில் இரண்டையும் பார்க்கிறோம். செந்தமிழ் அன்பர் சிலர் 'என் மகன், என் மகள்' என்று உருபுவிரிக்காமல் போட்டுத் தப்பிக்கின்றனர். மற்றும் சிலர் 'எனது மகன், எனது மகள்' என்று போட்டு ஆறுமுக நாவலர் வழியைப் பின்பற்றுகின்றனர். மொழியியலார் 'அது' என்பது உருபாக வரும்போது உடைமை (உரிமை)யைப் பொருளாகத் தருகிறது என்பதைத்தான் கவனிக்க வேண்டும் என்பர். ஒருமை, பன்மையையோ, உயர்திணை, அஃறிணையையோ அது சுட்டுவதாகக் கொள்வது தவறு என வாதிடுவர்.

எனது கை
எனது மகன்

என வருமிடத்து 'அது' என்ற உருபு ஒரே வகையாகத்தான் பயன்படுகிறது. அதில் பொருள் வேறுபாடு கருதுவது தவறு. இப்போது நீங்கள் எந்தக் கட்சியைச் சார்வது என இப்பொழுதே சிந்தியுங்கள்.

## விளிவேற்றுமையின் அழகு

விளிவேற்றுமையின் அழகைப் பத்திமைப் பாடல்களில் கண்டு மகிழலாம்; தாலாட்டுப் பாடல்களில் கேட்டு இன்புறலாம்.

அறுவர் பயந்த ஆலமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!" --

(அடி: 255-264)

என்று தொடரும் திருமுருகாற்றுப்படை அடிகளைப் படிக்கப் படிக்க அதன் அருமை புலனாகும்.

வேற்றுமைகள் பெயரின் பொருள் வேறுபடுவதை விளக்குவன. பெயர் வினை முதலிய பயனிலையுடன் சேரும்போது, வேறுபடுத்தும் உருபு வரும். அது கருவியாக இருக்கிறதா? எழுவாயாக நிற்கிறதா? செயப்படுபொருளாகப் பயன்படுகிறதா? ஒருவர்க்கு உறவா? பகையா? உடைமையா? என்றிவ்வாறு பல்வேறு வேற்றுமைகளை உணர்த்துவன. உருபுகள், சாரியைகள், சொல்லுருபுகள் மிகப் பொருத்தமாக அமைவதே பெரும்பான்மை; வேறுபடுமிடங்களும் உள. எங்ஙனமாயினும் வாக்கியப் போக்கைப் பார்த்துப் பொருள் வேற்றுமையை உணர்ந்துகொள்வது நம் கடமையாகும்.

✣ ✣ ✣

# 8. வேற்றுமை, அல்வழி

தமிழ்மொழியின் சொல்லமைப்பும் வாக்கிய அமைப்பும் காரண காரியத் தொடர்ச்சியுடையன. கூடுமானவரை, தமிழில் ஒரு சொல்லைப் பல சிறு உறுப்புகளாகப் பிரித்தும் பிறகு இணைத்தும் பார்க்க முடியும். அங்ஙனம் பிரித்துப் பார்த்த உறுப்பை இன்ன உறுப்பு, இன்ன காரணத்திற்காக வந்த உறுப்பு என்று விளக்கக்கூடும். அதுபோல ஒரு வாக்கியத்தைப் பல தொடர்களாகப் பிரிக்க முடியும். அவற்றை இன்ன தொடர்கள், இன்ன காரணத்திற்காக வந்த தொடர்கள் என்று விளக்கக்கூடும்.

## வாக்கியத்தைத் தொடர்களாகப் பிரிக்கலாம்

முருகன் என்னை வரவேற்கவும் எனக்கு அன்பளிப்புத் தரவும் விரும்புகிறான்.

இவ்வாக்கியத்தில் பல தொடர்கள் உள்ளன. முருகன் விரும்புகிறான், என்னை வரவேற்க, எனக்கு அன்பளிப்பு, அன்பளிப்பு (ஐத்) தர எனப் பிரிக்கலாம்.

## தழுவு தொடர்

ஒரு சொல் தொடராகாது. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நிற்பதே தொடராகும். சொற்கள் ஒன்றையடுத்து ஒன்று நின்றால் போதாது; பொருள் தருமாறு ஒன்றையொன்று தழுவி நிற்கவும் வேண்டும். மண், மரம், வளர்ச்சி என்றால் தொடராகாது. சொற்கள் உதிரியாக நிற்கின்றன; ஒன்றையொன்று பொருளால் தழுவி நிற்கவில்லை. 'மண்ணில் மரத்திற்கு வளர்ச்சி' எனில் இச்சொற்கள் தொடர்ந்து நிற்பதால் ஒரு பொருள் வெளிப்படுகிறது. இதனையே **தழுவுதொடர்** என்பர்.

## வேற்றுமை எட்டா? ஆறா?

'சொல்லதிகாரத்தில் வேற்றுமையை எட்டு என எண்ணும் இலக்கணிகள், எழுத்ததிகாரத்தில் உருபு இல்லாத எழுவாய், விளிவேற்றுமைகளை விட்டுவிட்டு ஆறு என்பர். வேற்றுமைத் தொகைத் தொடர்கள் ஆறு; வேற்றுமை விரித்தொடர்கள் ஆறு. முன்னதில் உருபு மறைந்திருக்கும்; பின்னதில் அது விரிந்து நிற்கும். இங்ஙனம் வேற்றுமைத் தொடர்கள் பன்னிரண்டு ஆகும்.

## வேற்றுமைத் தொடர்கள்

| **வேற்றுமைத் தொகை** | **வேற்றுமை விரி** |
|---|---|
| புத்தகம் படித்தான் | புத்தகத்தைப் படித்தான் |
| கல் எறிந்தான் | கல்லால் எறிந்தான் |
| இராமன் மனைவி | இராமனுக்கு மனைவி |
| மதுரைப் பயணி | மதுரையிலிருந்து (வரும்) பயணி |
| பாரதியார் இல்லம் | பாரதியாரது இல்லம் |
| நாட்டு நடைமுறை | நாட்டின்கண் (உள்ள) நடைமுறை |

## வேற்றுமை அல்வழித் தொடர்கள் அல்லது அல்வழித் தொடர்கள்

மேலே கண்டவையல்லாத, பிறவாறு தொடர்ந்து நிற்கும் தொடர்களையெல்லாம் வேற்றுமையல்லாதவழித் தொடரும் தொடர்கள் என்றனர். எனவே அவைகள் அல்வழித் தொடர்கள் எனப்பட்டன. அல்வழித் தொடர்கள் பதினான்காகும். அவற்றுள் தொகைநிலைத் தொடர்கள் ஐந்து; தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது ஆகும். அவை வருமாறு:

1. குடிநீர், கடிநாய் – வினைத்தொகை
2. பெருந்தன்மை, கடுங்கோடை – பண்புத்தொகை
   தமிழ்மொழி, வறுமை நோய் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை
3. வெடிச்சிரிப்பு, கழுகுப்பார்வை – உவமைத்தொகை
4. செடிகொடி, இராப்பகல் – உம்மைத்தொகை
5. குறுந்தாடி, இரட்டைச்சடை – அன்மொழித்தொகை

இவை ஐந்தும் தொகைநிலைத் தொடர்களாக வரும். இவை சில விரித்தால் வேறு தொடர்களாகிவிடும். குடிநீரை விரித்தால் குடிக்கின்ற நீர் எனத் தெரிநிலை வினையெச்சத் தொடராகும்; கடிய கோடை என விரித்தால் குறிப்புப் பெயரெச்சத் தொடராகும்.

## அன்மொழித்தொகை

இவற்றுள் அன்மொழித் தொகை ஏனைய தொகைகளின் அடிப்படையில் வரும் தொடரின் புறத்தே அல்லாத சில சொற்கள் மறைந்து வரும். இலக்கியத்தில் மிகுதியும் பயன்படும். இருமொழித் தொடரில் அமையும். இரட்டைச் சடை வந்தாள் என்றால் இரட்டை ஆகிய சடையை உடையவள் வந்தாள் என விரியும். இஃது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகும். குறுந்தாடி வந்தான் என்றால் குறுமையான

தாடியை உடையவன் வந்தான் எனப் பொருள்படும். பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

வெடிச்சிரிப்புக் கேட்டது என்றால் வெடி போன்ற சிரிப்புக் கேட்டது என்றாகும். உவமைத்தொகை. வெடிச்சிரிப்பு வருகிறான் என்றால் வெடி போன்ற சிரிப்பு என ஒரு தொகையும் சிரிப்பை உடையவன் என ஒரு தொகையும் வருகின்றன. இங்ஙனம் தொகையின் மேலும் ஒரு தொகை வருவதையே அன்மொழித்தொகை என்றனர். பூங்கொடி, மலர்க்கொடி (பூவை உடைய கொடி, மலரை உடைய கொடி) என்பன வேற்றுமைத் தொகைகள். பூங்கொடி அசைந்தது என்றால் வேற்றுமைத் தொகை தவிரப் பிறிதெதுவும் தொகவில்லை (மறைந்து வரவில்லை). பூங்கொடி வந்தாள் என்றால் பூவையுடைய கொடி போன்ற பெண் வந்தாள் என்றாகும். வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை இது. வேற்றுமைத் தொகையின் மேலும் அல்லாத மொழிகள் தொக்கு வருவதையே இது சுட்டுகிறது.

## தொகாநிலைத் தொடர்கள்

தொகாநிலை எனில் இடையே உருபோ, பொருளோ மறைந்து நில்லாமையைச் சுட்டும். முன்னர்க்கூறிய ஐந்தும் தொகையாக வருமென்றால் இவை ஒன்பதும் தொகாநிலையாகவே வரும்.

1. சாத்தன் வந்தான் – எழுவாய்த்தொடர்
2. முருகா வா – விளித்தொடர்
3. படித்த மனிதர் – பெயரெச்சத்தொடர்
4. படித்துத் தேறினான் – வினையெச்சத்தொடர்
5. வந்தான் நண்பன் – தெரிநிலை வினைமுற்றுத் தொடர்
6. பெரியன்அவன் – குறிப்பு வினைமுற்றுத்தொடர்
7. மற்றொன்று – இடைச்சொற்றொடர்
8. மாமனிதர் – உரிச்சொற்றொடர்
9. தீதீ – அடுக்குத்தொடர்

உருபு தொக்கும் விரிந்தும்வரும் இரட்டைத் தோற்றமின்றி இவை விரிந்து நிற்கும் இயல்பான ஒரே தோற்றம் உடையவை.

அடுக்குத் தொடரை உற்று நோக்குங்கள். தீ என்பது சொல். தீதீ என்பது தொடர். ஏன்? ஒன்றுக்கு மேற்பட்ட சொல் பொருள் தரும் வகையில் தொடர்ந்து நின்றால் தொடராகும். அதனால் போபோ, தீதீ, பாம்பு பாம்பு என்பன தொடராகிவிட்டன.

சொற்கள் பொருள் உணர்ச்சியோடு தொடர்ந்து நிற்பனவற்றை, இங்ஙனம் வேற்றுமைத் தொடர் என்றும் அல்வழித் தொடர் என்றும் இரண்டு வகையாகப் பகுத்துள்ளனர். வேற்றுமைத் தொடர்கள் தொகை நிலையில் ஆறு; தொகாநிலையில் ஆறு ஆகப் பன்னிரண்டாகும். அல்வழித் தொடர்கள் தொகை நிலையில் ஐந்து; தொகா நிலையில் ஒன்பது; ஆகப்பதினான்காகும். இத்தொடர்கள் அனைத்தும் வாக்கிய அமைப்பிற்குப் பயன்படுகின்றன. இவை பொருள் வேற்றுமையுடையன; புணர்ச்சி வேற்றுமையும் உடையன. தலைக்கனம் – ஒற்று மிகுந்தது. செருக்கைச் சுட்டும். தலை கனத்தது – ஒற்று மிகவில்லை. சிறு நோயைக் குறிக்கும். முன்னது வேற்றுமைத் தொடராகும் (தலையினது கனம்); பின்னது அல்வழித் தொடர் – எழுவாய்த் தொடராக நிற்கிறது.

## தமிழில் ஒரு மரபு

உயர்திணை என்று ஒன்றை வரையறைப்படுத்திக் கொண்டு, உயர்திணை அல்லாததை எல்லாம் அஃறிணை (அல்+திணை – அல்லாத திணை) – உயர்திணை அல்லாத திணை எனப் பாகுபாடு செய்வர்.

அகத்திணை என்று ஒன்றை வரையறைப்படுத்திக் கொண்டு, அகத்திணை அல்லாத எல்லாவற்றையும் புறத்திணை என்பர். வேற்றுமைத்தொடர் என ஒன்றை வரையறைப்படுத்திக் கொண்டு, வேற்றுமை அல்லாத எல்லாவற்றையும் வேற்றுமை யல்வழித் தொடர் – அல்வழித்தொடர் என்பர்.

## வாக்கியத்தைப் பிரித்துத் தொடர்களாக்கிக் காணுதல்

கண்ணன் சென்னைக்குப் படிக்கச் சென்றான். அங்கு நன்மாணவன் என்ற பெயரெடுத்தான். பெரும் பதவிகளை நனிவிரைவில் அடைந்தான். வாழ்வில் வெற்றி பெற்று மகிழ்ச்சியுடன் இருந்தான்.

மேற்கண்ட வாக்கியங்களில் பல தொடரமைப்புகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| கண்ணன் சென்றான் | – | எழுவாய்த் தொடர் |
| சென்னைக்குச் சென்றான் | – | வேற்றுமைத் தொடர் |
| படிக்கச் சென்றான் | – | வினையெச்சத் தொடர் |
| நன்மாணவன் | – | பண்புத்தொகைத் தொடர் |
| பெயரெடுத்தான் | – | வேற்றுமைத் தொகைத்தொடர் |
| பெரும்பதவிகள் | – | பண்புத்தொகைத் தொடர் |
| பதவிகளை அடைந்தான் | – | வேற்றுமைத்தொடர் |
| நனிவிரைவில் | – | உரிச்சொற்றொடர் |
| வாழ்வில் வெற்றி | – | வேற்றுமைத்தொடர் |

| | | |
|---|---|---|
| வெற்றி பெற்று | – | வேற்றுமைத்தொடர் |
| பெற்று வாழ்ந்தான் | – | வினையெச்சத்தொடர் |
| மகிழ்ச்சியுடன் இருந்தான் | – | வேற்றுமைத்தொடர் |

இங்ஙனம் வாக்கியங்களில் சொற்கள் ஒன்றை ஒன்று அடுத்து நின்றும், சிறிது விலகி இடைவிட்டு நின்றும் பொருளால் ஒன்றையொன்று தழுவிநிற்கும். அவற்றைப் பொருளுணர்ச்சிக்கு ஏற்பக் கொண்டுகூட்டித் தொடர்களைப் பிரித்தறிய வேண்டும். இவை சில எழுவாயின் செயலையும் சில செயப்படுபொருளின் வேலையையும் சில பயனிலையின் பணியையும் சில அவற்றிற்குத் துணையாக நிற்கும் தொண்டினையும் செய்வன என அறிதல் வேண்டும்.

**பொதுக் குறிப்பு :** எழுவாய் முதல் விளி வரை வேற்றுமைத் தொடர் எட்டு. இவற்றுள் எழுவாய்க்கும் விளிக்கும் உருபு இல்லாததால் அவற்றை அல்வழியில் சேர்ப்பர். எனவே வேற்றுமைத் தொடர் ஆறு. தெரிநிலை வினை முற்று, குறிப்பு வினை முற்று, வினையெச்சம், பெயரெச்சம், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்கத் தொடர் என ஏழு.

முன்பு கூறிய வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பன ஐந்து. இவ்வாறு 2 + 7 + 5 = 14 ம் அல்வழித்தொடர் என்பர்.

✣ ✣ ✣

தமிழே! உயிரே! வணக்கம்!
தாய்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்!
அமிழ்தே நீஇல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும்! புளிக்கும்!

– காசி ஆனந்தன்

# 9. திணை, பால், எண், இட இயைபு – வாக்கிய அமைப்பு

## சொற்கலப்பும் ஒலிக்கலப்பும்

தமிழின் வாக்கிய அமைப்பு இயல்பானது. ஒரு மொழியின் உயிர்ப்பு எது? உயிர் எது? என்று தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு மொழியின் உயிர்ப்பு (மூச்சு) அதன் 'ஒலி' வடிவம். ஒலிக் கலப்பு மிக அதிகமானால் மொழி வடிவம் மாறிவிடும். தமிழிலிருந்து தெலுங்கும் கன்னடமும் மிகவேறுபடுவதற்கு அவற்றின் ஒலிக்கலப்பே தலைமையான காரணம். சொற்கலப்பை விடவும் ஒலிக்கலப்பே ஆபத்தானது. ஆங்கிலத்தில் நம் நாட்டு ஊர்ப்பெயர்களை எழுத நேர்ந்தபோதும், பொருட்பெயர்களை எடுத்துக்கொண்டபோதும் 'ஆங்கிலப்படுத்தியே' எடுத்துக் கொண்டார்கள். டமிள், டின்னவேலி, ட்ருவாடி, மெசுரா என்றிவ்வாறும் கட்டமரான் மிளக்டண்ணி என்றிவ்வாறும் பேசினர்; எழுதினர். ஏன்? மொழியின் ஒலிப்பு மனிதனின் பழக்கவழக்கத்தோடு ஒட்டியது. ஒலிப்பை மாற்றினால்– பிற ஒலிப்பைக் கலந்தால் மொழி சிதைகிறது. அரிசியிற் கலந்த கற்களைப் பொறுக்கி எடுத்துவிடுவது போல், ஒரு மொழியிற் கலந்த பிறமொழிச் சொற்களைப் பிரித்தெடுத்துவிடலாம். ஒரு மொழியிலேற்படும் ஒலிக்கலப்புப் பாலிற் கலக்கும் மோர் போன்றது; மூலப்பொருள் திரிந்துவிடும்; பிரித்து எடுக்க முடியாது.

இன்று தமிழில் நடக்கும் போராட்டம் பிறமொழிச் சொற்கலப்பு மட்டுமே என்று எண்ணாதீர்கள். வடமொழி, ஆங்கில ஒலிப்புக்களைக் கற்றுக் கற்றுப் பேசிப்பேசித் தமிழில் அவற்றை நம்மையறியாமல் கலக்கிறோம். கட்டம் என்று சொன்னதைக் கஷ்டமென்கிறோம். பதற்றம் பதஷ்டமானது; சூடு மிகவும் ஜூடு ஆகிவிட்டது; செல்வர் வடமொழித் தனவந்தர் என்ற சொல்லின் பழக்கத்தால் செல்வந்தர் ஆகிவிட்டார். தமிழில் 'செல்வந்தர்' என்ற சொல்லே கிடையாது. தமிழில் ஏற்பட்ட ஒலிக்கலப்பு ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற ஐந்து கிரந்த எழுத்துக்களை நுழைத்த நாளிலிருந்து நிலைத்துவிட்டது. அது தனி வரலாறு; ஆராய்ச்சி.

## மொழியின் உடல் அதன் வாக்கிய அமைப்பே

அடுத்து மொழியின் உடல் எது எனப் பார்ப்போம். ஒரு மொழியின் உயிர் அதன் வாக்கிய அமைப்பேயாகும். ஒரு குடும்ப மொழிகளின் இன

உறவை அறிவதற்குச் சொற்களைவிடச் சொற்றொடர்களையே, வாக்கியங்களையே அடிப்படைச் சான்றாதாரங்களாகக் கொள்வர். திராவிட மொழிகளில் மட்டுமன்றி இந்தியிலும் பிற சில வட இந்திய மொழிகளிலும் கூடத் தமிழ்ச் சொற்றொடரமைப்பு உள்ளமையை மொழியறிஞர் ஆராய்ந்து உள்ளனர். நாம் எவ்வளவு முயன்றாலும் தமிழ்மொழியின் வாக்கியம், சொற்றொடர் அமைப்புக்களைப் பெரிதும் மாற்றிவிட முடியாது. ஆயினும் சிறுசிறு அளவில் அடிப்படையாக அதன் மாற்றமும் நிகழ்ந்துதான் வருகிறது. வடமொழியுடன் பல நூற்றாண்டுகள் பழகி வருவதாலும் தமிழ்த்தொடரமைப்பில் சிற்சில நடை மாற்றங்கள் ஏற்பட்டதில் வியப்பில்லை. வடமொழியுடன் ஏற்பட்ட உறவில் சொற்கலப்பும் ஒலிக்கலப்புமே மிகுதி; நடைக்கலப்புக் குறைவே, ஆங்கிலத்துடன் ஏற்பட்ட உறவினால் சிற்சில இடங்களில் நடைக்கலப்பும் காணப்படுகிறது.

## ‘‘ஆங்கிலத் தமிழ்’

பயணிகள் வண்டியில் ஏறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் – பயணிகளை வண்டியில் ஏறுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்பதே இயல்பான தமிழ். எனக்கு வரவேற்புக் கொடுத்தார்கள் – என்னை வரவேற்றார்கள் என்பதே தமிழ் நடை.

நான் மணிவிழாவிற் பங்கெடுத்துக் கொண்டேன் – கலந்துகொண்டேன் என்றால்தான் தமிழாகும்.

நான் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பிஎச்.டி. பண்ணுகிறேன் – பி.எச்.டிக்கு ஆராய்கிறேன். படிக்கிறேன் என்பதே நலம்.

நகரப் பெரியோர்கள் வருகை தந்தார்கள் – வந்திருந்தார்கள் என்றால் தமிழ்நடையாகும்.

சாமியை அலங்காரம் பண்ணினார்கள் – சாமியை அலங்கரித்தார்கள் என்றால் போதுமே.

இவைபோலச் சிந்தித்தால் ‘ஆங்கில நடை’ ஊடுருவலைக் கண்டுபிடிக்கலாம். திரு.வி.க. இதனை ‘ஆங்கிலத் தமிழ்’ என்றே நகையாடுவார். சுப்பிரமணிய பாரதியார் ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் எழுதும் போக்கைக் கடுமையாகத் தாக்குவார்.

## தமிழ் தன்னைக் காத்துக்கொள்ள முயலும் இடங்கள்

வடமொழி, ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களைக் கலந்தாலும் தமிழ் தன் தொடராற்றலின் செறிவாலும் மரபாலும் மீண்டும் மீண்டும் ‘தமிழியல்பை’ மாற்றவிடாமல் தடுக்குமிடங்கள் பல உள.

டிரங்கை எடு
ஷோவுக்கு போனேன்
புக்கில் தேடினேன்
கிளாசுக்குள் கிடந்தது
பாக்கெட்டுகள் எல்லாம்
நர்சுகள் ஸ்ட்ரைக்கில் ஈடுபடவில்லை

வேற்றுமை உருபைச் சேர்க்க வேண்டிய சூழல் வரும்போது டிரங்க், ஷோ, புக், கிளாஸ் என்ற ஆங்கிலச் சொற்கள் தமிழியலாவதைக் கவனியுங்கள்.

டிரங்க் + ஐ = டிரங்கை

ஷோ + கு = ஷோவுக்கு

புக் + இல் = புக்கில்

கிளாஸ் + உள் = கிளாசுக்குள்

அதுபோலக் கள் உருபு சேர்க்கும் போதும் பாக்கெட் பாக்கெட்டு ஆகிக் கள்ளுடன் சேர்ந்து பாக்கெட்டுகள் ஆகிறது;

நர்சு ஆகிக் கள் சேர்ந்து நர்சுகள் ஆகிறது.

சாரியைகள் சேர்ப்பதனாலும் பல ஆங்கிலக் கலப்புத் தொடர்கள் தமிழியல்பு பெற முந்துவதைக் காணலாம்.

ஈவினிங்கில் பார்க்கிறேன் (Evening) – ஈவ்னிங் – வி – என இ பெற்றது . கு, இல் எனக் குற்றுகரம், சாரியை வந்தன

ப்பாயிண்டுபாயிண்டாக (Point) – பாயிண்ட்

இங்ஙனம் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்தாலும் தொடர்களாக மாற்றும்போது அவை தமிழியல்புடையனவாக மாற முற்படுகின்றன.

எத்தனை பிறமொழிச் சொற்கள் கலந்தாலும் தமிழில் வாக்கிய அமைப்பு மட்டும் மாறுவதில்லை என்பதையும் உணர வேண்டும்.

நான் நேற்று நைட்டு செக்கண்ட ஷோவுக்குப் போயிட்டு லேட்டாகத்தான் வந்தேன்.

டவுன் பஸ்ஸைப் பிடித்து, காலேஜுக்குப் போயி ஒவ்வொரு கிளாஸா அட்டண்டு பண்ணிட்டு வீட்டுக்கு ரிடர்னாகிறதுக்குள்ளே டயர்டு ஆகிவிடுகிறது.

இவ்வாக்கியங்களில் ஆங்கிலச் சொற்கள் அளவுக்கு மீறிக் கலந்திருந்தாலும், தமிழ் வாக்கிய இயல்பு அப்படியே உளது. ஆங்கிலச்

சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைப் போட்டு மேற்கண்ட வாக்கியங்களைச் சொல்லிப் பார்த்தாலே உண்மை விளங்கிவிடும். தமிழ்க்கொலை முயல்வாரைத் தடுத்து நிறுத்தப் பார்க்கிறது தமிழ்.

## திணை, பால், எண், இடம் - தமிழில் வினைச்சொற்களின் ஆற்றல்

தமிழில் வினைச் சொற்களைக் கொண்டே, இருதிணை ஐம்பால் இரண்டெண் மூவிடங்களைக் கண்டுகொள்ளலாம்.

வினைச் சொற்களின் இறுதி நிலைகளே அனைத்தையும் உணர்த்திவிடுவது குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டு:

வந்தான் – உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை.

தன்மை, முன்னிலையில் மட்டும் ஆணா, பெண்ணா என்பது தெரியாது; சூழல்நோக்கி உணர வேண்டும். ஆங்கிலத்தில படர்க்கை ஒருமைக்கு மட்டும், she comes, He runs என 's' சேர்த்து உணர்த்தப்படும். பொதுவாக come, run என்றால் திணை, பால் உணர்த்தப்படுவதில்லை. மேலும் படர்க்கையிலும் நிகழ்காலத்திற்கு ஒரு விதி; இறந்த காலத்திற்கு வேறுவிதி. படர்க்கை ஒருமைக்கு ஒருவிதி; பன்மைக்கு ஒருவிதி.

| | |
|---|---|
| I run | I ran |
| You run | You ran |
| He runs | He ran |
| He runs | They run |

இவ்வேறுபாடுகளை நுட்பமாக உணர்ந்தே ஆங்கிலத்தைக் கற்க வேண்டும். வடமொழி, இந்தி, முதலிய மொழிகளில் சொற்களுக்கே ஆண்பால், பெண்பால் வேறுபாடுண்டு. இலை, குழை, தழை என்ற ஒருபொருட் சொற்களில் ஒரு சொல் ஆண்பால் என்றும், மறுசொல் பெண்பால் என்றும் கூறப்படும். இவையெல்லாம் மிகவும் கவனமாக நினைவு வைத்துக்கொள்ள வேண்டியவையாகும். தமிழில் இடர்ப்பாடு அதிகம் இல்லாததால் பிழைகளும் அதிகமாக ஏற்படுவதில்லை.

அவன் வந்தான் – அவள் வந்தாள் – அவர் வந்தார் – அது வந்தது – அவை வந்தன.

நான் வந்தேன், நீ வந்தாய், அவன் வந்தான்.

எழுவாயும் பயனிலையும் இயைபுடையனவாய் இருக்க வேண்டும். நீண்ட வாக்கியங்களிலும் இதைக் கவனிக்க வேண்டும்.

## உளது, உண்டு, உள

அஃது உளது, அஃது உண்டு, அவை உள.

எல்லாவற்றையும் 'உண்டு' என்று கூறுவது தவறு. ஆனால் இன்று கறிவகைகள் உள என்றால் பண்டிதநடை என்று கருதப்படுகிறது. வண்டிகள் உண்டு, கறிவகைகள் உண்டு என்றே கூறலாம் என்பர். பிற்கால இலக்கண நூல்களும் இதை ஏற்றுக் கொண்டுவிட்டன. ஆயினும் ஆங்கிலத்தில் சிறு மாற்றத்தையும் ஏற்காதது போல், நாமும் ஏன் கண்டிப்பாக இருக்கக் கூடாது?

## அன்று, அல்ல, அல்லன்

நீங்கள் சொல்வது முறையல்ல
அது நல்லதல்ல
அவைகள் நல்லவை அல்ல
அவர்கள் தமிழர்கள் அல்ல
இவன் நல்லவன் அல்ல
நான் பெரியவன் அல்ல

'உண்டு' என்ற சொல்லைப் போலவே 'அல்ல' என்ற சொல்லும் பொதுவாக அனைத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. அது தவறு.

நீங்கள் சொல்வது முறையன்று
அது நல்லதன்று
அவைகள் நல்லவை அல்ல
அவர்கள் தமிழர்கள் அல்லர்
இவன் நல்லவன் அல்லன்
நான் பெரியவன் அல்லன்

இப்படி எழுதினால் செந்தமிழ் நடையாகி விடுமாம். ஆங்கிலத்தில் படர்க்கை ஒருமையில் 'S' சேர்ந்து எழுதினால் பண்டித ஆங்கிலம் என்றா கேலி செய்கிறார்கள்? இடையுருபுகளை (Preposition) இடம் நோக்கிப் போட்டால் செவ்விய ஆங்கிலம் என்றா நகைக்கிறார்கள்? அங்கே தவறு செய்தால் வெட்கப்படுகிறார்கள். இங்கே தவறாக எழுதிவிட்டு, முறையாக எழுதுகிறவர்களைக் கேலி செய்கிறார்கள். 'தமிழ் வாழ்க' என்றால் மட்டும் தமிழ் வாழுமா? எண்ணிப்பாருங்கள்.

## சில மரபுகளைத் தெரிந்துகொண்டால் தவறாகுமா?

நாங்கள் எல்லோரும்
நீங்கள் எல்லீரும்
அவர்கள் எல்லாரும்

எனத் தமிழில் ஒரு நுட்பமான வேறுபாடுண்டு. அதை இன்று எல்லோரும் பின்பற்றாவிட்டாலும், ஒரு சிலராவது பின்பற்றினால் நம் எல்லோர்க்கும் நல்லதுதானே? நீங்கள் எல்லீரும் இதை ஒப்புக்கொள்ளமாட்டீர்களா?

அவனிடம் சென்றான்
என்னிடம் வந்தான்
பூ எடுத்தான்
தளிர் கிள்ளினான்
களை பறித்தான்

என இவ்வாறு இடம் நோக்கி வினைச் சொற்களை மாற்றி ஆளும் மரபு தமிழில் உளது. இப்படிப்பட்ட மரபுகளை எல்லாம் தொகுத்துப் பார்த்தால் என்ன? பொழுதுபோக்காகப் படித்துப் பார்த்தால் என்ன?

## ஒரு, ஓர்

ஆங்கிலத்தில் சொல்லின் முதலெழுத்து உயிரின்றேல் 'A' என்பது வரலாம் (A Book); முதலெழுத்து உயிராயின் 'An' என்பது வரவேண்டும் (An animal). இதில் மாற்றமே கிடையாது. மாற்றியெழுதினால் குற்றம் என்று, எழுதியவரைக் கேலிசெய்வர்; எழுதியவர் வெட்கப்படுவார்.

**தமிழிலும் ஒரு புத்தகம்,** ஓர் இலை என்று உயிர்மெய்யெழுத்து முன்வரின் ஒரு என்றும் உயிரெழுத்து முன்வரின் ஓர் என்றும் எழுத வேண்டும். இரு, ஈர் என்பனவும் அவ்வாறே வரும். "**ஈருடல் ஒருயிர்**" என்பது காண்க. இரண்டு என்ற சொல்லாயின் இரண்டு புத்தகம், இரண்டு இலை என இரண்டிற்கும் பயன்படுத்தலாம். இஃது ஒன்றும் நாம் ஆங்கிலத்தைப் பார்த்துக் கற்றுக்கொண்டதன்று. தொல்காப்பியரே இதற்கான விதி கூறியுள்ளார்.

முதலீர் எண்ணின்முன் உயிர்வரு காலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயி னான (தொல்.455)

ஆனால் இன்று 'ஒரு வீடு ஒரு உயிர் ஒரு உலகம்' என்று 'ஒரு' பயன்படுத்தப்படுகிறது. எல்லா இடத்திலும் 'ஒரு' என்பதையே ஆள்வர். 'ஓர்' என்று போட்டால் பண்டித நடை ஆகிவிடுமாம். மாற்றி எழுதியவரை யாரும் கேலி செய்வதில்லை; மாறாகத் திருத்துகின்றவரை நகையாடுகின்றனர். செவ்விதாக எழுதுபவர்தான் வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

'A animal' என்று எழுதினால் ஆசிரியர் அடித்து விடுகிறார். மாணவன் உடனே திருத்திக் கொள்கிறான். அதிகாரி 'N' விட்டுப்போய்விட்டது (An என்பதில்) என்று வெட்கித் தலைகுனிகின்றார். தமிழில் 'ஒரு உயிர்' என எழுதிவிட்டு எழுத்தாளர் யாரும் பிழை என உணர்வதில்லை; வெட்கப்படுவதில்லை; திருத்திக்கொள்வதும் இல்லை.

**ஆர், அரு, அரிய** என்பன அருமையுணர்த்துவன.

| | |
|---|---|
| ஆரிடர் அரும்பொருள் | அரிய இடர் அரிய பொருள் |
| ஆரஞர் அருஞ்செல்வம் | அரிய அஞர் அரிய செல்வம் |
| ஆருயிர் அருந்துயர் | அரிய உயிர் அரிய துயர் |
| ஆரெயில் அருநலம் | அரிய எயில் அரிய நலம் |

மேற்கண்ட தொடர்களைப் பார்த்தால் ஒருண்மை விளங்கும். உயிர் முதன்மொழிவரின் 'ஆர்' என்பதும் உயிர்மெய் முதன்மொழிவரின் அரும் என்பதுமே பயன்படுத்தப்படுகின்றன. மாற்றிப் பயன்படுத்துவதே இல்லை. அரிய எனக் குறிப்புப் பெயரெச்சமாக வரும்போது வேறுபாடின்றி வழங்கப்படுகிறது.

**பேர், பெரு, பெரிய** என்பன பெருமையுணர்த்துவன

| | |
|---|---|
| பேராசிரியர் | பெரும்பொருள் |
| பேராதரவு | பெருங்கடல் |
| பேருலகம் | பெருந்துணை |
| பேரணி | பெருநலம் |
| பேரிடர் | பெருவழித்துறை |
| பேரின்பம் | பெருஞ்செல்வம் |

மேற்கண்ட தொடர்களைப் பார்த்தாலும் ஒருண்மை புலனாகும். உயிர் முதன்மொழிவரின் 'பேர்' என்பதும் உயிர்மெய் முதன்மொழி வரின் 'பெரும்' என்பதுமே பயன்படுத்தப்படுகின்றன; மாற்றிப் பயன்படுத்தும் மரபு தோன்றவே இல்லை. பெரிய எனக் குறிப்புப் பெயரெச்சமாக வரும்போது வேறுபாடின்றி வழங்கப்படுகிறது.

ஒரு, ஓர் என்ற அடைமொழிகளையும் இவ்வாறு உயிர் முதன்மொழி, உயிர்மெய் முதன்மொழி பார்த்துப் பயன்படுத்த வேண்டும் என்பது இப்போது மேலும் தெளிவுபடுகின்றதன்றோ?

அஃது, இஃது

இதனைப் போல் உயிர் முதன்மொழிவரின் அஃது, இஃது என்ற சுட்டையும் உயிர்மெய் முதன்மொழி வரின்அது, இது என்ற சுட்டையும் பயன்படுத்த வேண்டும் என்று தொல்காப்பியரே கூறுகிறார் (தொல்.423, 424)

| | | |
|---|---|---|
| அஃது ஒரு புத்தகம் | - | அது நல்ல புத்தகம் |
| இஃது ஒரு வீடு | - | இது படித்த புத்தகம் |
| இஃதோர் உயிர் | - | இது நல்ல உயிர் |

## ஆகும், ஆவர், ஆவார்

**இராமாயணத்தை எழுதியது கம்பர் ஆகும் என்பது தவறு.**

**இராமாயணத்தை எழுதியவர் கம்பர் ஆகும் என்பதும் தவறு.**

**இராமாயணத்தை எழுதியவர் கம்பர் ஆவார் என்பதே முறையாகும்.**

அது நல்ல நடைமுறை ஆகும்; அவர்கள் நல்லவர்கள் ஆவர்; அவர் ஒரு சான்றோர் ஆவார். படர்க்கைப் பன்மையில் 'ஆவரும்', படர்க்கைச் சிறப்புப் பன்மையில் 'ஆவாரும்' பயன்படுதல் காணலாம்.

எழுதிப் படிப்பது நல்ல பழக்கம் ஆகும்.
ஒருமுறை எழுதுவது பத்துமுறை படிப்பதற்குச் சமம் ஆகும்
தாய்மொழிக் கல்வி அறிவுக்கு நலந்தருவதாகும்.

தமிழ்ப் பேராசிரியர்கள் பெரும்புலவர்கள் ஆவர்
மொழியியலறிஞர்கள் அறிவியற்புலவர்கள் ஆவர்
சப்பானியர்கள் பெரும் உழைப்பாளிகள் ஆவர்

அவர் ஒரு தலைவர் ஆவார்
கம்பர் பெரும்புலவர் ஆவார்
பாரதியார் ஒரு தேசியக் கவிஞர் ஆவார்

இவை சில நடைமரபுகள்தான்; எனினும் இம் மரபுகள் பேணப்பட வேண்டும்.

## வாசிப்பது, வாசிப்பவர்

நம் வானொலியில் செய்திகள் வாசிப்பவர் பெருந்தவறு செய்து வருகின்றனர். "செய்திகள்; வாசிப்பது கண்ணன்" என்று தொடங்குகின்றனர். 'வாசிப்பது செய்தி' என்றால் பொருத்தம். வாசிப்பவர் ஓர் உயிருள்ள மனிதர். அவரெப்படி அஃறிணையாவார். ஆங்கிலத்தில் பி.பி.சி. (B.B.C.) யை இவர்கள் கேட்கட்டும்; அமெரிக்கக் குரலோசையை (Voice of America) இவர்கள் உற்றுக் கேட்கட்டும். அங்கே ஒரு சிறு பிழைகூட இன்றி ஆங்கிலத்தில் செய்திகள் ஒலி பரப்பாகின்றன. **அங்கு செய்தி ஒலிபரப்புகளைக் கேட்டுக் கேட்டுப் பிழையற்ற ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்கிறார்கள்.** இங்கு பிழையான தமிழைப் பரப்பிக் கேட்பவர்களையும் பிழை செய்யத் தூண்டுகிறார்கள். நம் 'செய்தி ஒலிபரப்பில்' காணும் ஒருமை, பன்மைப் பிழை; ஒலிப்புப்பிழை போன்றவற்றைப் பார்த்தால் 'வாசிப்பது கண்ணன்' என்பது பொருத்தமாய்க் கூடத்தோன்றும். நம் நாட்டுச் செய்திகளை வாசிப்பவர் மனிதர் ஆகும் காலம் விரைவில் வரவேண்டும்.

அங்கு **நிற்பது** எது? நீங்கள் **படிப்பதை** நிறுத்துங்கள். – இத் தொடர்களில் நிற்பது, படிப்பது என்பன வினையாலணையும் பெயர்கள்.

**நிற்பது** கூடாது; **படிப்பது** நல்ல பழக்கம் – இத்தொடர்களில் அவை தொழிற்பெயர்கள். நிற்றல், படித்தல் என்று பொருள்படும்.

வாசிப்பது பெத்தபெருமாள் என்பது வினைமுற்றுத் தொடர். செய்திகளை வாசிப்பது பெத்தபெருமாள் என்றாகிறது. பெத்தபெருமாள் வாசிப்பது என்றும் எழுவாய்த் தொடராக இதை மாற்றிச் சொல்லலாம். திணை, பால், எண், இட இயைபு வேண்டும் என்ற தமிழ் இலக்கண முறைப்படி பெருமாள் வாசிப்பவராகத்தான் இருக்க முடியும்; இருக்க வேண்டும். அவர் 'வாசிப்பதாகவே' எத்தனை காலத்திற்கு இருப்பாரோ? நாம் பிழைபட எழுதிப்பேசி அதை உலகறிய ஒலிபரப்பவும் செய்கிறோம் என்றால் அதற்காக வெட்கப்படுவதா? பெருமைப்படுவதா? இன்று மாறியுளது. விஜய திருவேங்கடம் இயக்குநரானதும் 'வாசிப்பவர்களை' வானொலியிற் பேச வைத்தார்.

## ஒருமை, பன்மை

தமிழில் ஒருமை பன்மை மயக்கம்தான் பெரும் மயக்கமாக உளது. படித்தவர்களும் அதில்தான் தவறு செய்கிறார்கள். ஆய்வேடுகளிலும் இம் மயக்கம் மிகுதியாகக் காணப்படுகின்றன.

கம்பர் தன் கற்பனைத் திறத்தால் உயர்கிறார் என்பது தவறு. 'கம்பர் தம் கற்பனை' என வருதல் வேண்டும். அவர் தன் மனக்போக்கின்படி நடக்கிறார். இங்கும் 'தம்' என்பதே வரவேண்டும். **நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இதில் தவறு செய்கிறார்கள்.** பெரும்பான்மையானவர் செய்வதால் தவறு முறையானதாகிவிடுமா?

**தன்னலம் – ஒருவரது சுயநலம் (தன் + நலம்)**

**தந்நலம் – பலரின் சுயநலம் (தம் + நலம்)**

அவர்கள் தந்நலம் உடையவர்கள் என்றே எழுத வேண்டும். எல்லா இடங்களிலும் 'தன்னலம்' என்று ஒரே மாதிரியாக எழுதுவது தவறு,

**என்றன் உயிரே, தமிழே – (என் + தன்)**

**எந்தம் உயிரே, தமிழே – (எம் + தம்)**

தமிழைச் சிறப்பாகப் படித்தவரும்கூட எந்தன் (எம் + தன்) என்று பன்மையையும் ஒருமையையும் கலந்தே எழுதுகிறார். அது தவறு.

**அவர்கள் நல்லவர்கள் அல்லர்**

**அவைகள் நல்லவைகள் அல்ல**

உயரிதிணைப்பன்மைக்கு உயர்திணைப் பன்மை முடிபும் அஃறிணைப் பன்மைக்கு அஃறிணைப் பன்மை முடிபும் கொடுப்பதே நலம். ஆங்கிலத்தில் They don't like it, He doesn't like it என்று படர்க்கைப் பன்மை ஒருமைகட்கேற்ப வினையாட்சியில் வேறுபடும். இங்கும் நல்லவர் அல்லர்

நல்லவை அல்ல, நல்லது அன்று என்று எழுதினால்தான் தமிழாகும். தமிழ் இதழ் ஆசிரியர்கள் தமிழில் மயக்கம்பட மாற்றி எழுதிப் பழக்கமாகிவிட்டது என்றால் சும்மா விடலாமா? **ஆங்கிலத்தில் தவறு செய்தால் செவிளில் அல்லவா அறைகிறோம்?**

**நூல்கள் அனைத்தும் படிப்பதற்குச் சுவையாய் இருக்கிறது.**

**பனைமரமும் தென்னைமரமும் மேல்நோக்கி வளர்கிறது.**

இவை எப்படி முறையாகும்? அஃறிணை ஒருமை, பன்மை இரண்டிற்கும் ஒருமை முடிபே கொடுப்பது வழக்கமாகிவிட்டது. இருக்கின்றன, வளர்கின்றன என்றல்லவா இவை முடிய வேண்டும்?

பயிர்கள் செழித்துக் காணப்படுகின்றன.
பழங்கள் கனிந்து காணப்படுகின்றன.
வீடுகள் அமைப்பாய் உள்ளன.
கண்கள் படபடவென்று துடிக்கின்றன.

இவ்வாறெழுதுவதே முறையாகும்.

எழுவாய்க்கேற்ற பயனிலை வரவேண்டும்; இடையில்வரும் வினையாலணையும் பெயர்களும் எழுவாய்க்கேற்பவே அமைய வேண்டும்.

**படங்கள் நல்லதல்ல – தவறு**

**படங்கள் நல்லன அல்ல – சரி**

**நீங்கள் சொல்வன நடைமுறைக்கு ஏற்றதன்று – பிழை**

**நீங்கள் சொல்வன நடைமுறைக்கு ஏற்றன அல்ல – முறை**

**அங்கிருந்து வரும் தகவல்கள் பெரிதும் அச்சம் தருவதாய் இருக்கிறது – தப்பு**

**அங்கிருந்து வரும் தகவல்கள் பெரிதும் அச்சம் தருவனவாய் இருக்கின்றன – நன்று**

"சமய வளர்ச்சி, சமுதாய நலம் பற்றிய சிக்கலும் இந்நூலில் நன்கு ஆராயப்பட்டுள்ளன." இதில் சமய வளர்ச்சி சமுதாய நலம் என்ற பன்மையை உளங்கொண்டு 'ஆராயப்பட்டுள்ளன' என்ற பன்மை முடிபு தரப்பட்டுள்ளது. ஆனால் ஊன்றி நோக்கினால் இவ்வாக்கியத்தின் எழுவாய் 'சிக்கல் என்பதே. எனவே ஆராயப்பட்டுள்ளது என ஒருமை முடிபு கொடுப்பதே செவ்விதாகும்.

**தடைகள் கிடையாது**

**செய்தித்தாள்கள் வராது**

**புத்தகங்கள் கிடைக்கப்பெறாது**

**வண்டிகள் ஓடாது**

இவை வழக்கமாய்ச் செய்யும் தவறுகள்

**தடைகள் கிடையா**

**செய்தித்தாள்கள் வாரா**

**புத்தகங்கள் கிடைக்கப்பெறா**

**வண்டிகள் ஓடா**

என்பனவே முறையானவையாகும்.

எதிர்மறைப் பன்மை வினைமுற்றுக்களைச் சொல்லிச் சொல்லி, எழுதி எழுதிப் பழக வேண்டும். கூட்டத்தில் முக்கால்வாசிப்பேர் மூக்கை அரிந்துகொண்டதைப் பார்த்து, நாமும் மூக்கை வெட்டிக்கொள்ள வேண்டியதில்லை. எதிர்மறைப் பன்மைகளை முறை தவறியே அனைவரும் எழுதுகின்றனர். ஓடா, வாரா என்றால் பண்டித நடையாகிவிடுமாம். அட கடவுளே!

## எழுவாய், பயனிலை

ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவையென மாணவனுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். இன்றேல் அவற்றின் இயைபறிந்து, வாக்கியங்களைப் பிழையின்றி எழுத முடியாது. எழுவாய், பயனிலை பற்றிய இலக்கண வகுப்பில் கருத்தின்றி இருந்த மாணவனைப் பரிதிமாற்கலைஞர் கடிந்து, வகுப்பை விட்டு வெளியேற்றினார். அது பற்றிய வாழ்க்கைக்குறிப்பு வருமாறு: "தாம் பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது ஓரமயம் ஒரு மாணவன் பாடத்தில் கவனம் செலுத்தாமல் இருந்தமையால், அவனை விளித்து, 'நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இங்கிருந்து எழுவாய்; நீ ஈண்டு இருத்தலால் உனக்கோ, பிறர்க்கோ பயனிலை; இவணிருந்து உன்னாற் செயப்படு பொருளிலை; ஆதலான் வகுப்பினின்றும் வெளியேறுக' என்று கூறிப் பரிதிமாற்கலைஞர் தம் மாணவனை அப்புறப்படுத்தினார்".

– பரிதிமாற் கலைஞர் நூற்றாண்டு விழாமலர், ப.107.

✣ ✣ ✣

**முரசு**

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்!

- பாரதியார்

# 10. பிரித்தெழுதுதல், சேர்த்தெழுதுதல் – வாக்கிய அமைப்பு

ஒரு வாக்கியத்திலோ அல்லது தொடரிலோ சொற்கள் சேர்ந்து நின்றே பொருள் தரமுடியும். தமிழில் புணர்ச்சி இலக்கணமே இன்றியமையாதது. ஆங்கிலத்தில் ஒலிப்பு இலக்கணம் பற்றி எவ்வளவு அக்கறை காட்டுகிறோம்? Conduct என்ற சொல்லை, 'கண்டக்ட்' என ஒலித்தால் ஒரு பொருள். 'காண்டக்ட்' என ஒலித்தால் பிறிதொரு பொருள். தமிழில் ஒலிப்பில் இடர்ப்பாடே இல்லை. ஆனால் புணர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டால் பொருள் வேறுபட்டுவிடும். கல்கண்டு வேறு. கற்கண்டு வேறு. கல்கண்டு தின்றால் இனிக்குமா? கற்கண்டு தின்றால் இனிக்குமா? பல்பொடி என்றால் பல்பொடியாகிப் போனதைக்குறிக்குமே தவிரப் பற்பொடியைக் குறிக்குமா? பல்லுக்குப் பயன்படுத்தப்படும் பொடி பற்பொடி. நான்காம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர். பல்பொடி என்பது 'பல்லைப் பொடிசெய்' என்றாகும். வாள்பிடி வாட்பிடி. வேறுபாடு உண்டு. வாளைப்பிடி என ஏவுவது முன்னது; வாளினது பிடி (வாட்பிடி) பின்னது.

கல்கோயில், நல்தமிழ், சொல்தொடர், வாள்கண் என்றெல்லாம் இன்று பிரித்து எழுதுகிறார்களா?. கற்கோயில், நற்றமிழ், சொற்றொடர், வாட்கண் என்றுதானே எழுதுகிறார்கள்.

'பன்மணிமாலை' என்பது ஒரு நூல் வகை. 'பல்மணிமாலை' என்றால் சிரிப்புக்கு இடமாகும். நால்மணி மாலையா? நான்மணிமாலையா? நான்மணிமாலையை இனி மாற்றுவது தகாது.

> கற்றரையில் கிடந்தது
> கல் தரையில் கிடந்தது

பொருள்வேறுபாடு இருப்பதால், கடினமான சில புணர்ச்சிகளையும் தெரிந்து வைத்துக் கொள்ளலே நலம். சொற்றொடர் என்பதைச் சொல்தொடர் என மாற்றுவது அறிவீனம். தொடரில் சொற்கள் ஒன்றை ஒன்று தழுவி நிற்க வேண்டும். அந்தச் சொற்றொடரையே பிரித்தால் 'தழுவி நிற்குமா'?

நெற்பயிர், கற்கோயில், முட்செடி, தண்ணீர், பந்தற்கால், விடியற்காலம், பாற்குடம் என்பன இன்றும் அவ்வாறே வழங்கவில்லையா? முள்செடி, தண்நீர் என்றா பிரித்துப் பேசுகிறோம்? எழுதுகிறோம்?

கீழ்வரும் சில தொடர்களைப் படித்தால் நாம் அன்றாட வாழ்விலும் சொற்களைக் கூட்டி ஒலிப்பது புலனாகும்.

| | | |
|---|---|---|
| அ + உயிர் | = | அவ்வுயிர் |
| இ + எழுத்து | = | இவ்வெழுத்து |
| அ + நாடு | = | அந்நாடு |
| தகுந்தால் + போல் | = | தகுந்தாற்போல் |
| எவ்வாறு + எனின் | = | எவ்வாறெனின் |
| வந்த + உடன் | = | வந்தவுடன் |
| மா + இலை | = | மாவிலை |
| திரு + ஆவினன்குடி | = | திருவாவினன்குடி |
| கூலி + ஆள் | = | கூலியாள் |
| கை + எழுத்து | = | கையெழுத்து |
| பூ + அரசு | = | பூவரசு |
| அங்கு + அங்கு | = | அங்கங்கு |
| என்றும் + என்றும் | = | என்றென்றும் |
| உழுது + உண்டு | = | உழுதுண்டு |
| எழுந்து + இரு | = | எழுந்திரு |
| நல் + நெறி | = | நன்னெறி |
| பொன் + நாடு | = | பொன்னாடு |
| எள் + துணையும் | = | எட்டுணையும் |
| நால் + நூறு | = | நானூறு |

இன்று எளிமை கருதிப் பிரித்தெழுதும் பழக்கம் மிகுந்து வருகிறது. பொருள் வேறுபடுமிடங்கள் தவிரப் பிற இடங்களில் ஓரளவு பிரித்தெழுதுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. ஆயினும் நாம் பெற்றுள்ள ஈராயிரம் ஆண்டு இலக்கியச் செல்வமும் தமிழ்மொழி இயல்பும் இடமறிந்து சேர்த்தெழுதுவதிலேதான் உளது. காலத்திற்கேற்பப் பிரித்தெழுதினாலும் பிரித்தெழுதுவதையும் சேர்த்தெழுதுவதையும் நூற்றுக்கணக்கான உதாரணங்கள் மூலம் நாம் நினைவுபடுத்திக் கொள்ளலாம். தமிழில் அஃதொன்றும் கடினமன்று.

## விளக்கும் ஆறு

விளக்குமாறு – விளக்கும் மாறு வேறு. விளக்கும் ஆறு என்றால் விளக்கும் விதம். பிரித்தறியும் மொழியாற்றலின் இன்றியமையாமையைக்

கீழ்வரும் நிகழ்ச்சி விளக்கும். "ஒரு மாணவன் இடக்கர் வினா ஒன்றை வகுப்பில் கேட்டபோது, அவ்வினாவிற்கு விடை வகுப்பிலேயே அளிக்க முடியாதாகையால், ஆசிரியர் சாத்திரியார் 'உனது வினாவிற்கு இப்போது விடையளிக்க இயலாது; அதை உனக்கு விளக்குமாற்றால் விளக்குதும்' என்று கூறினார். அதன் பிறகு அந்த மாணவன் அப்பழக்கத்தைக் கைவிட்டான் என்பதில் வியப்பில்லை" – பரிதிமாற் கலைஞர் நூற்றாண்டு விழாமலர், ப.112)

| | | |
|---|---|---|
| கை மாறு | – | கையின்கண்உள்ள மாறு |
| கைம்மாறு | – | உதவிக்கு நன்றி |
| செய்நன்றி | – | செய்யும் நன்மை |
| செய்ந்நன்றி | – | செய்த நன்றிக்குப் பதில் நன்றி |
| மெய்மறந்து | – | தன்னை மறந்து |
| மெய்ம்மறந்து | – | உண்மையை மறந்து |

இங்ஙனம் தமிழ்த்தொடர்கள் பலவற்றை இனங்கண்டு எழுத வேண்டும். கற்றவர்களே இவற்றில் பிழைபட எழுதுவதைப் பார்க்கிறோம்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

கொழுநற் றொழுதெழுவாள் என்பது கடினமான புணர்ச்சியாக இருக்கிறது. அதனால் நல்ல பதிப்பிற்கூட 'கொழுநன் தொழுதெழுவாள்' (குறள்.55) என்று பிரித்துப் போடுகிறார்கள். கொழுநனைத் தொழுது காலையில் எழுவாள் யாரோ, அவளே கற்புடைய பெண். கொழுநனைத்தொழுது என்பது கொழுநற்றொழுது எனவரும். 'கொழுநன் தொழுது' என்று பிரித்தால், காலையில் கொழுநன் எழுந்து மனைவியைத் தொழுதபின்அவள் எழுவாள் என்று பொருள்பட்டுவிடும். கொழுநன் தொழுது, பிறகு அவள் எழுவாள் எனல் முறையாகுமா? இதன் மரபுப்பொருள் வேறு.

இதுபோல் எண்ணிப் பார்த்தால் புணர்ச்சி இலக்கணப்படி சேர்த்தெழுதுவதன் இன்றியமையாமையை நாம் தெளிவாக உணர முடியும். புணர்ச்சி இலக்கணத்தையே நாம் படிக்க வேண்டாம். தமிழில் புணர்ச்சியிலக்கணம் இன்றியமையாதது என்பதை மட்டுமாவது நாம் உணர்ந்து வைத்துக் கொள்ளக் கூடாதா?

பிரித்தெழுதுவதால் பொருள் சிதையா இடங்களும் உள. எளிமையாய்ப் பொருள் உணர வழியுளதேல், பொருள் கெடாமல், ஓசை சிதையாமல் செய்யுளில் கூடத் தொடர்களைப் பிரித்தெழுதலாம்.

**குற்றமில்லை – குற்றம் இல்லை**

**வாட்டடங்கண் – வாள் தடங்கண்**

**நாட்காட்டி– நாள்காட்டி**

**ஒப்பில்லை– ஒப்பு இல்லை**

**முட்டாட்டாமரை – முள்தாள்தாமரை**

**அவன் வருவே னென்றுரைத்தான்**

**அவன் வருவேன் என்று உரைத்தான்**

**எழுதரிய பழங்கலைகள் பலவுளவாம்**

**எழுத அரிய பழம் கலைகள் பல உளவாம்**

பிரித்தெழுதுமிடங்களைச் சேர்த்தெழுதவும், சேர்த்தெழுதும் இடங்களைப் பிரித்தெழுதவும் என நூறுநூறு தொடர்களிற் பயின்றால் போதும். பிறகு மாணவர்கள் ஆசிரியர்கட்குக் கருத்துரை கூறும் அளவு பயிற்சி பெற்று விடுவர். தமிழ் அவ்வளவு எளிமையானது; இனிமையானது.

**பொன்னன்று**

**மண்ணன்று**

என்பன இருவகையாகப் பிரிக்கத் தக்கன. பொன் + அன்று; பொன் + நன்று எனவும் மண் + அன்று; மண் + நன்று எனவும் இவை பிரிக்கப்படும். எனவே இடம் நோக்கிப் பிரித்தே எழுதுவது பொருளுணர்ச்சிக்குத் துணை செய்யும்.

## டி.கே.சி. செய்ய விரும்பிய சீர்திருத்தம்

புணர்ச்சி இலக்கணத்தில் டி.கே.சி. ஒரு மாறுதல் செய்யத் தொடங்கினார். கல்த்தரை (கற்றரை), வாள்த்தடங்கண் (வாட்டடங்கண்) பால்க்குடம் (பாற்குடம்), கள்க்குடி (கட்குடி) என்றிவ்வாறு புதிய புணர்ச்சிகளைக் கொண்டு வந்தார். மேலோட்டமாக எண்ணிப் பார்த்தால் இஃது ஏற்கத்தக்கதுபோல் தோன்றும். ஆனால் பல நூற்றாண்டு கண்ட மொழியில், எளிதாக ஒரு மாறுதலைச் செய்தால் எல்லாம் தலைகீழாகிவிடும். அதனால் அம்முயற்சி தானே தோற்றுப்போயிற்று. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இதை மிகவும் கடிந்து பாடியுள்ளார்:

“வாட்டடங்கண் கற்றரையை
வாள்த்தடங்கண் கல்த்தரை என்றெழுதி முன்னைப்
பாட்டினிலே பெரும்பிழையைப்
பல்குவிப்பா னுக்குமணிப் பண்டிதர்கள்
சாட்டை கொடுத் தறிக்கைவிடத்
தாள்ஒன்றும் அற்றதுவோ?”

(தமிழியக்கம். பா.48)

கம்பராமாயணம், திருக்குறள் போலும் மூலநூல்களைக் கண்டபடி, சிதைத்துப் பதிப்பிக்க, இன்று பலர் முயல்கின்றனர். பாவேந்தர், அதைக் கடியும் விதம் முகத்தில் அறைவதுபோல், விழுகிறது.

கம்பனார் பதினோரா
யிரம்பாட்டில் முக்காலும்
கழித்துப் போட்டு
நம்பினால் நம்புங்கள்
இவைதாம் கம்பன்செய்யுள்
எனஅச் சிட்டு
வெம்புமாறு அளிக்கையிலும்
மேவாத செயலிதனைச்
செய்ய இந்தக்
கொம்பன்யார் எனக்கேட்க
ஆளில்லை யாபுலவர்
கூட்டந் தன்னில்? (47)

✣ ✣ ✣

ஒண்தமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்!

கண்டறிவாய்! எழுந்திருநீ
இளந்தமிழா! கண்விழிப்பாய்!
இறந்தொழிந்த

பண்டைநலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும்நீ
படைப்பாய்! இந்நாள்

தொண்டு செய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெழுந்தே!

- பாவேந்தர் பாரதிதாசன்

# 11. சந்தி – ஒற்றெழுத்து மிகலும் மிகாமையும்

தமிழில் இடர்ப்பாடானதும் முற்கூறிய சேர்த்தெழுதுவதுடன் தொடர்புடையதும் ஆகிய ஒன்று சந்தி எழுத்துப் பற்றியதாகும். கற்றவர்க்கும்கூடச் சந்தியெழுத்து மிகுமா, மிகாதா என்பது ஐயப்பாடு.

**வந்து போனானா – வந்துப் போனானா?**

**கட்டளைப்படி செய்தானா – கட்டளைப்படிச் செய்தானா?**

**அந்தப் பக்கமா? – அந்த பக்கமா?**

இவ்வாறு எத்தனையோ ஐயப்பாடுகள். பெரும்பகுதி நல்ல நூல்களைப் படித்த பழக்கத்தினாலேத்தான் இவ்வையங்கள் அகலும். மேலுள்ள எடுத்துக் காட்டுகளில் முதலில் உள்ளவை முறையானவை.

இஃதென்ன சங்கடம்? சந்தி மிகவும் வேண்டாம்; அது பற்றிச் சிந்திக்கவும் வேண்டாம். "மதுரை பதிப்பு, தந்த கட்டில், கருணைகொலை, மரகிளை, வாழைபழம் என்று சந்தியின்றியே எழுதிவிடுவோம். துன்பம் தரும் இலக்கணம் நமக்கு எதற்கு?" என்று சிலர் விட்டு விடுகிறார்கள்.

மஞ்சளார் அணை (மஞ்சளாற்று அணை), பெரியார் பாசனக் கால்வாய் (பெரியாற்றுப் பாசனக் கால்வாய்) என்று புணர்ச்சி இலக்கணத்தை அறவே ஒழித்து வருகிறார்கள்.

இவை எல்லாம் பொருந்துமா?

## புணர்ச்சி வேறுபாடும் பொருள் வேறுபாடும்

சந்தி மிகுவதனாலும் சந்தி மிகாமையினாலும் பொருள் வேறுபடும் இடங்கள் சிலவற்றைக் கண்போம். பிறகு நீங்களே கூறுங்கள், இவ்விலக்கணம் வேண்டுமா, வேண்டாமா என்று.

| | | |
|---|---|---|
| வாய்பாடு | – | முன்மாதிரி |
| வாய்ப்பாடு | – | பானையின் மேல்வாய் |
| கைபிடி | – | கையைப்பிடி |
| கைப்பிடி | – | ஒரு கருவி |
| கருணை கொலை | – | கருணை கொலை செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| கருணைக்கொலை | – | கருணையால் விளைந்த கொலை |
| வேலை தேடு | – | ஏதேனும் வேலை கிடைக்குமா என்று தேடு |
| வேலைத்தேடு | – | வேல் என்ற கருவியைத் தேடு |
| கடலை சாப்பிட்டான் | – | கடலையைத் தின்றான் |
| கடலைச் சாப்பிட்டான் | – | சமுத்திரத்தைப் பருகினான் |
| பிட்டு தின்றான் | – | பிட்டு உணவைத் தின்றான் |
| பிட்டுத் தின்றான் | – | சிறிது சிறிதாகப் பிட்டுத்தின்றான் |
| தந்த கட்டில் | – | பிறர் தந்த கட்டில் |
| தந்தக் கட்டில் | – | தந்தத்தாலான கட்டில் |
| கை குட்டை | – | கை குட்டையாகவுளது |
| கைக்குட்டை | – | சிறு துண்டு |
| மலர்கை | – | மலர்தல் |
| மலர்க்கை | – | மலர் போன்ற கை |
| தயிர் கடை | – | தயிரைக் கடை |
| தயிர்க் கடை | – | தயிர் விற்கும் கடை |
| மருந்து கடை | – | மருந்தைக் கடைதல் |
| மருந்துக்கடை | – | மருந்து விற்கும் கடை |
| கலை கழகம் | – | கலைகின்ற கழகம் |
| கலைக்கழகம் | – | கலையைக் கற்பிக்கும் கழகம் |

அரசு போக்குவரத்து என்றால் அரசு மாற்றத்தைக் குறிக்கும்: அரசுப் போக்குவரத்து என்றால் அரசுக்கு உடைமையான போக்குவரத்து என்றாகும். வாழைபழம் என விட்டிசைப்பது சரியான பொருளைத் தரவில்லை.

மதுரையில் ஒரு கடையில் ‘வெண்ணெய் கடை’, ‘எண்ணெய் கடை’ என்ற விளம்பரம் காணப்பட்டது. ‘கடைந்தால்தானே வெண்ணெய் கிடைக்கும்’ என்று அதைப் பார்த்த நண்பர் கேட்டார். இவை ஏவல் வினை போல் உள்ளன. வெண்ணெய்க் கடை, எண்ணெய்க் கடை என்பனவே கடையைச் சுட்டும் எனக் கூறவேண்டுமா?

பொருளை வேறுபடுத்தும் சந்தி இலக்கணத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமே தவிரப் புறக்கணிக்க முடியாது. புதிய முறையில், நாம் இன்று பயன்படுத்தும் சொற்றொடர்களைக் கொண்டு, இவ்விலக்கணத்தை விளக்க வேண்டும்.

## மதுரை பதிப்பு

மதுரையில் வெளியாகும் நாளிதழ்கள் சிலவற்றில் மதுரைப் பதிப்பு என்று போடாமல் மதுரை பதிப்பு என்றே போடுகின்றனர். மதுரைக் கடை, மதுரைக்

கொலை, மதுரைத் தமிழ் என்றால் மதுரையின் கண் உள்ள கடை, மதுரையில் செய்யப்பட்ட கொலை, மதுரையில் வழங்கும் தமிழ் என்று பொருள்படும். அவைபோல மதுரைப்பதிப்பு என்றால்தான் மதுரையில் அச்சடிக்கும் பதிப்பாகும். மதுரை கடை – மதுரையைக் கடை; மதுரை கொலை – மதுரை கொலை செய்யப்பட்டது. ஒற்று நீக்கினால் இவ்வாறு தவறான பொருள்களுக்கு இடமாகும்.

மதுரை பதிப்பு என்றால் மதுரையைப் பதிப்பித்தல் என்றாகும். மதுரையில் பதிப்பித்தல் நல்லதா? மதுரையையே போட்டுப் பதிப்பிப்பது நல்லதா? என்பதைப் பதிப்பவர்கள்தாம் தீர்மானிக்க வேண்டும்.

## பழைய கால உதாரணங்கள்

புணர்ச்சி இலக்கணத்தில் மிகமிகப் பழைமையான எடுத்துக்காட்டுகளே உள்ளன. பனியத்துக் கொண்டான், மகத்துக்கை, பனாட்டு, நாடுரி, பொலந்தொடி போன்றவற்றுக்கு இலக்கணம் எழுதி எல்லோரும் படிப்பதைவிட, இன்று பயன்படுத்தும் தொடர்களுக்கு இலக்கணம் கண்டுபிடிப்பதே பயன்படும்.

சொற்புணர்ப்புகளில் பழையனவற்றையும் செய்யுளில் மட்டுமே வருவனவற்றையும் சில அருஞ்சொற்களில் மட்டுமே காணப்படுவனவற்றையும் சிறப்பாகத் தமிழை எடுத்துப் படிக்கும்போது பார்த்துக் கொள்ளலாம். பொதுவானவற்றை, அடிக்கடி வாழ்க்கை நடைமுறையில் வருவனவற்றை, பொருள் வேற்றுமை தருவனவற்றை அனைவரும் கற்பதே பயனளிக்கும்.

## இயல்பு

பெரும்பாலும் புணர்ச்சி வேறுபாடின்றிச் சொற்கள் தொடர்ந்து நிற்பதைக் காண்கிறோம். அவற்றை இயல்பு புணர்ச்சி என்பர்.

| | | |
|---|---|---|
| பசு கரிது | பால்வெளிது | மழைவிழுந்தது |
| மண் கரைந்தது | குவளைமலர் | படித்த பையன் |

## தோன்றல், திரிதல், கெடுதல்

சொற்கள் தொடர்ந்து நிற்கும்போது ஒரெழுத்துத் தோன்றுதலும் ஒன்று மற்றொன்றாகத் திரிதலும் ஈற்றெழுத்துக் கெடுதலும் இவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றங்கள் நிகழ்தலும் காணப்படும்.

**பட்டு + துணி = பட்டுத்துணி – தோன்றல்**

**பால் + குடம் = பாற்குடம் – திரிதல்**

**மரம் + வேர் = மரவேர் – கெடுதல்**

**மரம் + குதிரை = மரக்குதிரை; ம் கெட்டது, க் தோன்றியது.**

## பழைமையும் புதுமையும்

அதோளிக் கொண்டான், இதோளிக் கொண்டான் போன்ற சுட்டு முதலாகிய சொற்கள் இன்று அறவே வழங்கவுமில்லை; விளங்கவுமில்லை.

**பழைமை + தோல் என்பது பழந்தோல் ஆகும்.**

**பழம் + தோல் என்பதும் பழந்தோல் ஆகும்.**

ஆனால் இன்று பழந்தோல் என்றால் பழைய தோலையும் பழத்தோல் என்றால் பழத்தினது தோலையும் குறிக்க வழங்குகிறோம்.

மா + பழம் = மாம்பழம். மாப் பழம் என்றால் பெரிய பழம் என்றாகிவிடும். இந்நுட்பமான வேறுபாடுகள் காலப்போக்கில் மொழியில் ஏற்பட்டுள்ளன.

## சாரியைகள்

புணர்ச்சியின் போது சாரியைகள் ஒலிப்பை எளிமைப்படுத்தவும் இன்னோசை தரவும் வருகின்றன. தமிழை இனிய மொழியாக்கும் கருவிகளுள் சாரியையும் ஒன்று.

மரம் + இல் = மரமில் என வராது; மரத்தில் எனவரும். அத்து என்பது சாரியை.

மனம் + கண் = மனக்கண் என வராது; மனத்துக்கண் என வரும். 'அத்து' சாரியை.

படம் + கு = படக்கு என வராது; படத்திற்கு எனவரும். அத்து, இன் சாரியைகள்.

எல்லாம் + ஐ + உம் = எல்லாவற்றையும் (வற்று–சாரியை) அவ் + ஐ = அவற்றை (வற்று–சாரியை)

பா என்பது பாட்டு, பா+ஆல் = பாவால், பாவினால், இன் சாரியை வந்தால் இனிமையாய் இருக்கிறது.

நா + கு நாவினுக்கு அரசன் என்றால் இனிமையாகவுளது. இன் சாரியையை எடுத்துவிட்டு உகரச்சாரியையைச் சேர்த்தால் நாவுக்கரசன். ஓரளவு இஃதும் இனிமையாகவே உளது. சாரியையே இல்லாமல் நாக்கு அரசன் என்றால் நன்றாக இல்லை. காக்குள் புகுந்து என்னாமல் காவினுட் புகுந்து என்றால்தான் சோலைக்குள் புகும் உணர்வு ஏற்படுகிறது.

இங்ஙனம் சாரியைகள் தமிழ்ச் சொற்களை எளிமைப்படுத்துவதையும் இனிமைப்படுத்துவதையும் கண்டுகண்டு பழகி உணர வேண்டும்.

## எல்லாம் வழக்கத்தில் இருப்பவைதான்

நாம் பேசும் மொழிக்கும் எழுதும் மொழிக்கும்தான் இலக்கணமே தவிர, இலக்கணம் கற்றுவிட்டு நாம் பேசுவதில்லை; எழுதுவதில்லை. முறையாகப்

பல நூல்களைப் படிப்பவருக்கும் படித்த சான்றோர்களுடன் பழகுபவர்கட்கும் இலக்கணம் தானே வரும். ஆனால் நம்மிடையே உள்ள சிலர் சோம்பலினாலோ, அவர்கள் வேற்றுமொழிக்காரர்களாக இருப்பதனாலோ, தமிழ் மரபை அறியாததனாலோ, வேண்டுமென்றோ தவறு செய்கிறார்கள். பிழைபடப் பேசவும் எழுதவும் செய்கிறார்கள். அப்பிழைகள் பிறரையும் தொற்றுநோய்போல் பற்றுகின்றன.

ஒருவருடைய இயல்புகளை அவருடன் பழகியே தெரிந்து கொள்கிறோம். அதுபோல் மொழியுடன் பழகப்பழக யாவும் நம் ஆழ்மனத்தில் தானே படிந்துவிடும்.

| | | |
|---|---|---|
| **காலையாயிற்று** | – | **காலை ஆயிற்று** |
| **கூலியாள்** | – | **கூலி ஆள்** |
| **கையெழுத்து** | – | **கை எழுத்து** |
| **தெருவோரம்** | – | **தெரு ஓரம்** |
| **பூவரசு** | – | **பூ அரசு** |

ய், வ் என்ற இரண்டும் உயிரீறும் உயிர் முதலும் கூடும் போது உடம்படு மெய்யாக வரும் என்ற இலக்கணத்தைப் படித்துவிட்டா இச் சொற்களை ஆள்கிறோம்?

| | | |
|---|---|---|
| **கடல் + அலை** | = | **கடலலை** |
| **ஆல் + இலை** | = | **ஆலிலை** |
| **வாள் + ஒடு** | = | **வாளோடு** |
| **பால் + ஆடை** | = | **பாலாடை** |

'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற சூத்திரத்தைப் படித்துவிட்டா இவ்வாறு எழுதுகிறோம்; பேசுகிறோம்? வாள் ஒடு என்று யாராவது பிரித்து ஒலிக்கின்றார்களா?

| | | |
|---|---|---|
| **படிப்பில்லை** | – | **படிப்பு + இல்லை** |
| **கணக்கில்லை** | – | **கணக்கு + இல்லை** |
| **பதிப்பாசிரியர்** | – | **பதிப்பு + ஆசிரியர்** |
| **பொட்டிழந்தேன்** | – | **பொட்டு + இழந்தேன்** |
| **பற்றின்றி** | – | **பற்று + இன்றி** |

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற நூற்பாவைப் படிக்காதவரும் கணக்கில்லை, பொட்டிழந்தேன் பூவிழந்தேன், பற்றின்றிப் பாசமின்றி என்றுதானே பேசுகிறார்கள்? எப்படி அவர்களுக்கு அவைகள் தெரிந்தன? (படிப்பு – இறுதி 'உ' கெடுகிறது.)

**கல் + இல்** = **கலில் என வரவேண்டும்; கல்லில் என்கிறோம்.**

**மண் + இல்** = **மணில் என வரவேண்டும்; மண்ணில் என்கிறோம்.**

**தண் + என** = **தணென என ஆகும்; தண்ணென என்கிறோம்.**

**விண் + இல்** = **விணிலாகும்; விண்ணில் என்கிறோம்.**

'தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும்' என்ற இலக்கணத்தைப் படித்தறியாமலே இவற்றைக் கையாள்கிறோம் என்றால், அதற்குத் தொன்றுதொட்டு நாம் பழகி வரும் மொழியுணர்ச்சிதானே காரணம்?

**படித்துத் தேறினான்**

**அடித்துப் பேசினான்**

**மங்கிப் போயிற்று**

**தங்கிச் சென்றான்**

**நொண்டித் திரிந்தான்**

பெரும்பாலான வினையெச்சங்களில் இங்ஙனம் ஒற்றெழுத்து மிகுகின்றன.

**மரக் கிளை**

**குளக் கரை**

மரம், குளம் என்ற மகர ஈற்றுச் சொற்களில் மகரம் கெடும்போது ஒற்று மிகுகிறது.

இவையெல்லாம் இலக்கணம் படித்து வந்த விதிகளல்ல; நாம் இங்ஙனம் பயன்படுத்துவதை இலக்கணிகள் விதிகளாக வகுத்துள்ளார்கள்.

**வந்து போனான்**

**நொந்து கிடந்தான்**

இவ்வாறு வரும் மென்றொடர்க் குற்றுகர வினையெச்சங்கள் சந்தி மிகுவதில்லை.

**படி பையா**

**சிரி குழந்தாய்**

**நினைத்தேன், வந்தாய் கண்ணா**

**கேட்டேன், தந்தாய் குமணா**

**வாழ்க தமிழ்**

**வாழி பாரதம்**

**இரவு பகல்**

**தாய் சேய்**

**காய்கறி**

இங்கெல்லாம் நாம் தன்னியல்பாகவே ஒற்றெழுத்து மிகுத்து எழுதுவதில்லை.

## ஒரு பெரும் பிழை

**ஆடுகுட்டி, ஆட்டுக்குட்டி**

**ஆறுகால், ஆற்றுக்கால்**

இவற்றிற்கிடையேயுள்ள பொருள் வேறுபாடு தெளிவு.

**நாட்டுத் தலைவன்**
**ஆற்றுப் பாசனம்**
**காட்டரண்**
**சோற்றுப் பானை**
**வயிற்றுப்பசி**

என்றுதான் வழங்குகிறோமே தவிர நாம் மாற்றி வழங்குவதில்லை. நாடு தலைவன் என்பதை நாடு தலைவன் என்றே சேர்த்தெழுதினால் போதாதா என்று நாம் கேட்பதில்லை. நம்மையறியாமலேயே 'சோற்றுப் பானையை எலி உருட்டியது' என்கிறோம். நெடில் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களில் வரும் ட, ற என்ற ஒற்றுக்கள் வருமொழியோடு புணரும் போது இரட்டிக்கும் என்ற இலக்கணவிதியைப் படிக்காமலே இவ்வழக்காறு நடைமுறையிலுளது. ஆனால் குற்றியலுகரம் மொழியிறுதியில் அரைமாத்திரையாய்க் குறுகும் என்பதாற் போலும், சிலர் குற்றுகரச் சொற்களைத் தவறாக எழுதுகின்றனர்.

| | | |
|---|---|---|
| **மஞ்சளார்** | – | **மஞ்சளாறு** |
| **கயத்தார்** | – | **கயத்தாறு** |
| **பெரியார்** | – | **பெரியாறு** |
| **சுருளியார்** | – | **சுருளியாறு** |

நம் செய்தி இதழ்கள் முன்பகுதியிலுள்ளவாறே போட்டுப் பழகிவிட்டன. கயத்தாறு வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலேற்றிய வரலாற்றுக் குறிப்பு மிக்க இடமாகும். அவ்வூரில் கயத்தார் என்றே பெயர்ப்பலகைகள் இன்றும் தொங்குகின்றன. தமிழையும் இவ்வாறு பிழையாக்கித் தூக்கிலேற்றித் தொங்கவிடலாமா என்று கேட்க ஆளில்லை.

## தவற்றுக்குமேல் தவறு

ஒரு தவறு மற்றொரு தவற்றுக்கு வழி செய்கிறது. மஞ்சளார் அணை, பெரியார் நீர்ப்பாசனத் திட்டம், சுருளியார் பாசனக் கால்வாய் என்று இவ்வாறு செய்தித் தாள்களில் தலைப்புச் செய்திகள் வெளிவருகின்றன.

**மஞ்சளாற்று அணைத்திட்டம்**

**பெரியாற்று நீர்ப்பாசனத்திட்டம்**

**சுருளியாற்றுப் பாசனக் கால்வாய்**

என்றுதான் வரவேண்டும். இயல்பான ஒன்றைச் சிலர் மாற்றி வழங்குவதால் 'தொற்றுநோய்' பரவுகிறது. இந்தத் தொற்று நோயை நாம் தடுத்தே ஆக வேண்டும். இல்லையென்றால் இது வேறுசில பிழைகளுக்கு வழி செய்யும். பிற்காலத்தில் 'பெரியார் நீர்ப்பாசனத் திட்டம்' என்ற பெயர்ப்பலகைகளைக் கண்ணுறும் ஒர் ஆராய்ச்சியாளர் "இவை ஈ.வே.ரா. பெரியார் காலத்தில், அவரது நிதியுதவியால் ஏற்படுத்தப்பட்ட திட்டமாதலால் தமிழக அரசால் பெரியார் நீர்ப்பாசனத் திட்டம் எனப் பெயரிடப்பட்டன' என ஆய்வு முடிவெழுதிப் பட்டமும் பெற்று விடுவார்.

## பிழையைத் திருத்தும் போதே பிழை

சிலர் 'நான் செய்த தவறுக்கு வருந்துகிறேன்' என்று எழுதுகிறார்கள். அதுவே தவறு. 'நான் செய்த தவற்றுக்கு' என்றல்லவா எழுத வேண்டும்? தவறு செய்யும் போதே ஒரு தவறா! சிலர் பிழைதிருத்தம் என்று நூலில் ஏற்பட்ட எழுத்துப் பிழை, சொற்பிழைகளைத் திருத்தி நூலின் இறுதியில் ஒரு பட்டியல் போடுகிறார்கள். அதிற் போய்ச் சிலர் 'பிழைத்திருத்தம்' என்று போடுகிறார்கள். பிழையைத் திருத்துவது பிழைதிருத்தம்; பிழையாகிய திருத்தம் பிழைத்திருத்தம், நாம் செய்துள்ள திருத்தமும் பிழையென்பது பொருள். பிழை திருத்தத்திலேயே ஒரு பிழையா?

## தமிழ் வாழ்க!

'தமிழ் வாழ்க!' என்றால் வாழ்ந்துவிடாது; 'தமிழ் வெல்க!' என்றால் வென்றுவிடாது! பிறிதொருமொழியை 'ஒழிக' என்றால் அஃது ஒழிந்துவிடாது. எனவே, தமிழ் வாழுமாறு நாம் வாழ வேண்டும்.

✣ ✣ ✣

# 12. தமிழ்ச் சொல் - கட்டமைப்பு

'சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே' என்றார் சுப்பிரமணிய பாரதியார். இது வெறும் உணர்ச்சி வெளிப்பாடு மட்டுமன்று; அறிவு அடிப்படையில் நிறுவத்தகும் உண்மையும் ஆகும்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

என்பது அவர்தம் அறிவுரை. தொழுது வணங்கிப் படிக்குமளவு தமிழ்ச்சொல்லில் பல சிறப்புகள் உள்ளன. அவற்றுள் அதன் கட்டமைப்புப் பற்றிய ஒன்றை மட்டும் இப்போது விளங்கிக் கொள்வோம்.

ஒருவரோடு பழகும்போது அவருடைய இயல்பறிந்து பழக வேண்டும் என்பார்கள். 'பண்பெனப் படுவது பாடறிந்தொழுகுதல்' என்று கலித்தொகை இயம்புகிறது. தமிழ்மொழி நாம் பிறந்த நாளிலிருந்து இறக்கும்வரை பழகும் வாய்ப்புக்குட்பட்டது. அதன் இயல்புகளை நாம் ஒருமுறை நினைத்தாவது பார்க்க வேண்டாமா? சிலர் மொழி ஒரு கருவிதானே என்பார்கள். ஆனால் அஃது அம்மி, ஆட்டுரல், மோட்டார் போன்ற கருவியன்று; மனித உணர்வோடு தொடர்புடைய கருவி என்பதை மறந்துவிடுதல் கூடாது.

## தொடரமைப்பு

தமிழில் பெரும்பான்மையான தொடர்ச் சொற்களைப் பதம் பதமாகவும் பதங்களை உறுப்புக்களாகவும் பிரித்துவிடலாம். தொடர்கள் புணர்ச்சிவிதியால் இணைந்து நிற்கின்றன. சொற்கள் புணர்ச்சிவிதியால் தொடர்ந்துநின்று, தொடர்களாவது தமிழில் ஒரு சிறப்பு மரபு. வ்டமொழி போன்ற இந்திய மொழியமைப்பில் இக்கூறு உண்டு. தமிழில் இது மிகுதி,

White flowers shine in the moon light.

தனித்தனிச் சொற்களாக நின்று இவ்வாக்கியம் முடிகிறது. நிலவொளியில் வெண்மலர்கள் ஒளிவீசுகின்றன எனத் தமிழில் எழுதுகிறோம். நிலவு ஒளி இல் வெண்மை மலர்கள் ஒளி வீசுகின்றன என்று பிரித்தெழுதுவதில்லை. நிலவு + ஒளி = நிலவொளி. வெண்மை + மலர் = வெண்மலர். ஒளி + இல் = ஒளியில். நிலவொளி – நிலவினது ஒளி – வேற்றுமைத் தொடர். வெண்மை மலர் – வெண்மையாகிய மலர் – பண்புத்தொகை – அல்வழித்தொடர்.

சொற்கள் தனித்தனியே நின்று வாக்கியமாவது ஒரு முறை; அவை தொடர்களாக இணைந்தும் பிணைந்தும் நின்று வாக்கியமாவது பிறிதொரு முறை. தமிழ் பின்னைய வகையைச் சார்ந்தது.

மட்குடம், மரவேர் போல்வன வேற்றுமைத் தொடர் – பனை குறைந்தது, பைங்கொடி போல்வன அல்வழித்தொடர். இவை இணையும் போது சில புணர்ச்சி விதிகட்கு உட்படுகின்றன. எனவே புணர்ச்சி வேற்றுமை பொருள் வேற்றுமைக்கு இட்டுச் செல்கிறது.

தமிழில் புணர்ச்சியிலக்கணம் தொடர்ச்சொற்களின் சிறப்பை வெளிப்படுத்துகிறது; பதவிலக்கணம் சொற்களின் அமைப்புச் சிறப்பை உணர்த்துகிறது. இவற்றைத் தமிழ் மொழியின் இயல்புகள் என்று கருத வேண்டும்; குறைகளென்று கருதக் கூடாது.

தமிழில் தொடர் பற்றிய புணர்ச்சியிலக்கணமும் செய்யுள் நடையில் வளர்ச்சிபெற்றதுதான். உலக வழக்கிலும் பதிப்பாசிரியர், எழுத்ததிகாரம், சிரிப்பொலி என்றுதான் ஆள்கிறோமே தவிரப் பதிப்பு ஆசிரியர், எழுத்து அதிகாரம் சிரிப்பு ஒலி என்று பிரித்துப் பேசுவதில்லை. ஆயினும் இன்றைய உரைநடையில் ஆங்கில நடைச்செல்வாக்காலும் அச்சடித்து வெளியிடும் பழக்கத்தாலும் பெரிதும் பிரித்தே எழுதுகிறோம்.

பழைய இலக்கியங்களைப் படிக்கப் புணர்த்தெழுதும் பழக்கம் தேவைப்படுகிறது. புதிய அச்சுப் புத்தக உரைநடைவடிவில் பிரித்து எழுதும் பழக்கமும் தேவைப்படுகிறது. 'உறழ்ந்துவரும்' என்னும் தமிழ் மரபிற்கு ஏற்ப, இவ்விரண்டு நிலைகளையும் நாம் பார்த்தும் படித்தும் பயின்று கொள்ள வேண்டியதுதான்.

தொடர்ச்சொற்களைப் பதங்களாகப் பிரிக்கும்பொழுது பலவற்றின் இடையே மறைந்துநிற்கும் உருபுகளை விரித்து எழுதுவதும் அவ்வுருபுகள் தொடர்ச் சொற்களில் மறைந்து நிற்பதும் தமிழில் மிக இயல்பாகக் காணப்படும் ஒரு மரபாகும்.

| | | |
|---|---|---|
| பவளவாய் | – | பவளம் போன்ற வாய் |
| பைம்பொழில் | – | பசுமை ஆகிய பொழில் |
| மட்குடம் | – | மண் ஆல் ஆகிய குடம் |

எழுவாய்த் தொடர் (கண்ணன் வந்தான்), பெயரெச்சத் தொடர் (வந்த பையன்), வினையெச்சத் தொடர் (வந்து பார்த்தான்) போன்றவற்றில் உருபெதுவும் தொக்குநிற்பதில்லை.

## சொல்லமைப்பு

பெரும்பான்மையான தமிழ்ச் சொற்களை உறுப்புக்களாகப் பிரித்து விடலாம். இந்த உறுப்பு இந்த இடத்தில் இருப்பதற்கு இன்னது காரணம்

எனவும் சுட்டிக்கூற முடியும். பின்பு அவ்வுறுப்புக்களை மீண்டும் இணைத்தால் பழைய சொல்வடிவம் வந்துவிடும். பிறமொழியில் அவ்வளவு தெளிவாகப் பிரிக்கவும் காரணம் காணவும் இயலாது.

| | | |
|---|---|---|
| Con-sci-ence | – | மனச்சான்று |
| Con-scien-tious | – | மனச்சான்றுள்ள |
| Con-sci-ous | – | உணர்வு, புலனுணர்வுடைய |
| Con-sci-ous-ness | – | புலனுணர்வுடைமை, உணர்வுடைமை |

இவற்றை நோக்குங்கால் ஆங்கிலச் சொற்களையும் பிரித்தறியலாம் போல் தோன்றும். உலக மொழிச் சொற்களனைத்தும், ஏதோவொரு வேர்ச் சொல்லிலிருந்து பலவுறுப்புக்களைப் பெற்று உருவானவையாய்த்தானிருக்கும். ஆயினும் அவற்றின் உறுப்புக்களைத் தெளிவாக, ஒரே மாதிரியாகப் பிரித்தறிய முடியாது. காரணம் காட்டிப் பொருள் கூற முடியாது. சிற்சில இடங்களில் மட்டுமே அமையும் மேற்கண்ட ஆங்கிலச் சொற்களிலும் வடிவப்பிரிவுதான் புலனாகிறதே தவிர, முழுமையாகக் காரணம் காட்டிவிட முடியாது.

Picked, Kicked என இறந்தகாலம் காட்டும் விகுதியாக இணைவன; Kindness, Goodness எனப் பண்புணர்த்தும் பின்னொட்டுகளாக இணைவன என இவ்வாறே பலவற்றை இனங்காண முடியும். எங்ஙனமாயினும் தமிழில் இவ்வமைப்பு பிற மொழிகளைவிடமேலோங்கியிருத்தல் கருதத்தக்கது.

'பாடிக் கொண்டிருக்கின்றனன்' என்பதில் பாடி என்பதற்குத் துணைவினை கொண்டு; இரு + கின்று + அன் + அன் என அடுத்து பகுக்கப்படும். முழுச் சொல்லாகக் கொண்டு, 'பாடிக் கொண்டிரு' என்பதைப் பகுதிநிலை எனலாம்.

பண்புச் சொற்களை எடுத்துக்கொண்டால் மேலும் விளங்கும். பசுமை, நன்மை, தீமை, கடுமை என்பன எல்லாம் பண்புச் சொற்கள். பசுமைப்புரட்சி, பசும் புரட்சி, பச்சைப் புரட்சி, பைம் புரட்சி என்றெல்லாம் இது வடிவெடுக்கும். எனவேதான் பைம் புரட்சி என்றாலும் பசுமை + புரட்சி என்றுதான் பிரித்துக் காட்டுவர். 'சேதா' என்பது செம்மை நிறமுள்ள பசு. 'செம்மை' தான் 'சேத்' அல்லது 'சே' ஆகிறது. பிறமொழிகளிற்போல் வரன்முறையின்றிச் சொல் திரிந்து நிற்பதையும் காணலாம்.

கார்க் கம்பெனி ஒன்று தான் உருவாக்கிய பேருந்துகளைப் பற்றி விளம்பரம் செய்தது. அதில் 'இவ்வண்டியிலுள்ள எல்லா உறுப்புகளையும் தனித்தனியே பிரித்தெடுத்து விட்டு, மீண்டும் இணைத்துப் பார்த்தால் எவ்விதச் சேதமும் இன்றிப் பழைய வடிவம் வந்துவிடும்'' என்று குறிப்பிட்டிருந்தது. தமிழ்ச் சொற்கள் பெரும்பான்மையானவற்றை அங்ஙனம் பகுத்துப் பார்க்கலாம்; சேதம் இன்றித் திரும்பச் சேர்த்துப் பார்க்கலாம்.

இரும்பு 'அடுக்கி' (Rack) ஒன்றையும் தனித்தனியே பிரித்து உறுப்புகளாக்கி விடலாம். பின் நம் தேவைக்கேற்பத் தட்டுக்களை உயரமாகவும் குறைவாகவும் வைத்து இணைத்துவிடலாம். தமிழ்ச் சொல்லமைப்பிலும் இவ்வசதி, வாய்ப்பு இருக்கிறது.

வானொலிப் பெட்டி பல உறுப்புகளாலாகியது. ஒவ்வோர் உறுப்பும் ஒரு காரணம் கருதி அதில் வைத்து இணைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ச்சொல்லுறுப்புக்களையும் தனித்தனியே பிரித்தெடுத்து விடலாம் என்பது மட்டுமன்றி, அவை ஒவ்வொன்றும் என்ன காரணம் பற்றி வந்துள்ளன என்றும் சுட்டிக் கூறிவிடலாம்.

| | | |
|---|---|---|
| **ஓடி** | – | **ஓடு + இ** |
| **பாடி** | – | **பாடு + இ** |
| **கூடி** | – | **கூடு + இ** |
| **நாடி** | – | **நாடு + இ** |
| **ஓட** | – | **ஓடு + அ** |
| **பாட** | – | **பாடு + அ** |
| **போற்றுதும்** | – | **போற்று + தும்** |
| **நாடுதும்** | – | **நாடு + தும்** |
| **நாடன்** | – | **நாடு + அன்** |
| **வெற்பன்** | – | **வெற்பு + அன்** |

இவை முதனிலை, இறுதிநிலை அல்லது பகுதி, விகுதி மட்டும் உடைய சொற்கள். இ, அ என்பன வினையெச்ச விகுதிகள். தும் என்பது தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி. வினைப் பகுதிகள் ஏவல்வினையாக இருக்கும். முழுச் சொல்லாக நின்று பொருள்தரும். பிறவுறுப்புக்கள் அமைப்பு உறுப்புக்களாகவும் சார்புறுப்புக்களாகவும் நின்று ஏதேனும் ஒரு பொருட் கூறை உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| **ஓடு + இன் + ஆன்** | – | **ஓடினான்** |
| **பாடு + இன் + ஆன்** | – | **பாடினான்** |
| **ஓடு + கின்று + ஆன்** | – | **ஓடுகின்றான்** |
| **பாடு + கின்று + ஆன்** | – | **பாடுகின்றான்** |

இவற்றுள் இன் இறந்தகால இடைநிலை; கின்று நிகழ்காலங் காட்டும் இடைநிலை; ஆன்–படர்க்கை, ஆண்பால், ஒருமை வினைமுற்று விகுதி.

பெயர்ச் சொற்களிலும் முதலும் இறுதியும் இடைநிலையும் அமைதல் காணலாம்.

**அறி + ஞ் + அர் – அறிஞர்**
**கலை + ஞ் + அர் – கலைஞர்**

இவை மூன்றுமே அடிப்படை உறுப்புக்கள். இவை தவிர வேறு சில உறுப்புக்களும் சார்புறுப்புக்களாக வரலாம். அவை மூன்று வகைப்படும்.

**ஓடு + கின்று + அன் + அன் – ஓடுகின்றனன்**
**பாடு + கின்று + அன் + அன் – பாடுகின்றனன்**

இவற்றில் இடைநிலைக்கும் இறுதிநிலைக்கும் இடையிலுள்ள 'அன்' சாரியை எனப்படும். அது பொருள்நோக்கி அமைந்தது என்பதைவிடச் சந்தம் நோக்கி அமைந்தது என்பதே பொருந்தும். தமிழ், செய்யுள் நடையோடு இணைந்தும் பிணைந்தும் வளர்ந்த மொழி. எனவே அதில் செய்யுள் நோக்கிய வடிவங்கள் இருப்பது இயல்பே.

**ஓடுகின்றனன் பாடுகின்றனன் உலப்பிலாநல் மகிழ்ச்சியினில்**
**கூடுகின்றனன் குதிக்கின்றனன் குவலயத்தினில் களிதுஞ்சவே!**

இங்கு 'ஓடுகின்றான் பாடுகின்றான்' என்பதைவிடச் சாரியை பெற்ற வினைவடிவமே சந்தஇனிமை தருகிறது.

**அளி + த் + த் + ஆன் – அளித்தான்**
**களி + த் + த் + ஆன் – களித்தான்**
**விழி + ப் + ப் + ஆன் – விழிப்பான்**
**அழி + ப் + ப் + ஆன் – அழிப்பான்**

முதனிலைக்கும் இடைநிலைக்கும் இடையேயுள்ள 'த்' அவ்விரண்டையும் இணைக்கும் 'சந்தி'யாகப் பயன்படுகிறது. இதுவும் புணர்ச்சிகருதி வரும் உறுப்பே தவிரப் பொருள்கருதி வருவதன்று

**புகுந்தனன்**
**புகு+த்+த்+அன்+அன்**

இதில் பகுதிக்கு அடுத்த 'த்' சந்தி. அவ்வாறே ஒலித்தால் புகுத்தனன் என்றாகும். நாமோ புகுந்தனன் என்றே ஒலிக்கிறோம். அந்த த்–ந் ஆனது 'விகாரம்' எனப்படும். இதனைச் சந்தி திரிந்த விகாரம் என்பர். இதுவும் புணர்ச்சியில் ஏற்படும் வேறுபாடேயாகும்.

**கண்டனன்**
**காண்+ட்+அன்+அன்**

இதில் பகுதி 'காண்' என்பது காண்டனன் என்றாகாமல், கண்டனன் என்றாகிறது. காண்–கண் எனத் திரிந்தது விகாரம். இதனைப் பகுதி திரிந்த விகாரம் என்பர். இதுவும் புணர்ச்சி கருதி ஏற்படும் வேறுபாடேயாகும். எனவே

விகாரத்தை உறுப்பு என்பதைவிட புணர்ச்சி கருதி வரும் திரிபு என்றே கருதலாம்.

இங்ஙனமாக பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்ற ஆறு உறுப்புக்களைப் பவணந்தி முனிவர் குறிப்பிடுகின்றார்.

**வந்தனன்**

**வா – பகுதி**

**வா, வ என்று குறுகியது பகுதி திரிந்த விகாரம்**

**த் – சந்தி**

**ந் – 'த்' என்ற சந்தி திரிந்த விகாரம்**

**த் – இடைநிலை**

**அன் – சாரியை**

**அன் – விகுதி**

இவ்வாறு ஆறு உறுப்புக்களும் அமைதல் காணலாம்.

வேறு சில அமைப்புக்களும் இதனை ஒட்டிச் சிந்திக்கற்பாலன உள. அவையெல்லாம் மேன்மேலும் ஆராய்ச்சிக்கு உரியவை. பகுதி ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டுவதென்பது ஒரு மரபு.

**புகு + ஆன் – புக்கான்**

**நடு + ஆன் – நட்டான்**

**கெடு + ஆன் – கெட்டான்**

**உறு + ஆன் – உற்றான்**

ஒரு பதத்தை, சொல்லை இவ்வாறெல்லாம் பகுத்துப் பார்க்கலாம் என்பது தமிழில் மட்டுமே இன்றும் கைகூடும் கலை. பிறமொழிகள் இதனை வைத்திருந்து விட்டுவிட்டன அல்லது இப் பகுப்புக்கு இடமளிக்காது முதிர்ந்துவிட்டன.

தனிநிலை, ஒட்டுநிலை, உட்பிணைப்பு நிலை மூன்றில் தனிநிலையையும் ஒட்டுநிலையையும் பேணிக் காக்கும் மரபு தமிழில் இருப்பதால்தான் அது கன்னித் தமிழ் என்று இன்றும் போற்றப்படுகிறது போலும்.

தமிழிலும் வர்றான், வாட்றான், வெள்ளாட்றான்ங்க, கொல்றான்ங்க என்று ஒட்டுநிலை நோக்கிய போக்கைப் பேச்சுத் தமிழில் கேட்கிறோம். வாட்டுகிறான், வாட்டுகின்றான் என்றால் பகுதிவிகுதி முதலியன பகுக்கலாம். வாட்றான் என்றால் எவ்வாறு பிரிப்பது? உட்பிணைப்பாகி விடுவதைக்

கருத்திற்கொள்ள வேண்டும். பேச்சுத் தமிழ் வேறாகவும் எழுத்துத் தமிழ் வேறாகவும் போற்றப்படுதல் அம் மொழியைக் காப்பாற்றும் என்றால் அதைக் கைவிடுவானேன்?

தமிழ் இருவழக்கு மொழி; பேசுவதுபோல் எழுதுவதில்லை; எழுதுவதுபோல் பேசுவதில்லை.

இன்று பேச்சு வழக்கு ஒலித் திரிபுகளைச் சில நாளிதழ்கள் எழுத்தில் புகுத்தித் தமிழைச் சிதைக்க முயல்கின்றன.

தமிழில் இதழ் நடத்திக் கொள்ளைப் பணம் சேர்க்கும் இக்கூட்டம், அந்தத் தமிழையே கொல்ல முயல்கின்றது. இந்த நன்றி கொல்லும் கூட்டத்தை, என்ன செய்யலாம்? சிந்தியுங்கள்!

✣ ✣ ✣

# 13. நான்குவகைத் தமிழ்ச் சொற்கள்

தமிழ்ச் சொற்களை வகைப்படுத்தியுள்ள திறமும் சற்றே எண்ணிப் பார்க்கத்தக்கது.

பெயரும் வினையுமே அடிப்படைச் சொற்கள்.
பெயர் வேற்றுமை ஏற்கும்; காலம் காட்டாது.
வினை காலம் காட்டும்; வேற்றுமை ஏற்காது.

பெயர் காலங்காட்டும் தன்மையை நோக்கிச் செல்லும்போது குறிப்புவினை எனப்படுகிறது. பொன்னன் என்பது பெயர். அவன் பொன்னன் என்று ஒருவனைச் சுட்டும்போது பொன்னன் என்பது அவனது இயற்பெயராயிருந்தால் குறிப்புவினையாகாது. பெயர் அங்கு பயனிலையாக வந்துளது. 'அவன் பொன்னையுடையவனாக இருக்கிறான்' என்று காரணங்கருதிக் கூறப்பட்டால் பொன்னன் என்பது குறிப்பால் காலங்காட்டுவதாகிறது. அப்போது அது குறிப்பு வினையாகிறது.

வினை வேற்றுமையுருபை ஏற்குமாறு மாறியமையும் போது 'வினையாலணையும் பெயர்' தோன்றுகிறது. வந்தான் என்பது வினை; வந்தவனைப் பார்த்தேன் – வினையாலணையும் பெயர்.

பெயரில் உயர்திணை சுட்டுவன; அஃறிணையைக் குறிப்பன; இருதிணைக்கும் பொதுவானவை என மூவகை உள. வினையிலும் இம்மூவகை உள.

மலர், வெடி, குடி என்ற பெயர் வடிவங்கள் மலர்வது, வெடிப்பது, குடிப்பது என்ற வினைகளிலிருந்து பிறந்தனவாகும். நிழல், சித்திரம், அழல் என்ற, பெயர்கள் நிழற்றிய (நிழல்செய்த), சித்திரித்தான், அழன்றான் என வினைகளாகின்றன. ஒன்றைச் சுட்டுவது பெயர் என்றும் அதன் அசைவைக் குறிப்பது வினையென்றும் ஆகின்றன. பெயரை நிலையாற்றல் என்றும் வினையயை இயங்காற்றல் என்றும் அறிவியல் வழியில் கூறலாம். பெயரைச் சிவமென்றும் வினையைச் சத்தி என்றும் தத்துவவழியிலும் குறிப்பிடலாம்.

பெயரும் வினையுமே அடிப்படையான சொற்கள்: அவற்றை அடுத்து வழங்குவனவே இடை, உரிகள்.

## பெயர்ச்சொற்கள்

| | | |
|---|---|---|
| வேற்றுமைகளை ஏற்கும் | – | முருகனைப் பார். |
| எழுவாயாகத் தொழிற்படும் | – | முருகன் வந்தான் |
| அடைகளை ஏற்கும் | – | அழகிய முருகன் |
| உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை மூன்றற்கும் உரிமையுடை யனவாய் வரும் | | சாத்தன் (வந்தான்) சாத்தி (வந்தாள்) சாத்தன் (வந்தது) |
| காலம் காட்டா. | | |

## வினைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| காலம் காட்டும் | – | வருவான், வருகிறான், வந்தான் |
| | – | வேற்றுமை உருபை ஏலா |
| முற்றாகத் தொழிற்படும் | – | அவன் வந்தான் |
| எச்சமாகவும் செயற்படும் | – | வந்து போனான் வந்த பையன் |
| அடைகளை ஏற்கும் | – | விரைவாக வந்தான் அழகாக நடந்தான் (எச்சத்தின் மறுவடிவங்களே) |
| உயர்திணை, அஃறிணை, பொதுத்திணை மூன்றிலும் வரும் | – | வந்தான் வந்தது வருக |
| விகுதிகள் திணை பால் எண் இடம் உணர்த்தும் | – | வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன |

இடையும் உரியும் பெயர் வினைகளைத் தழுவி நிற்கும் சொற்களாகும். இவற்றுள் சில பெயர் வினைகளாகவே கொள்ளத்தக்கனவாய்க் காணப்படும். எனினும் பெயர் வினைகளுடன் இணைந்து, தம் தனித்தன்மையை விடுத்து அவற்றின் பொருளை வேறுபடுத்தவும் விரிவுபடுத்தவும் பயன்படுவனவாய் அமையும்போது இடை, உரி எனப்பட்டன.

## இடைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| பெயர் வினைகளை அடுத்து வரும் | – | முருகனை, எழுமின் |

| | | |
|---|---|---|
| அவற்றின் பொருளை வேறுபடுத்த உதவும் | – | முருகனால், விழிமின் |
| | – | முருகனுக்கு, வாராதீர் |
| தனக்கெனப் பொருள் இராது (ஒரு காலத்தில் இருந்து இழந்திருக்கக் கூடும்) | | போல– தனித்துப்பொருளில்லை – நூலைப் போலச் சேலை |
| சார்ந்துவரும் சொல்லின் உறுப்பாய் நிற்பதுண்டு, அதனை அடுத்து வேறாய் நிற்பதுமுண்டு | | கடந்தான் (ந், த், ஆன்) மலையின்கண் |

புணர்ச்சியில் பொருளுணர்த்துமாறு வரும் சாரியைகள்; காலங்காட்டும் உறுப்புகள்; வேற்றுமை உருபுகள்; அசைநிலை; இசைநிறை; உவம உருபுகள்; குறிப்பில் பொருள்தருவன யாவும் இடைச் சொற்களாகும்.

## உரிச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பெயர் வினைகளை அடுத்து வரும்; அவற்றிற்கு அடையாக நிற்கும் | – | தடமருப்பு, நனி தின்றான் |
| இசை, குறிப்பு, பண்பு பற்றிய அடைகளாக வரும் | – | கதழ்உறை, வம்பமாரி நளி இருள் |
| வெளிப்படப் பொருள் தருவன, வெளிப்படப் பொருள் தராதன என இருவகையுள | – | அழகு உரு(நிறம்) மென்மை சால (மிகவும்) மிகு கலி (ஆரவாரம்) |
| இடைச்சொல் போலாது தமக்கெனப் பொருளுடையன. | | |
| ஒரு சொல்லுக்குப் பலபொருள் தருவன | – | கடி |
| பல சொல்லுக்கு ஒருபொருள் தருவன என்ற அரிய வழக்காறுகள் உடையன | – | சால, உறு, தவ, நனி, கழி, கூர் – மிகல் |
| செய்யுளுள் வழங்கும் சீர்மை மிக்கன | – | 'கதழ் உறை சிதறிக் கார்செய் தன்றே' |

நான்குவகைச் சொற்களையும் முன்பு பயன்படுத்திய முறைக்கும் இன்று பயன்படுத்தும் முறைக்கும் சிற்சில வேறுபாடுகள் உள. செய்யுளுள் பயன்படுத்திய முறையினின்றும் உரைநடையில் பயன்படுத்தும் முறை சிறிதே நடை வேறுபாடு காட்டுமன்றோ? மேலும் ஆங்கில நடைப்போக்கும் சொல்லாட்சிப் போக்கும் இன்றைய தமிழில் படிந்துள்ளன.

✣ ✣ ✣

## இல்லத்தரசிகன் - 'ஒய்பு' ஆகியது ஏன்?

வானொலிப் பண்பலை மிக்க கூடுதலாக, சிற்றூர்ப்புற மக்களிடையே வினா–விடைகளாகப் பரவுகிறது.

என்ன செய்யுறீங்க?

தறி வச்சிருக்கோம்!

லூம்சா? கைத்தறியா?

கையாலேதாங்க!

உங்க ஹஸ்பெண்டுக்கு உதவுறதுண்டா?

இல்லிங்க, வீட்டு வேலைதாங்க.

ஒகோ! ஹவுஸ் ஒய்பா?

தறி நெய்து வாழும் சிற்றூர் எளிய மக்களிடமும் 'ஹவுஸ் ஒய்பு, ஹஸ்பெண்டு எனப் பரப்பும் இந்த 'நன்றியற்றுதுகளை', நினைக்கும்போது சம்பந்தர் அன்று சமணர்களைக் கழுவில் ஏற வைத்ததுதான், நினைவுக்கு வருகிறது.

# 14. மொழி முதல் எழுத்துக்கள்

'தமிழின் இலக்கண வரையறை வேறெம்மொழியினும் காணாதது' என்று, ஓர் ஆங்கிலேயர் 'இந்து' நாளிதழுக்கு எழுதிய மடலொன்றில் குறிப்பிட்டிருந்தார். தமிழ் இலக்கணத்தைப் படிப்பதைவிடத் தமிழின் இயல்பை மட்டும் விளங்கிக்கொண்டாலே போதும். ஒவ்வொரு மனிதனிடத்திலும் மனித இனத்திற்குரிய பொதுமைப்பண்புகளும் இருக்கும்; அவ்வம் மனிதனுக்கேயுரிய தனிமைப் பண்புகளுமிருக்கும். ஒரு புதினத்தைப் படைக்கும் பொழுது அதில் இடம்பெறும் பாத்திரத்தின் பொதுமைப்பண்பை வெளிப்படுத்துவதைவிட, அதன் தனிக் குணச்சித்திரத்தைப் படைக்கவே ஆசிரியன் முந்துகிறான். படிப்பவனும் அதையே எதிர்பார்க்கிறான். மாந்தரிலும் ஒரு சிலரிடையேதான் தனித்தன்மை (Individuality), தனி ஆளுமை (Personality) பொருந்தியிருக்கும். மற்றவர்கள் எல்லா மனிதர்களையும் போலச் சராசரி மனிதர்களாகவே தென்படுவர். கதை இலக்கியங்களில் இத் தனி ஆளுமையுடையோர் சிறப்பிடம் பெறுவர். அவர்களைப் பற்றிப் படிப்பது சுவையாக இருக்கும். வரலாற்றிலும் இத்தனியியல்புடையாரே தலைமையிடம் பெறுவர். அவ்வாறே மொழிகள் பல எல்லா மொழிகளையும் போலப் பத்தோடு பதினொன்றாக இருக்கும். ஒருசில மொழிகள் தமக்கெனத் தனியியல்புகளைப் பெற்றுத் திகழும். தமிழ் அத்தகைய தனிப்பண்புடைய மொழிகளில் ஒன்று.

இந்திய நாட்டில் வடமொழியும் தென்மொழியும் தொன்மைமிக்க மொழிகள் என்பது மட்டுமன்று; தனித்தனி ஆளுமையும் இயல்பும் அமைப்பும் கொண்ட மொழிகளுமாம்.

மொழியின் அமைப்பு, வேறுபாடு, வளர்ச்சி நிலைகள் பற்றிய பொதுத்தன்மைகளைக் கற்றறிந்து, மேனாட்டார் எடுத்து விளக்கிய மொழியியற்கோட்பாடுகளைத் தமிழ்ப்படுத்தி விளக்குவதிலேயே, சில மொழியியல் அறிஞர்களின் நேரம் கழிந்து கொண்டிருக்கிறது. தமிழ் இலக்கணத்தையும் ஆழக் கற்றவர்கள் தமிழின் தனி நீர்மைகளையும் நன்குணர்ந்து, எடுத்துரைத்து வருகின்றார்கள்.

## ஒரு தமிழ்ப்பண்பு

பல்கலைக் கழக வண்டி ஒட்டுநர் ஒரு மடல் எழுதியிருந்தார். அதில்,

**டிரைவர் பெருமாள்**

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

என்று அனுப்புநர் பெயர் குறிக்கப்பட்டிருந்தது. Driver - ட்ரைவர் என்றாகும். முதலில் நிற்கும் 'D' மெய்தானே? ஆனால் தமிழில் அது டிரைவர் என்றே ஒலிக்கப்படுகிறது.

ஒரு மிதிவண்டி ஒட்டி "ஐயா டேசனுக்குத் தானே... அஞ்சு ரூபா கொடுங்க" என்றான். நான் ஸ்டேஷன்' என்று அழுத்தி உச்சரிக்கும் 'ஸ்' அவனால் விடப்பட்டது கண்டேன்.

**"உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா" (தொல்.60)**

என்ற தொல்காப்பியச் சூத்திரம் நினைவிற்கு வந்தது. தமிழில் மட்டுமே தனிமெய்யெழுத்து மொழிக்கு முதலில் நிற்பதில்லை. முறையாக எண்ணிப் பார்த்தால் 'கடல்' என்ற சொல்லில் க்+அ=க என்பதே மொழிமுதலாகும். ஆனால் தனி க் மொழிமுதலாவதில்லை; அஃது உயிருடன் கூடியே மொழி முதலாகிறது.

'க்யா' என்பது இந்தி; 'க்ருபா' என்பது சமஸ்கிருதம். ஆனால் கிளாஸ், பிரியம் என ஒலிப்பது போலக் 'கியா' 'கிருபா' என்றே இவற்றை ஒலிக்கிறோம்.

## எப்போது மெய் முதலாகிறது

க்+ய்+ஆ = க்யா. க்+ர்+உ+ப்+ஆ = க்ருபா முதலில் இருமெய்கள் வந்தால் முதல்மெய் தனிமெய்யாய் மொழிமுதலாகிறது.

Put, Doctor - இவற்றில் P+u என்பது பு என்று ஒலிக்கப்படும்போது தமிழ் உயிர்மெய் வடிவமுடையதாகிறது. புட் என்பதையே தமிழில் எழுதினால் ப்+உ+ட் என்றாகும். மெய்யை அடுத்து உயிர் வருவதால் அது 'பு' எனவே ஒலிக்கும். DO-டு. Ta-ட. ஒரே ஒரு வேறுபாடு. ஆங்கிலத்தில் KA DO என்று தனித்தனியே எழுதுகிறோம். அதே போலத் தமிழிலும் எழுதினால் க்அ, ட்ஓ என்றெழுத வேண்டும். ஆனால் Platform என்னும் பொழுது முதலில் உள்ள P மெய்யாகவே நிற்க, la உயிர்மெய்யாய் அடுத்து நிற்கிறது. இதிலிருந்து ஒருண்மை புலனாகிறது. தமிழில் இருமெய்கள் அல்லது அதற்கும் மேற்பட்டு மூன்றுமெய்கள் மொழி முதலாவதில்லை. தனி ஒரு மெய்யே, உயிருடன் கூடி மொழிமுதலாகும். அதனால்தான் தமிழன் ப்ரியாவைப் பிரியா என்கின்றான்; ஸ்ருதியை சுருதி என்கின்றான். 'கிளாசை எடுத்து வா', 'கிளப்புக்குப் போக வேண்டும்' என்றெல்லாம் இயல்பாக ஒலிக்கப்படுகின்றன.

## வடமொழியில்

| | | | |
|---|---|---|---|
| ப்ரஜா | – | பிரஜை | (ப்,ர் முதலில் இருமெய்கள்) |
| க்ரோத | – | குரோதம் | (க்,ர் " " ) |
| ஸ்தலா | – | தலம் | (ஸ்,த் " " ) |
| ந்யாயா | – | நியாயம் | (ந், ய் " " ) |
| க்ருபா | – | கிருபை | (க்,ர் " " ) |

## ஆங்கிலத்தில்

| | | | |
|---|---|---|---|
| Train | - | T,R | (இரு மெய்கள்) |
| Plan | - | P,L | ( " ) |
| Throat | - | T, H, R | (மூன்று மெய்கள்) |
| Chromium | - | C, H, R | ( " " ) |

மீண்டும் ஒருமுறை தொல்காப்பியத்தை நினைத்துப் பார்ப்போம். ''உயிர்மெய்யல்லன மொழிமுதலாகா''. இன்றளவும் உண்மையானது, நிலைபெற்றது அது. "என்ன த்ரில்" என்று விழிப்போடு அழுத்தி ஒலிப்பவன்கூடக் கொஞ்சம் அசந்தபோது "என்ன திரில்லா இருக்குது சார்" என்கிறான்.

மற்றவற்றில் கருத்து வேறுபாடு, புதுமை புகுத்தல் வந்துவிட்டன. ஆனால் முதலில் உயிர்மெய்யோசையே வருமென்பது மட்டும் மக்களிடம் மாறாமல், இயல்பூக்கச் செயலாகவும் ஆழ்ந்துணர்ந்து செயற்படும் கூறாகவும் காணப்படுகிறது.

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்பது மிகவும் பொருந்தும். நீர்மை என்பது நெகிழ்வுடைமை என்றும் பொருள்படும். இனிமையும் எளிமையும் நோக்கியே தமிழ் வழங்கியுள்ளது. முதலில் மெய்நின்று ஒலித்தால் அருமையுடையதாகும். உயிருடன் கூடினால் எளிதாக ஒலிக்கவரும். 'த்யாகம்' என்றால் சற்றே மூச்சைநிறுத்தித் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது.

மொழிக்கு முதலில் எவ்வெவ்வெழுத்துக்கள் வரும் என்ற பட்டியலைப் பார்த்தாலும், எளிமையும் இனிமையும் கருதிய தமிழ்ப்பண்பு வளர்ச்சி புலனாகும். உயிர்கள் பன்னிரண்டும் மொழிமுதலாக வரும். மெய்களில் உயிருடன் கூடி மொழிமுதலில் வருபவை யாவை?

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| (க) | (ங) | (ய) |
| ச | ஞ | ர |
| ட | ண | ல |
| (த) | (ந) | (வ) |
| (ப) | (ம) | ழ |
| ற | ன | ள |

தடித்த எழுத்துக்கள் பத்தும் மொழி முதலில் வரும். இவற்றுள் சில பன்னிரண்டு உயிர்களுடனும் மொழிக்கு முதலில் வராமல், சிலவற்றுடன் மட்டுமே வரும். இன்றும் ற, ண, ழ, ள, ன போல்வன மொழி முதலாவதில் கடினம் உளது. வேறு மொழிகளிலும்கூட இவை மொழிமுதலாவதில் இடர்ப்பாடுளது.

### ட, ர,ல

மேற்கண்ட மூன்றும் எளிதாகப் பிறமொழிகளில் முதலாகின்றன. தமிழில் வழங்கும் வேற்றுமொழிச் சொற்களில் அவை பன்னிரண்டு உயிர்களுடனும் மொழி முதலாகின்றன.

| | | |
|---|---|---|
| லட்சம் | ரயில் | டமாரம் |
| லாடம் | ராடார் | டார்வின் |
| லிண்டல் | ரிவர்சில் எடு | டிக்கட்டு |
| லீலை | ரீல் விடுறான் | டீக்கடை |
| (லுக்கு) | (ருக்குமணி) | (டும்) |
| லூட்டி | ரூபாய் | (டூம்) |
| லெட்டர் | ரெட்டி | டெட்டால் |
| லேட்டு | ரேட்டு | டேட்டு |
| லைட்டு | ரைட்டு | டைட்டு |
| (லொட்டு) | ரொட்டி | டொப்பி |
| லோட்டா | ரோடு | டோக்கன் |
| லௌகீகம் | ரௌலட் | டௌட்டு |

முன்னைய மரபுப்படி இராமன், இலட்சியம் என்று கூற வேண்டும். மற்றபடி இவையாவும் தமிழ்ச் சொற்கள் அல்ல. தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்கள் இவை. மொழிமுதலாகும் என விட்டுவிடுவதா? ஆங்கிலத்தில் ஆங்கில ஒலிப்புக்கு வேறான இலத்தின், கிரேக்கச் சொற்கள் சாய்வெழுத்தில் (Italic letters) குறிக்கப்படுதல்போல் இவற்றில் பின்பற்றலாமா? பேச்சுத் தமிழில் இவற்றை ஏற்பினும் எழுத்துத் தமிழில் சாய்வெழுத்தானன்றி எழுதவே கூடாது.

## பெயர்சுட்டும் போது

'முதலா ஏன தம்பெயர் முதலும்' (தொல்.66) என்பார் தொல்காப்பியர். மொழிக்கு முதலாகா எனக் கூறப்பட்ட எழுத்துக்களும்கூட தம் பெயர் கூறுமிடத்து மொழி முதலாகும்.

'ரகார ழகாரம்', 'டகாரம்', 'றகரம், 'லௌகான்' என்றிவ்வாறு மொழிமுதலாகுமேல், சொற்களிலும் தொடர்வதற்கு இடமுண்டா?

சில வட்டாரத்தினர் மனிதர்களின் இயற்பெயர்களைச் சுட்டுமிடத்து மொழிமுதலாகாது என்ற எழுத்துக்களும் மொழிமுதலாகின்றன. 'ராம வந்தார்', 'ராவன்னா மானா' வந்தார் என்பது செட்டி நாட்டு வட்டார வழக்கு. 'லேனாவைப் பார்த்தேன்' – 'லே' என்றாலும் அது லெ என்ற குறிலைத்தான் குறிக்கிறது. 'ரேனா' (ரெங்கனாதன்) என்பதுண்டு. "காவ்ன்னா வந்தார், பேனா ரீனாவுடன் பேசினார்" என்பன பல குறிக்கத்தக்கன.

உலகில் பல்வேறு மொழிகளில் காணப்படும் ஊர்ப் பெயர்களையும் ஆட்பெயர்களையும் குறிக்கும்போது இந்த இடர்ப்பாடு மிகுகிறது. டோக்கியோ, டில்லி, லாகூர், ராணிப்பேட்டை, லண்டன், ரங்கூன் போல்வனவும் ராஜீவ், ரீகன், போல்வனவும் நினைந்து பார்க்கத்தக்கன.

சில தமிழ்ச்சொற்கள் பேச்சுமொழியில் மருவி வழங்கும் பொழுது மொழிமுதலாகா எழுத்துக்களை முதலாகக் கொண்டு ஒலிக்கப்படுகின்றன. உருக்குமணி ருக்குமணி ஆகிறது. அராவுகிறது என்பது ராவுகிறது என்றாகிறது. கண்ணராவி (கண் + அராவி) கண்ராவி என்றும் அரம்பம் (அராவும் கருவி) ரம்பம் என்றும், இலக்கு லக்கு (அந்த லக்கிலே பார்த்தேன்) என்றும் இவ்வாறு ஒலிக்கப்படுகின்றன. நிரம்ப, ரொம்ப ஆவதும் நமக்கு நிரம்பத் தெரிந்ததுதான்.

கம்பர் தம் பல்லாயிரம் பாடல்களிலும் இராமன் கதையையே கூறுகின்றாராயினும் ஓரிடத்தில்கூட இராமனை ராமனென்று குறிக்கவில்லை. அவர் வடமொழிப் பெயர்களைத் தமிழ் ஒலிப்படுத்தியும் மொழிப்படுத்தியும் ஆக்கும் பெயரமைப்புகள் குறிப்பிடத்தக்கன. அவற்றை நம் இளம் தலைமுறையினர் அறியவேண்டாமா? ரிஷபம் இடபமாய், லட்சியம், இலட்சியமாய், பைபிள் விவிலியமாய், ஜாக்கப் யாக்கோபு ஆய் ஆக்கம் பெற்ற பழம் மரபுகளை என்ன செய்வது? இவற்றை அவ்வாறே எடுத்தாள்கின்ற பழந்தமிழிலக்கியங்களை எதிர்கால இளம்தலைமுறையினர் விளங்கிக் கொள்ள வேண்டாமா?

பழைய மரபையும் விட்டுவிடாமல், இன்றைய புதிய சொல்லாட்சிகட்கும் இடம் கொடுத்துத் தமிழின் இனிமையும் எளிமையும் இளமையும் கெடாமல் வரம்புகட்டவேண்டிய இடம் இது. இதில் தமிழர்கள் ஒற்றுமையுடன் கூட்டுணர்வோடு செயற்பட வேண்டும். வெறும் விவாதங்கட்கு இடம் கொடுத்துத் தமிழை இழந்துவிடக் கூடாது.

## ஙப்போல் வளை

'ங்' என்ற மெய் 'அ' என்ற ஒருயிருடன் மட்டுமே மொழி முதலாகிறது. ஙனம் என்பது சான்று. ஏனைய எவ்வுயிருடனும் ஙகரம் மொழிமுதலாவதில்லை. 'ங'வைத் தவிர, அந்த உயிர்மெய் வரிசையில் ஏனைய பதினொன்றும் எவ்விதப் பயன்பாடுமின்றியிருந்தாலும் ஒருயிருடன் மட்டும் பயன்படும் தகுதிக்காக அவ்வுயிர்மெய் வரிசைமுழுவதும் என்றென்றும் தமிழ் அரிச்சுவடியில் இடம் பெறுகிறது. அதுபோலவே ஒருவன் தன் உழைப்பு, பயன்பாடு ஆகியவற்றின் மூலம் தன் குடும்பத்தையும் இனத்தையும் வளைத்து, வாழச்செய்ய வேண்டும் என்பது பொருள்.

## ஞயம்பட உரை

'நயம்பட உரை' என்பதே போலியாய் 'ஞயம்பட உரை' என வழங்குகிறது. ஞமலி என்பதிலும் 'ஞ' மொழி முதலாகிறது. இங்ஙனம் அருகிய வழக்குடையனவற்றைத் தேடிப்பிடித்துக் கற்க வேண்டும்.

## ஆத்திசூடியும் மொழிமுதல் எழுத்துக்களும்

மொழி முதலாகும் எழுத்துக்களின் வரிசைப்படி சிறிய அறநூல் ஒன்றை எழுதி, 'ஆத்தி சூடி' எனத் தந்தார் ஔவையார். அதன்பிறகு எத்தனையோ ஆத்திசூடிகள் எழுதப்பட்டுள்ளன. ஒலித்தற்கு எளிமையுடையனவும் இனிமையுடையனவுமான மொழி முதல் எழுத்துக்களால் ஆன சொற்கள் இவற்றில் பயின்று வருகின்றன.

**அறஞ்செய விரும்பு**
**ஆறுவது சினம்**
**இயல்வது கரவேல்**
**ஈவது விலக்கேல்**

– என்னும்போது நினைவில் நிற்கும் வண்ணம் எளிமையாய் அமைகின்றமை காண்கிறோம்.

க், ங், ச், ஞ் முதலிய பதினெட்டு மெய்களையும் மொழி முதலாகக் கொண்ட அறவுரைகளையும் ஔவையார் கூற முனைகின்றார்.

| | |
|---|---|
| **கண்டொன்று சொல்லேல்** | **(க்+அ)** |
| **ஙப்போல் வளை** | **(ங்+அ)** |
| **சனி நீராடு** | **(ச்+அ)** |
| **ஞயம்பட உரை** | **(ஞ்+அ)** |

இவ் வரிசையில் ட், ண் வரும்போது,

| | |
|---|---|
| **இடம்பட வீடெடேல்** | **(இ+ட்+அ+ம்)** |
| **இணக்கம் அறிந்திணங்கு** | **(இ+ண்+அ)** |

இவ்வாறே மொழி முதலாகா மெய்களுக்கெல்லாம் உயிர்முதன் மொழியாக்கி, அம் மெய்யை இரண்டாவதாக வைத்துத் தொடர்களை அமைக்கின்றார் ஔவையார்.

| | |
|---|---|
| **ய்** | **இயல்பு அலாதன செயேல்** |
| **ர்** | **அரவம் ஆட்டேல்** |
| **ல்** | **இலவம் பஞ்சில் துயில்** |
| **ழ்** | **அழகு அலாதன செயேல்** |
| **ள்** | **இளமையிற் கல்** |
| **ற்** | **அறனை மறவேல்** |
| **ன்** | **அனந்தல் ஆடேல்** |

ஔவையின் ஆத்திசூடியில் 109 தொடர்கள் உள்ளன. ஒலித்தற்கு எளிமையுடைய, மொழி முதலாகும் எழுத்துக்களின் அடிப்படையில் இவ்அகரவரிசை ஆத்திசூடியில் அமைந்துள்ளது.

## பாரதியாரின் புதிய ஆத்திசூடி

ஞா, ஞெ, ஞொ மூன்றுமே மொழி முதலாகும் என்றார் தொல்காப்பியர். (ஞாலம் – உலகு. ஞெகிழி – தீக்கடைகோல். ஞொள்கல் – சுருங்குதல்)

ஞ, ஞா, ஞெ ஞொ நான்கும் வருமென்றார் பவணந்தியார். (ஞமலி – நாய்)

**ஞமலிபோல் வாழேல்**
**ஞாயிறு போற்று**
**ஞிமிறென இன்புறு**
**ஞெகிழ்வது அருளின்**
**ஞேயம் காத்தல் செய்**

பாரதியார் ஞ, ஞா, ஞி, ஞெ, ஞே ஆகியவற்றை மொழி முதலாக்கிக் காட்டுகிறார். ஞிமிறு–வண்டு. ஞெகிழ்வது, ஞேயம் என்பன நெகிழ்வது. நேயம் என்பனவற்றின் போலிகள்.

ரகர, லகர வரிசைகள் மொழிமுதலாகலாம் என்பார் போலப் பாரதியார் சில தொடர்களை யாத்துள்ளார்.

**ரசத்திலே தேர்ச்சி கொள்**
**ராஜசம் பயில்**
**ரீதி தவறேல்**
**ருசிபல வென்றுணர்**
**ரூபம் செம்மைசெய்**
**ரேகையில் கனிகொள்**
**ரோதனம் தவிர்**
**ரௌத்திரம் பழகு**

ராஜசம் – உயர்குணம். ரீதி – முறைமை. ரூபம் – உருவம், உடல் தோற்றம், ரேகை – பழுத்த நிலை, ரோதனம் – வருத்தம். ரௌத்திரம் – வீரம்.

**லவம் பல வெள்ளமாம்**
**லாகவம் பயிற்சிசெய்**
**லீலை இவ்வுலகு**
**(உ)லுத்தரை இகழ்**
**(உ)லோகநூல் கற்றுணர்**
**லௌகிகம் ஆற்று**

லவம் – துளி. லாகவம் – எளிதாகுமளவு. லீலை – விளையாட்டு, லௌகிகம் – உலகியல், டாக்டர் வ.சுப.மாணிக்கம் தம் 'தமிழ்சூடி'யில்,

**ஞமலியின் உணர்**
**ஞாலம் பார்**
**ஞிணம் பெருக்கேல்**
**ஞெகிழ்ச்சி வேண்டும்**
**ஞேயரை ஆராய்**
**ஞொள்குதல் செய்யேல்**

என்கிறார். ஞிணம், ஞெகிழ்ச்சி, ஞேயர் என்பன நிணம் (குருதிச்சதை), நெகிழ்ச்சி, நேயர் என்பவனவற்றின் போலிகள். பிறர் அருகிய வழக்கென விட்டுவிட்ட சில மொழிமுதல் எழுத்துக்களை இவர் விடவில்லை.

**நௌவியின் மருளேல்**
**பையவும் ஓட்டு**
**பௌவம் செல்**
**மையம் கடைப்பிடி**
**மௌவல் சூடு**
**வௌவியாய் இரேல்**

நௌவி – மான், பௌவம் – கடல், மையம் – நடுவுநிலை, மௌவல் – முல்லைப்பூ, வௌவி – பிறர் பொருளைக் கொள்ளக் கருதுவோன்.

தொல்காப்பியர் 'உயிர்மெய்யல்லன மொழிமுதலரகா' என்பதை முதலில் சொல்லிவிட்டே, பிறகு எவையெவை மொழிமுதலாகும் என்ற புள்ளிவிவரத்திற்கு வருகிறார். தம்பெயர் மொழியுங்கால் டகாரம், லகாரம், ரகாரம் என்றாற்போல அனைத்தும் மொழிமுதலாவதைப் பார்த்தும் மொழியின் அடிப்படைப் பண்பை நன்குணர்ந்தும் அவர் சொன்ன இலக்கணம் இன்றளவும் தன் ஆட்சியைச் செலுத்துகிறது. திராவகம், பிராபிளம், பிரியம், கிளாசு என்றெல்லாம் ஒலிப்பதினின்றும் தமிழியல்பு கெடாது. மிகவும் அன்னியமாய் உணர்ந்து பேசும்போதுதான் படிப்பாளிகள் பலர் மெய்முதலாக ஒலிக்கிறார்கள். மற்றபடி இயல்பாகப் பேசுவார் அனைவரும் தமிழில் உயிர்மெய் முதலாகவே ஒலித்துப் பேசுகிறார்கள். 'எட்டாவது கிராஸ்' என்றுதான் ஒருவர் தம் தெருவைக் குறித்திருந்தார். அவர் இன்னும் தமிழியல்பைக் 'கிராஸ்' (cross) செய்யவில்லை என்பதையே இது காட்டுகிறது.

பிறமொழிச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பயன்படுத்த வேண்டும். பஸ்–பேருந்து, ரயில்–தொடர்வண்டி. சில சொற்கள் தவிர்க்க முடியாதன அறிவியல் போல இன்றியமையாதன, ஊர், ஆட்பெயர்கள் வரும்போது, தமிழ் ஒலிப்பு வடிவமாக்கிவிடுதல் நல்ல மொழிமரபாகும்.

✣ ✣ ✣

# 15. மொழியிறுதி எழுத்துக்கள்

மொழி முதலாவதற்கு எழுத்துக்களின் எளிமையும் செவிக்கு இனிமையும் காரணங்களாகியமை போலவே, மொழியிறுதி எழுத்துக்களுக்கும் இவை காரணங்களாகின்றன.

உயிர்கள் பன்னிரண்டும் ஏதேனும் ஒரு வகையில் மொழியிறுதியாகின்றன. இவற்றுட் சில பதினெட்டு மெய்யுடனும் கூடி இறுதியாகும் பொழுது மிக அருகிய வழக்காறுடையனவாகின்றன.

தனி உயிர் மொழிக்கு இறுதியில் வருகிறதா என்று பார்த்தால் அளபெடையில் தவிரத் (ஆஅ, ஈஇ, ஊஉ என இவ்வாறு) தனி உயிர்கள் மொழிக்கு இறுதியில் வருவதில்லை. உயிர்கள் மெய்யுடன் கூடியே மொழிக்கு இறுதியில் வருகின்றன. 'உயிர் மெய்சார்ந்தே மொழி ஈறாகும்' என்று ஏன் தொல்காப்பியர் இலக்கணம் வகுக்கவில்லை? மெய் உயிருடன் கூடியே மொழிமுதலாவது போல், உயிர் மெய்சார்ந்தே மொழியீறாகிறது.

'அவற்றுள் மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' (தொல்.104) என்பதால், உயிர்மெய்யீறுகள் உயிரீறாகக் கருதப்படும எனலாம். ஆயினும் மெய்சேராத உயிர், ஆங்கிலத்தில் Plea, Clue என்பதுபோல், தமிழில் ஈறாவதில்லை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பால | – | ல்+அ | – | அ | இறுதி |
| பலா | – | ல்+ஆ | – | ஆ | ,, |
| விழி | – | ழ் + இ | – | இ | ,, |
| தீ | – | த் + ஈ | – | ஈ | ,, |

'பலாஅ', 'தீஇ' என அளபெடுத்தால் மட்டுமே உயிர்ஈறாகிறது. மெய்யெழுத்துக்களில் க,ச,ட,த,ப,ற என்ற ஆறு வல்லெழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வருவதே இல்லை. உலக மொழிகள் பலவற்றிற்கும் தமிழுக்கும் உள்ள ஓர் அடிப்படை வேறுபாட்டை இந்த இடத்திலும் காணலாம். கட், வெட், சுக், கணக், வாட் என்று தமிழில் நிற்பதில்லை. வலிய இம் மெய்யோசைகளில் சொல்லை நிறுத்தினால், ஒலிப்பில் சற்றே மூச்சை நிறுத்தியே கூறவேண்டும். மென்மையும் எளிமையும் குறைந்துவிடும். டிக்கட், பாக்கெட், வைப், வாட்ச், பாக், கேட் என்று ஆங்கிலத்தில் முடியும் சொற்களை அடிக்கடி எதிர்ப்படுகிறோம். குளிர்மிகுந்த நாட்டில் பிறந்த மொழிக்கு

வல்லோசையில் வரவேற்புளது; வெப்பம் மிகுந்த நாட்டில் பிறந்த மொழியில் வல்லோசையைத் தவிர்ப்பதில், நெகிழ்விப்பதில் முயற்சியிருக்கிறது. மொழியின் ஒலிப்பு அமைப்பிற்கு மாந்தர்தம் இயல்புகளும் அவர்களுடைய நாட்டுப் பின்னணியும் தட்பவெப்ப நிலையும் கூடக் காரணங்களாகின்றன.

ஏனைய மெல்லினம் ஐந்தும் (ங் தவிர), இடையினம் ஆறும் மொழிக்கிறுதியாக வரும்.

| | | | |
|---|---|---|---|
| பாய் | – ய் | உரிஞ் | – ஞ் |
| பார் | – ர் | கண் | – ண் |
| பால் | – ல் | வெரிந் | – ந் (முதுகு) |
| தெவ் | – வ் | மரம் | – ம் |
| வாழ் | – ழ் | அவன் | – ன் |
| கள் | – ள் | | |

## தனிமெய்யும் ஈர்ஒற்றும்

மற்றொரு முக்கியமான வேறுபாட்டையும் நாம் உணரவேண்டும். மொழிக்கு இறுதியில் தனிமெய்தான் தமிழில் ஈறாகுமே தவிர ஈர் ஒற்றுக்கள் இறுதியாகா.

**Pack - ck**
**Card - rd**
**Thick - ck**

தமிழில் இவ்வாறு ஈரொற்று ஈறாவதில்லை. போன்ம், கேண்ம் (போலும், கேளும்) எனத் திரிந்து வரும் ஈரொற்றுக்களில், இறுதியெழுத்து முழுமையாக ஒலிக்காது.

| | | | | |
|---|---|---|---|---|
| Film | – | பில்ம் | – | பிலிம் |
| Form | – | பார்ம் | – | பாரம் |

ஆங்கிலத்தில் வரும் ஈரொற்றில் ஒன்று உயிர்மெய்யாவதைத் தமிழ்ப் படுத்தியதில் காணலாம்.

## புள்ளி விவரம்

உயிரெழுத்துக்கள் மெய்யுடன்கூடி ஈறாகும்போது எல்லா மெய்களுடனும் ஈறாகுமா? ஆகா.

உயிர்களில் ஒள, 'கௌ' 'வௌ' என இரண்டிடங்களில் மட்டுமே ஈறாகும்.

எ — உயிரேறி எம்மெய்யும் ஈறாகாது. உயிராய் நின்று அளபெடையில் மட்டும் ஈறாகும். (பெரிதேஎ)

ஒ — 'நொ' என ஒரு மெய்யுடன் மட்டும் ஈறாகும். (நொ – நொந்துபோ)

ஏ — ஞகரத்துடன் ஈறாகா. (உரி ஞே – வராது) இதன்படி உரிஞ, உரிஞா, உரிஞி, உரிஞீ என்றெல்லாம் வரலாம் என்றாகிறது. இத்தகையன பல வழக்கிறந்தன.

உ — 'ச்' உடன் சேரும்போது உசு (உளு) முசு (குரங்கு) என இரணடிடங்களில் மட்டும் ஈறாகும்.

ப் உடன் சேரும்போது தபு (சாவப்பண்ணு) என ஒரே இடத்தில் மட்டும் ஈறாகும். தபு – அழுத்தமின்றிக் கூறினால் 'சா' எனத் தன்வினை; அழுத்திக் கூறினால் 'சாவப்பண்ணு' எனப் பிறவினை.

மெய்களில் — ந் மெய் இருமொழிகளில் மட்டும் ஈறாகும்.

பொருந் – பொருந்து

வெரிந் – முதுகு

ஞ் மெய் 'உரிஞ்' என ஒரிடத்தில் மட்டும் ஈறாகும்.

வ் மெய் நான்கு இடங்களில் மட்டும் ஈறாகும்.

(அவ், இவ், உவ், தெவ் (பகை))

இப் புள்ளி விவரங்களை ஒருமுறை பார்த்து வைத்துக் கொண்டால் போதும். தொல்காப்பியர் மொழி வழக்காற்றை முழுவதுமறிந்து விதிகூற முயன்றமை இதனால் புலனாகும்.

## பெயர்ச்சுருக்கம் – தமிழ் மரபன்று

தமிழ்ப் பெயர்கள் விகுதியில் – இறுதி நிலையில் கால் கொண்டிருக்கும். கத்திரித்து விட்டதுபோல் வெட்டிய நிலையில் நிற்காது.

| | |
|---|---|
| **வைத்யநாத்**<br>**விஸ்வநாத்**<br>**காசிநாத்** | **தமிழ் மரபன்று** |
| **வைத்தியநாதன்**<br>**விசுவநாதன்**<br>**காசிநாதன்** | **தமிழ்மரபு** |

அன் விகுதி சேரும்போதுதான் தமிழ் கால்கொள்கிறது. மேலும் 'த்' என வல்லின மெய்யில் தமிழ்ச்சொல் முடிவுறாது.

இன்று பலர் இறுதிநிலை இன்றி வழங்குவதை ஒரு போலி மதிப்பாகக் கருதுகின்றனர்.

| | |
|---|---|
| **சுந்தர்**<br>**ஆனந்த்**<br>**வெங்கட்** | **இவை தமிழல்ல** |
| **சுந்தரன், சுந்தரம்**<br>**ஆனந்தன், ஆனந்தம்**<br>**வேங்கடன், வேங்கடம்** | **இவை தமிழாக்கமாகும்** |

முன்னையவை காலொடிந்து நிற்பன போலவும் பின்னையவை கால் ஊன்றி நிற்பன போலவும் தமிழ்ச் செவிகளுக்குப் புலனாகின்றன.

தமிழ் இலக்கியங்கள் இதில் நமக்கு வழிகாட்டுகின்றன. வடமொழிப் பெயர்கள் தமிழ்ப்படுத்தப்பட்டுள்ள முறையை நாம் அவற்றில் காணலாம்.

| | | |
|---|---|---|
| அர்ச்சுனா | – | அருச்சுனன் |
| லக்ஷ்மணா | – | இலட்சுமணன், இலக்குமணன், இலக்குவன் |
| வாமனா | – | வாமனன் |
| நளா | – | நளன் |
| விபீஷணா | – | விபீஷணன், விபீடணன், வீடணன் |
| ராமா | – | இராமன் |
| சீதா | – | சீதை |

இறுதிநிலைகளுடன் கூட்டி, ஒலித்துணை உயிர்களைச் சேர்த்து 'ஒழுகிய ஓசை'யாய் ஒலிக்கும்போதுதான் அவை தமிழாகின்றன.

தமிழில் அழகிய முறையில் நீளப் பெயர்களைச் சிறு பெயர்களாக்கி வழங்குவர்.

| | | |
|---|---|---|
| தொல்காப்பியர் | – | காப்பியர் |
| நச்சினார்க்கினியர் | – | நச்சர், இனியர் |

| | | |
|---|---|---|
| இளம்பூரணர் | – | பூரணர் |
| அண்ணாத்துரை | – | அண்ணா |

## ஆ, ஐ

வடமொழியில் 'ஆ' ஈற்றில் முடிவான பல 'ஐ' ஈற்றில் முடிந்தால்தான் தமிழ்மணம் வாய்க்கிறது.

| | | |
|---|---|---|
| பாஷா | – | பாஷை, பாடை |
| உஷா | – | உஷை |
| சீதா | – | சீதை |
| சபா | – | சபை |
| ஆராதனா | – | ஆராதனை |

## ஆ, அம்

'ஆ' என முடியும் சில வடமொழிகள் 'அம்'மில் முடிவனவாக மாறும்போது தமிழாகின்றன.

| | | |
|---|---|---|
| ரசா | – | ரசம், இரசம் |
| அவுசித்யா | – | அவுசித்தியம் |
| அலங்காரா | – | அலங்காரம் |

இங்ஙனமெல்லாம் உற்றுநோக்கினால் தமிழ் தனக்கென ஒரு சாயலை வளர்த்துக் கொண்டிருப்பது புலனாகும்.

'அந்தப் பெண்ணைப் பார்த்தால் தமிழ்ப் பெண்ணைப் போல இருக்கிறதே' என்கிறோம். உடை, தோற்றம், சாயல் அவ்வாறு நம்மைச் சொல்லவைக்கிறது. நம் வீடுகளில் நம் நாகரிகம், பண்பாடு படிகிறது. நம் உடையில் நமது நாகரிகக்கூறு கிடக்கிறது. நம் உணவில் நமக்கேயுரிய நாகரிகம் படிந்து காணப்படுகிறது. நாம் பேசும் மொழியிலும் நம் நாகரிகம், பண்பாடு, மனநிலை, உணர்ச்சி படியாமலா போய்விடும்?

மொழியிறுதி எழுத்துக்களும் இறுதிநிலைகளும் ஒரு சொல்லைத் தமிழ்வடிவப்படுத்தித் தமிழ்ச் சாயல் தந்து தன்வயப்படுத்திக் கொள்கின்றன. புதிய கலைச்சொல்லாக்கங்களில் இம்முறை தமிழ் மயப்படுத்தப் பெரிதும் பயன்படும்.

## குற்றியலுகரம்

சொல்லுக்கு இறுதியில் தமிழில் வல்லெழுத்துக்கள் இடம் பெறுவதில்லை அல்லவா?

பிறமொழிகளில் வல்லொலிகள் மொழிக்கிறுதியில் வரும்.

| | | |
|---|---|---|
| Ticket | – | டிக்கெட் |
| Contact | – | காண்டாக்ட் |

| | | |
|---|---|---|
| Packet | – | பாக்கெட் |
| Church | – | சர்ச் |
| Suck | – | சக் |
| Put | – | புட் |
| Soap | – | சோப் |
| Path | – | பாத் |

தமிழில் இவ்வாறு ஒருமெய், இருமெய்யாக வல்லினத்தை மொழியிறுதியில் நிறுத்துவதில்லை. 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்' என்பதற்கு மாறுபட்டுவிடும், நிறுத்தினால்.

சில கடைகளில் 'ஞாயிற் தோறும் விடுமுறை' என்று எழுதிவைக்கிறார்கள். செய்தித் தாள்கள் சோலையார், பெரியார், சுருளியார் என்று ஆறுகளைத் தலைவர்களாக்கி மகிழ்கின்றன. ஏன்? ஞாயிறு, சோலையாறு, பாலாறு, பெரியாறு, சுருளியாறு என ஒலிப்பதில் முன்பு எளிமை கண்டதுபோல், இன்றும் ஒலித்தல் கூடாதா?

## நீக்கிப் பார்க்க

தமிழில் இவ்விறுதியை நீக்கிப் பார்த்தல் வேண்டும். அஃதாவது இறுதியில் வல்லெழுத்து வருமிடங்களில் 'உ' கரத்தை நீக்கிப் பார்த்தால் உண்மை மனத்துக்காகும்.

**எழுத்(த்) – எழுத்து**

**சுக்(க்) – சுக்கு**

**ஆட் – இவற்றுடன் 'உ'கரம் சேரும்போதுதான் எளிமை பிறக்கிறதென்பதை, உகரத்தைச் சேர்த்து ஒலித்துப் பார்த்தால் புலனாகும்.**

**பாக்(க்) – பாக்கு**

**முருக்(க்) – முருக்கு**

**கடுக் – கடுகு**

## சேர்த்துப் பார்க்க

பிற மொழிகளில் இவ்வுகரத்தைச் சேர்த்துப் பார்க்கும் போதும் உண்மை புலனாகும்.

| | | |
|---|---|---|
| டிக்கெட் | (Ticket) | டிக்கெட்டு |
| கரெக்ட் | (Correct) | கரெக்டு |
| கோட் | (Coat) | கோட்டு |

| | | |
|---|---|---|
| போட் | (Boat) | போட்டு |
| பார்க் | (Park) | பார்க்கு |
| பாத் | (Path) | பாத்து |
| புல்லக் | (Bullock) | புல்லக்கு |
| பாஸ் | (Pass) | பாசு |

ஆங்கிலத்தைத் தமிழிற் கலந்து ஒலிப்பவன்கூட 'பார்க்கு இருக்கிறது'. 'பாசு கிடைத்தது'. டிக்கெட்டு வாங்கினேன்', 'கோட்டுப் போட்டேன்', 'போட்டில் போனேன்' என்றுதானே தொடர்களில் சேர்த்து ஒலிக்கின்றான். தமிழாக்க நெறியாக இது பயன்படுவதை நூற்றுக்கணக்கான சொற்களில் காணலாம்.

## ஒலித்துணையாக உயிர் சேர்வது ஒரு தமிழ் மரபு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மண் | – | மண்ணு | கண் | – | கண்ணு |
| தின் | – | தின்னு | பொன் | – | பொன்னு |
| கார் | – | காரு | புல் | – | புல்லு |
| தீர் | – | தீரு | கௌ | – | கௌவு |
| வள் | – | வள்ளு | | | |

'இதைத் தின்' என்பதைவிட, 'இதைத் தின்னு' என்றுதான் பேசுகிறோம். 'வள்ளு வள்ளுன்னு விழாதே' என்பதே பேச்சுநடை. 'நீ என் கண்ணு, ராசா என் கண்ணு' என்கிறாள் தாய்.

'நம் கடை' என்பதில்லை. 'இது நம்ம கடை' என்று அகரச் சாரியை சேர்த்தே கூறுகிறோம். 'நாய்' என்பதில்லை; 'இது நம்ம வீட்டு நாயி' என்பதே பெரிதும் வழங்குவது. பெரிதும் உ, மற்றும் பிற உயிர்கள் இறுதியில் சேர்க்கப்படுவதால் சொற்கள் ஒலித்தற்கு எளிமையுடையனவாகின்றன. தெலுங்கு இவ்வுகரச் சேர்க்கையைப் பெரிதும் பின்பற்றுகிறது.

## 'தமிழ் நாடு'

தமிழ்நாடு மாநிலம் முன்பெல்லாம் சென்னை மாநிலம் (Madras State) என்றே அழைக்கப்பட்டது. அதைத் தமிழ்நாடு மாநிலம் என அழைக்க வேண்டும் எனப் போராடிய இயக்கம் வெற்றிபெற்ற போது, ஆட்சிக்கு வந்த அறிஞர் அண்ணா 'தமிழ்நாடு' என்றே இம் மாநிலத்திற்குப் பெயர் சூட்டினார்; ஆங்கிலத்தில் 'Tamil Nadu' என்றே எழுதும்படி செய்தார். மூதறிஞர் இராசாசி 'Tamil Nad' என்பதே ஒலிப்பு முறை, எனவே 'u' தேவையில்லை என்றும் அதனைப் பிறமொழியினர் ஒலிக்க முடியாது இடர்ப்படுவர் எனவும் வாதிட்டார். அறிஞர் அண்ணா அதை ஏற்கவில்லை. 'தமிழ்நாடு' என்றால்தான் முழுமையான பெயராயிருக்கும் என அதனையே நிறுவினார். அவர் அதன்பிறகு உயிர்நீத்தபொழுது, ஆங்கிலச் செய்தி ஒலிபரப்பிலும்,

வானொலியினர் "The Chief Minister of Tamilnadu" என்றே திரும்பத் திரும்பக் கூறினர். 'நாடு' என்பதில் இறுதியிலுள்ள 'உ' குற்றியலுகரம். தமிழ் மரபுப்படி ஒலி எளிமையையும் இனிமையையும் தரும் அந்த 'உ' தமிழுக்கு உயிர் போன்றது. 'தமிழ்நாடு' என்பதிலுள்ள, இறுதி உயிரை நீக்காத அறிஞர் அண்ணா, தாம் உயிர்நீத்தாராயினும் தமிழ் உயிரைக் காத்தார் என்றுதான் கூறவேண்டும்.

## கொழும்பு வில்

கொழும்பு + இல் சேர்த்தால் கொழும்பில் என்றுதான் ஆகும். "கொழும்பில் ஈழத் தமிழ்ப் புலிகள் வெளிக்கடைச் சிறையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்" என்று செய்தி அறிவிக்க வரும் வானொலிச் செய்தி அறிவிப்பாளர் "கொழும்பு வில் தமிழ்ப் புலிகளைச் சுட்டுக் கொன்ற" தாக ஒரு வில்லைச் சேர்க்கிறார். முற்றுகரமாக இருந்தால் மடுவில், நடுவில் என்பதுபோல் கொழும்புவில்லும் வரலாம். ஆனால் குற்றுகரமாகிய கொழும்பு இல்லுடன் சேருங்கால் கொழும்பில் என்றே ஒலிக்கப்பட வேண்டும். செய்தி அறிவிப்பாளர்கள் தங்கள் கையில் உள்ள வில்லைத் தமிழுக்கு எதிராகப் பயன்படுத்தாமல் எப்போது கீழே போடுவார்களோ தெரியவில்லை.

## 'எனக்குத் தெரியாது'

குற்றியலுகரமாகக் குறுகி ஒலிப்பது மொழி யிறுதியில் உகரம் வரும்பொழுதுதான். ஆறு, ஞாயிறு என்பன ஆற், ஞாயிற் என்பனபோல் சற்றே ஒலிகுறுகி ஒலிக்கின்றன. ஆற்றுப் பாசனம், ஞாயிற்றுக் கிழமை என்று தொடர்களாகும் போது வரும் 'று' முழுமையாகவே ஒலிக்கிறது. எனவே தொடர்மொழியிடையே அது முற்றியலுகரம் என்றும் மொழியிறுதியில் வரும்போது அது குற்றியலுகரம் என்றும் கூறப்படுகிறது.

பரிதிமாற் கலைஞர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். அங்கு நாகை வேதாசலம்பிள்ளை என்ற மறைமலையடிகள் தமிழாசிரியராக வேலைக்குச் சேர வந்தார். இதுபற்றி பரிதிமாற் கலைஞரின் நூற்றாண்டு விழா மலரில் கீழ்க்காணும் செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

"நாகை வேதாசலம்பிள்ளை என்பார் கிருத்துவக் கல்லூரியில் உதவித் தமிழாசிரியர் பதவி ஏற்க வந்தபோது அக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராக இருந்த பரிதிமாற்கலைஞர், வேதாசலம்பிள்ளையின் தகுதியை ஆராயவேண்டி, 'குற்றியலுகரத்திற்கும் முற்றியலுகரத்திற்கும் உதாரணங்கள் தருக' என்றார்.

'எனக்குத் தெரியாது' என்று விடையிறுத்தார். வந்தவர்,

'நாளைக்கே நீர் வேலையில் வந்து சேர்ந்து கொள்ளலாம்' என்று கூறியனுப்பினார் பரிதிமாற்கலைஞர்''

*- பரிதிமாற்கலைஞர் நூற்றாண்டு விழாமலர், ப.173.*

அஃது எவ்வாறு? 'எனக்கு' என்பதில் இறுதி 'உகரம்' மொழிகள் தொடரும் இடத்தில், இடையில் வருவதால் குறுகாது – எனவே அது முற்றியலுகரம், 'தெரியாது' என்பதில் இறுதி 'உகரம்' மொழிக்கு இறுதியில் வருவதால் குற்றியலுகரமாகக் குறுகி ஒலிக்கிறது. இதையே மறைமலை அடிகள் நயமாகத் தமக்குரிய தமிழறிவின் பெருமிதத்தோடு ''எனக்குத் தெரியாது'' என்றார். வேறு தமிழறிவு இல்லாத ஒருவராக இருந்தால் 'உனக்குக் கிடையாது' என்று அனுப்பியிருப்பார்கள். ஆனால் தமிழை நன்கு கற்றறிந்த அறிஞராதலின், பரிதிமாற்கலைஞர், உடனே அந்த விடையை விளங்கிக் கொண்டு 'நாளைக்கு வேலையில் சேரலாம்' என்ற நன்முடிவை அறிவித்தார்.

✣ ✣ ✣

# 16. சார்பெழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்கள் எத்தனை?

தமிழ் எழுத்துக்கள் முப்பதுதான், உயிர் 12, மெய் 18.

ஆங்கிலம் இருபத்தாறு எழுத்துக்களையுடையதெனில் தமிழ் முப்பது எழுத்துக்களை உடையது. சொற்களில் இடம்பெறும் நிலையில் ஆங்கில எழுத்துக்கள் எடுக்கும் 'ஒலி அவதாரங்கள்' பல; தமிழிலும் மொழியிடையே வரும் நிலையால் எழுத்துக்கள் பல்வேறு வகையாக ஒலித்து வெவ்வேறு வகைகளில் திரிபடைகின்றன. இத் திரிபுகளை,

எழுத்துச் சேர்க்கை
எழுத்து ஒலிநீளல்
எழுத்து ஒலிகுறைதல்

–என மூன்று வகையாகப் பகுக்கலாம். தமிழில் மொழி முதல் எழுத்து, மொழியிறுதி எழுத்து, சுட்டெழுத்து, வினாவெழுத்து என எழுத்து மொழியாகுமிடத்துப் பயன்படும் முறைகளை வைத்துப் பெயர்சூட்டப்படுவது போல, மொழியிடை நின்ற எழுத்துக்கள் ஒலித்திரிபை ஏற்குமிடத்தும் அதற்கேற்பப் பெயர் சுட்டப்படுகின்றன. எனவே 'தனிநின்ற எழுத்து' உயிரும் மெய்யும் என்றும் 'மொழியிடை வரும் எழுத்து' சார்பெழுத்து என்றும் பிரித்து அறிய வேண்டும்.

## குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்

ஆய்தம் மெய்போலத் தனியொரு எழுத்தாக இருந்திருப்பின் மெய் 19 எனக் குறிக்கப்பட்டிருக்கும். ஏனைய மெய்கள் போல ஆய்தம் உயிரேற இடங்கொடுப்பதில்லை. 'அஃது ஓர் உறுப்பு', 'இஃது எங்குள்ளது' என எதிரே உயிர்வருமிடத்து, முன்னேயுள்ள சுட்டுவினாக்கள் ஆய்தம் பெறுகின்றன. குற்றெழுத்துக்குப் பின்னும் உயிருடன்கூடிய வல்லெழுத்துக்கு முன்னும் ஆய்தஒலி தோன்றுகிறது. (எஃகு, கஃசு), இவை அருகிய வழக்கு. வல்லோசையை மென்மைப்படுத்த, தொன்மைமிக்க காலத்தில் இது பயன்பட்டிருக்க வேண்டும். இதனால்தான் பா.வே. மாணிக்கநாயக்கர் என்ற பொறியியல்துறை தந்த தமிழறிஞர் F என்ற ஆங்கில ஒலிப்புப் போன்றவற்றைப் பயன்படுத்த, ஆய்தத்தை இணைத்தெழுதிக்காட்டினார். (ஃபூல் –Fool, ஃபைட் – Fight).

இன்று சிலர் 'ஃFட்', 'Fஊல்' என எழுதமுற்பட்டுக் கைவிட்டுள்ளனர். தமிழ்நாட்டில் பிறந்தும் தமிழறிவு கிடையாது; தமிழ் உணர்வும் கிடையாது; ஆங்கில எழுத்தாளன் ஆங்கில மொழியறிவு குறைந்தால் வெட்கப்படுவான்; இங்கு வெட்கப்படமாட்டான் என்பது மட்டுமன்று, திமிர் பேசுவான்.

குற்றியலுகரம் மொழியில் வரும் ஒலிமாற்றமே. தனிக்குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களின்பின் சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின்மேல் ஏறிவரும் உகரம் குற்றியலுகரம். 'கட்டு' என்ற சொல் இரண்டு வகையில் ஒலிக்கும். ஒருவரைப் பார்த்து, "இவற்றை ஒன்றாக இறுக்கிக் கட்டு" என ஏவும்போது 'கட்டு' என்பதுபோல இறுதியுகரம் சற்றே முழுமையாக ஒலிக்கிறது. டு என இரண்டு மாத்திரை ஒலிக்காவிட்டாலும் ஒரு மாத்திரையளவு ஒலிக்கிறோம். ஒருவரை ஏவுவதால் அழுத்தமாகக் கூறுகிறோம். வெறுமனே 'இது என்ன கட்டு' என்றால் கட்டு என்பதில் உள்ள இறுதி 'உ' குறைந்தொலிக்கவே செய்கிறது. 'கட்டென்று சொன்னான்' என்னும்போது, 'கட்டு' என்பதில் உள்ள இறுதி 'உ' நீங்கிக்கொண்டு, உயிரேற இடங்கொடுக்கிறது. இவ்வாறெல்லாம் ஆழமாக எண்ணிப் பார்த்த நம் முன்னோர்கள் 'உ' என்பது, வல்லின இறுதி மெய்களின்மேல் வரும்போது குறுகி ஒலிப்பது மட்டுமன்றிப் பொருள்வேறுபாடு தருவதையும் கண்டார்கள்; ஒலிவேறுபாடும் பொருள் வேறுபாடும் புணர்ச்சி வேறுபாடும் வந்தால் அது தனி எழுத்தாம் தன்மை பெறுவதை உணர்ந்தார்கள். அதற்கு ஒரு பெயர் கொடுத்துத் தனிஎழுத்துப் போலச் 'சார்பெழுத்து' என்றார்கள். எனவே குற்றியலுகரம் என்பது அது பயன்படுத்தப்படும் இடத்தைப் பொறுத்தது.

ஆய்தவழக்கு அருகிவிட்டது. குற்றியலிகரம் பழைய இலக்கியங்களில் பயன்படுவதால், அதைப்பற்றி அறிய வேண்டியுள்ளது. குற்றியலுகரமே தமிழின் மென்மை, இனிமையோடு தொடர்புடையதாய் இன்றும் பயன்படுகிறது; வேற்றுமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்த உதவுகிறது.

நம் வீட்டில் பயன்படுத்தும் பலபொருள்கள் இப்போதும், இனி எப்போதும் பயன்படுத்தப்படுவனவாயிருக்கும். சில குளிர்காலத்தில் மட்டும் பயன்படும்; சில கோடைக்காலத்தில் மட்டும் பயன்படும். சில முன்னே பயன்படுத்தி, இப்போது தேவையற்றவையாயிருக்கும். அதற்காக நாம் அவற்றை எளிதில் தூக்கி எறிந்து விடுவதில்லை. பழைமையை நினைவுகூர்கிறோம்; பிறரிடம் எடுத்துச் சொல்லிப் பெருமைப்படுகிறோம். அங்ஙனமாயினும் இருப்பவை இருக்கும்; கழிபவை போய்விடும். அவை தாமே நீங்குதல் வேண்டும்; நாமாக நீக்குதல் வேண்டாம். அவை நோய்கள் அல்ல. வலிந்து முயன்று நீக்குவதற்கு. மொழிகள் ஒருவருக்கு ஒருவர் விளங்குவதற்குக் காரணமே மரபுதான். மரபு என்பது மொழியின் வாழ்வு. அதனால்தான் பவணந்தி முனிவர். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்றார். இல்லாவிட்டால் 'பழையன கழித்தலும் புதியன புகுத்தலும்' என்று கூறியிருக்கமாட்டாரா? நம் மொழியியல் அறிஞர்கள் புளூம்பீல்டையும், நைடாவையும் மேற்கோள் காட்டுவார்கள். புளூம்பீல்டுக்கு வடமொழி நன்கு தெரியும்; தொல்காப்பியம் கேள்விப்பட்டுத்தான் தெரியும். அப்படித் தெரிந்து, தொல்காப்பியத்தை ஆழக் கற்கும் வாய்ப்பு நேர்ந்திருந்தால் தொல்காப்பியரின் நுட்பத்திறன்களை அவர் எடுத்தெழுதியிருப்பார். அதைப் பார்த்து இவர்களும்

நமக்குக் கூறியிருப்பார்கள். நமக்கு ஒன்று மட்டும் விளங்குகிறது. தொல்காப்பியம் மிகநுட்பமான மொழியியல் அறிவின் வெளிப்பாடு; தமிழ் மரபு; தனி மரபு; அது பேணப்பட வேண்டிய, காக்கப்பட வேண்டிய ஒன்று. நாமும் தமிழின் மரபுவழி அறிவுடன், மொழியியலறிவு பெறவேண்டும். நுட்பமான செய்திகளை, தன்திறனோடு கூறுமளவு வளரவேண்டும். இன்றைய இளம் உள்ளங்களில் இந்த ஆர்வம், இந்த ஈடுபாடு முளை விடவேண்டும்.

குற்றியலிகரம் இன்று பயன்படுவதில்லை. முன்பு சேர்த்து எழுதுவர். அவ்வாறே சேர்த்து ஒலிப்பதும் வழக்கம். பாடல்கள் சீர்பிரிக்கப்படாமல் பதிப்பிக்கப்பட்டிருக்கும். இன்று தனித்தனிச் சொற்களாக அச்சு வடிவில் பார்த்தும் அவ்வாறே ஒலித்தும் பழகிவிட்டோம். அதனால் குற்றியலுகரம், குற்றியலிகரம் என்பன நமக்குச் சற்றே புதுமையாகிவிட்டன. நாடு + யாது, சேர்த்தொலிக்கும்போது நாடியாது ஆகிறது. தட்டு + யாது, தட்டியாது ஆகிறது. இன்று சற்றே நிறுத்தி ஒலிப்பதால் நாடு யாதெனவும், தட்டு, யாதெனவும் தனித்தனியே கூறினால் குற்றுயலிகரம் தோற்றாது. நாடி யாது என்றால் நாடியைப் பற்றி வினவுவதாகலாம். நாடு, யகரம் வரத்திரிந்ததெனில் வேறுபொருள். எனவே முன்னதில் முற்றியலிகரமும், பின்னதில் புணர்ச்சியால் திரிந்த இகரமும் இடம் பெறுகின்றன. அவை பொருளாலும் வேறுபடுகின்றன. முன்னது ஒரு சொன்னீர்மைத்தாய் 'நாடியாது' என ஒலிக்கப்படும்பொழுது 'டி'யில் உள்ள 'இ' குறுகிஒலிக்கவும் காண்கிறோம். இதனால் குற்றியலிகரம் என ஒரு சார்பெழுத்தைத் தொல்காப்பியர் ஏற்கிறார்.

தொல்காப்பியர் கருத்துப்படி எங்கோ மூலைமுடுக்கில், ஒரேஒரு சொல்லில் ஒரு வழக்காறு ஏற்பட்டால்கூட, அது மொழியிலக்கணத்தில் இடம் பெற்றுவிடுகிறது.

உயிர்மெய்யெழுத்தையும் பவணந்தி முனிவர் சார்பெழுத்து என எண்ணினார். ஆங்கிலத்தில் Ka, Sa, Sea, Tea என்று வருமிடங்களில் மெய்யும் உயிரும் கூடி உயிர்மெய்யாய் ஒலிக்கின்றன. தமிழிலும் எழுத்து வடிவத்தில் க்அ, ச்அ, ச்ஈ, ட்ஈ என்று எழுதப்பட்டிருந்தால் 'உயிர்மெய்' என ஒரெழுத்துக் கருதப்பட்டிருக்கமாட்டாது. ஆனால் தமிழில் உயிர்மெய்க்குத் தனிவரி வடிவங்கள் உள. ஆயினும் அவை தனியெழுத்துக்கள் அல்ல என்பதே உண்மை.

ஏனைய நான்கு குறுக்கங்கள் உள. அவை,

மகரக் குறுக்கம்
ஐகாரக் குறுக்கம்
ஔகாரக் குறுக்கம்
ஆய்தக் குறுக்கம்

என்பன. மகரக் குறுக்கம் செய்யுளில் மட்டுமே வரும். போலும், மருளும் என்பன போன்ம், மருண்ம் என ஈரொற்றாய் வரும்போது, இறுதி மகரம் குறுகி ஒலிப்பது இயல்பேயன்றோ? ஐ என்பது அய் என்றும் எழுத, ஒலிக்கப்படுகிறது. பழமையா? பழைமையா? சமயமா? சமையமா? என்று ஐயப்பாடு வருகிறதல்லவா? மிக

ஆராய்ச்சி செய்தால் மொழியிடை வரும் 'ஐ', 'ஔ' இரண்டும் (அய், அவ்) நெடில்களாக முழுவதும் ஒலிக்கப்படாமை புலனாகும். கல் + தீது = கஃறீது; முள் + தீது = முஃடீது. இவ்வாறு புணர்ச்சியிடைப் போந்த மொழிச் சொற்கள் பலவற்றைத் தமிழில் எழுதும்பொழுது இக் குறுக்கங்களைக் காண முடிகிறது.

நீண்டு ஒலிக்கும் அளபெடைகளும் இவ்வாறேதான் ஒருவரை 'மண்ண்ணாய்ப்போக' என்று திட்டும்போது, 'ண்' அளபெடுக்கிறது. செய்யுளில் 'தொழாஅர் எனின்' என்று வரும்போது உயிர் அளபெடுக்கிறது. இவ்வளபெடைகள் வெறும் ஒலிப்பு நீட்சிகளாக மட்டுமல்லாமல், அவற்றை பயன்படுத்துவோரின் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துகின்றன.

'அட நீஇஇயா', 'போச்சேஎஎ' என்று உணர்வுகளை வெளிப்படுத்தும் உயிர்களாக இந் நீட்சிகள் அமைகின்றன. இலக்கியத்திலும் பல்வேறு உணர்வுகளைக் காட்ட அளபெடைகள் வந்துள்ளன. அள்பெடை வரும் ஒவ்வோரிடத்திலும் ஒருணர்ச்சி பளிச்சிடுகிறது.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன் (46)

'அடேயப்பா, துறவறத்தில் நீண்டதூரம் போய், சடைமுடி தர்ங்கி அலைந்து பயன்பெறவா போகிறாய்' என்ற கேலிக்குறிப்பை இதிற்காணலாம்.

மணிக்கொடி என்ற இதழ் தொடங்கப்பட்டபோது 'அவ்வ்வளவும் சிறுகதைகள்' என்ற கவர்ச்சியான விளம்பரத்துடன் தொடங்கியது. ஒற்றளபெடை சிறுகதைகளின் எண்ணிக்கைப் பெருக்கத்தை உணர்த்தியது. ஏனெனில் முழுக்க முழுக்கச் சிறுகதைக்கென்றே அவ்விதழ் தொடங்கப்பட்டது.

இன்று புனைகதைகளில் 'பெரிய்ய ஆள்', 'நீண்ண்ட தொலைவு' 'கூஉப்பிடுதூரம்' என்பதுபோல் எழுதும் பழக்கம் பரவி வருகிறது.

தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் மூன்றையும் மட்டுமே சார்பெழுத்துக்கள் என்றார். மொழியிடையே வரும் ஒலி மாற்றங்களில் எழுத்தாந்தன்மை பெற்றன, எழுத்தாந்தன்மை பெறாதன என அவர் வேறுபாடறிந்திருந்ததாக நன்கு தெரிகிறது.

பவணந்தி முனிவர் உயிர் மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என மொழியிடையே வரும் எழுத்தொலிகளின் மாற்றங்களையெல்லாம் மனத்திற்கொண்டு சார்பெழுத்துப் 'பத்து' என்றார்.

இதிலிருந்து 'சார்பெழுத்து' என்பதன் விளக்கத்திலேயே தொல்காப்பியருக்கும் பவணந்தி முனிவருக்கும் கருத்து வேறுபாடு இருப்பது புலனாகும்.

✣ ✣ ✣

# 17. மெய்ம் மயக்கம்

'சொல்' என்பது ஒரு பொருள்பொதிந்த முழுமை பெற்ற வடிவம், 'ஆ' என்பது தனிச்சொல். 'பசு' என்பது அதன் பொருள். அ, ஆ, இ, ஈ என எழுதப்படும்பொழுது அஃது எழுத்து; அதுவே பசுவைக் குறிக்கும்பொழுது சொல். அதற்கு முதலும் அதுவே; இறுதியும் அதுவே. 'கா' என்றால் பூங்கா அல்லது காப்பாற்று என்னும் ஏவல். ஓரெழுத்தொரு மொழி. ககர வரிசையில் அது வரின் எழுத்து, பிறிதொரு பொருள்தரும்போது சொல்லாகி விடுகிறது. 'கா' என்ற சொல்லுக்கு முதல் எழுத்து 'க்'; இறுதி 'ஆ'. 'அல்' (இருட்டு), 'ஆல்' என்ற ஈரெழுத்து மொழிகளில் உயிரும் இறுதியில் மெய்களும் உள. 'அலை' என்பதில் முதலிலும் இறுதியிலும் உயிர்களே உள (அ+ல்+ஐ).

மொழியின் இடையில் மெய் வந்துவிட்டால், அதற்கு அடுத்துவரும் மெய்பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. உயிருடன் உயிர் இணைந்து வருவதில்லை. choas-காவோஸ் என்ற ஆங்கிலச் சொல்லில் a,o என உயிர்கள் இணைந்து வருகின்றன. தமிழில் உயிருக்கு அடுத்து உயிர் நின்று ஒலிப்பதில்லை. கோ + இல் = கோயில் (க்+ஓ+ய்+இ+ல்) ஓவும் இகரமும் இணையும்போது யகர உடம்படுமெய் வந்து அவற்றை இணைக்கிறது. அவை இருசொற்களாயினும் ஒரு சொன்னீர்மைத்தாய் அமைகின்றன. எனவே சொற்களின் இடையில்,

> தனிச்சொற்களில் உயிருடன் உயிர் இணைவதில்லை
> இருசொற்கூடித் தனிச்சொல் நீர்மை பெறும்போது
> உடம்படுமெய் தோன்றி ஒலிப்புக்கு உதவுகிறது.
>
> தனிச்சொற்களில் உயிர்மெய்யுடன் உயிர்மெய்
> (கலை, தவறு, பலகை) மயங்குவதற்கு
> வரையறை இல்லை. அவற்றை ஒலிப்பில் எளிமைப்
> படுத்தவேண்டும் என்ற அவசியம் இல்லை.
>
> தனிச்சொற்களில் உயிருடன் மெய் மயங்குவ
> தற்கும் (கல், கால், கடல், தமிழ், பகல்) வரை
> யறையில்லை. ஒலிப்பில் கடுமையுமில்லை.

> தனிச்சொற்களில் மெய் வரும்போதுதான், அதற்கு அடுத்து வரும் மெய்யினால் ஒலிப்பு எளிமையோ, கடுமையோ அமைகிறது. எனவே தமிழிலக்கணம் இதற்குமட்டும் வரையறை செய்கிறது.

உத், பாக், பிரச், நாட், என்பனவற்றில் அடுத்து என்னஎன்ன மெய்கள் வரலாம்? எவை வந்தால் ஒலிப்பு எளிமையாயிருக்கும்?

**உத்யோகம் – உத்தியோகம்**
**பாக்யம் – பாக்கியம்**
**பிரச்னை – பிரச்சனை**
**நாட்ராயன் – நாட்டராயன்**

இவற்றைக் கருத்துடன் பலமுறை சொல்லிப் பார்த்தால், இந்த மெய்யின்பின் இந்தமெய் வரும் என வரையறை செய்வதால் ஏற்படும் நன்மை புலப்படும். உண்மையில் தமிழ் மொழியின் தனித்த இயல்புகளுள் இஃதொன்று, எளிமையையும் இனிமையையும் நோக்கி, ஒலிப்புக்கு வழிசெய்வது

**வெட்கம் – வெக்கம்**
**கட்சி – கச்சி**
**மட்குதல் – மக்குதல்**

இவை எழுத்து வழக்குப் பேச்சு வழக்காகும்போது ஏற்படும் மாறுதல், தமிழ் ஒலிப்பு எளிமை நோக்கியே செல்லும் இயல்புடையது என்பது இதனால் புலனாகவில்லையா? கொச்சை வழக்கு, பிறமொழிக் கலப்பு வழக்கு, பிழை வழக்கு இவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் பேச்சுவழக்குத் தமிழின் இயல்பைப் பெரிதும் வெளிப்படுத்துவதென்பதை உணரலாம். நம் தமிழர்கள் சிலர் முற்கூறிய மூன்றுவகை வழக்குகளையே பேச்சுவழக்கெனக் கொண்டு பயன்படுத்த முற்பட்டு விடுவதைச் சில சமயங்களில் காண நேரிடும். இவையெல்லாம் கிளிப்பிள்ளை அறிவால் விளைவன. மேலைநாட்டறிஞர் யாரேனும் தமிழ் மொழியின் தனிநீர்மைகளை எழுதினாலன்றி, சொன்னதைச் சொல்லும் இக் கிளிப்பிள்ளைகள் பிறமொழியினரும் ஏற்கும் வண்ணம் தமிழ்மொழியை எழுத ஏற்க முன்வரமாட்டா.

தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ம்மயக்கம் பற்றிய விதிகள் சில இன்று வழக்கிலில்லை. ஒரு சொல்லுக்குள் மெய்கள் மயங்குவதுபற்றியே தொல்காப்பியர் இங்குக் கூறுகிறார்; இரண்டு சொற்கள் புணரும் பொழுது ஏற்படும் மாற்றங்களைப் புணரியலில் கூறுகிறார். உரையாசிரியர்கள் தனிச்சொற்களில் மெய்ம்மயக்கம் பற்றி எடுத்துக்காட்டுக்கள் கிடைக்காத பொழுது, தொடர்ச் சொற்களைக் காட்ட முற்படுகிறார்கள். அதனைப் பலர் ஏற்பதில்லை.

"அவற்றுள்
ல, ள ஃகான் முன்னர் ய வ வும் தோன்றும்" (24)

என்கிறார் தொல்காப்பியர்.

செல்வம், கள்வன் என 'வ்' இடம்பெறுகிறது. கொல் யானை, வெள்யாறு என உரையாசிரியர்கள் காட்டுவன தொடர்ச்சொற்கள்.

அகல்யை
கல்யாணம்

என்பன தமிழில் அகலியை, கலியாணம் என்றே ஒலிக்கப்படும். கல்யாணம் என்றும் தொல்காப்பியர் காலத்தில் வழங்கினர் போலும் என்ற ஐயத்தை இது தோற்றுவிக்கிறது.

இன்று பிறமொழிகளை ஒலித்துப்பழகிப்பழகி, இம்மெய்ம் மயக்கமும் தமிழில் நெகிழவிடப்படுகிறது. இக்காலத் தமிழ் வழக்கத்திற்கேற்ப நிரம்பச் சிந்திக்க இடமுளது.

## தம்முன்தாம் மயங்கும் மெய்கள்

பதினெட்டு மெய்களில் க,ச,த,ப என்ற நான்கும் தம்முன்தாம் வந்து மயங்கும். தம்முன் பிறமெய்கள் வரவே வரா. பிறமொழிச் சொற்களில் அங்ஙனம் வரினும் அவை தமிழாக்கம் பெறும்போது 'தன்மெய்யாக' மாற்றப்படும்.

| | | |
|---|---|---|
| **பக்கம்** | – | **பக்+க்+அம்** |
| **பச்சை** | – | **பச்+ச்+ஐ** |
| **நத்தம்** | – | **நத்+த்+அம்** |
| **கப்பல்** | – | **கப்+ப்+அல்** |
| **பாக்யம்** | – | **பாக்கியம்** |
| **பிரச்னை** | – | **பிரச்சனை** |
| **வித்யாசாலை** | – | **வித்தியாசாலை** |
| **பாப்லர்** | – | **பாப்புலர்** |

பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கும்பொழுது உயிருடன் சேர்ந்த தன் மெய்யே வருவதால், வல்லோசை நெகிழ்வுடையதாகிறது. இதனை இலக்கணிகள் '**உடனிலை மெய்ம்மயக்கம்**' என்பர்.

## தம்முன் பிற மயங்கும் மெய்கள்

ர, ழ இரண்டும் தம்முடன் தாம் மயங்கவே மயங்கா. (குர்ரம், வாழ்ழம் என்றெல்லாம் வாரா) தம்முடன் பிற மெய்களே மயங்கும். இதனை இலக்கணிகள் '**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**' என்பர்.

ஆர்வம், வாழ்வு என்பன காண்க.

## உறழ்ந்து வருவன

முற்கூறிய மெய்கள் ஆறும் (க,ச,த,ப – ர,ழ) தவிர ஏனைய பன்னிரண்டு மெய்களும் (ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன்) தம்முன்தாமும் தம்முடன் பிறவும் மயங்கும்.

இவற்றுள் இவற்றிற்குப் பிறகு இவையென்ற சில வரையறைகளும் உள.

## மெல்லினமும் வல்லினமும்

தனித்தனி வரையறைகளில் ஓர் எடுத்துக்காட்டுப் பார்ப்போம். மெல்லெழுத்துக்கள் முதலிலே நின்றால் அவற்றின் இனமொத்த வல்லெழுத்துக்கள் அடுத்து வருதல் பெருவழக்கு.

| | | |
|---|---|---|
| க், ங் | – | **கங்குல்** |
| ச், ஞ் | – | **நஞ்சு** |
| ட், ண் | – | **கண்டு** |
| த், ந் | – | **பந்து** |
| ப், ம் | – | **கம்பன்** |
| ற், ன் | – | **மன்றம்** |

மஞ்ஞை, கண்ணீர், அம்மா, தென்னை எனத் தம்முன் தாம் வருதல் பொதுவிதிப்படி அமைகிறது.

## மெய்ம் மயக்கமும் ஈரொற்றுடனிலையும்

மெய்ம் மயக்கம் என்பது முதலில் மெய்யும் அடுத்து உயிர்மெய்யுமாக நிற்குமிடம். பாக்கம் – பா + க் + க் + அ + ம் – இதில் 'க்' மெய் அடுத்து 'க' உயிர்மெய் வரினும் (க்+அ) முன்னிற்பது மெய்யேயாதலால் மெய்ம்மயக்கம் எனப்பட்டது.

பீர்க்கு, ஆர்ப்பாட்டம், வாழ்க்கை – என்று இவ்வாறு ஒற்றையடுத்து ஒற்றே வரும்போது ஈர் + ஒற்று + உடனிலை என்பர்.

ய, ர, ழ என்ற மூன்று மெய்கள் முன்னிற்க, அடுத்து க, ச, த, ப என்ற வல்லினமும் ங, ஞ, ந, ம என்ற மெல்லினமும் ஈரொற்றாய் வரும். இவை தவிரப் பிற எம்மெய்யும் ஈரொற்றாய் வராது.

பாய்ச்சல், வாய்ப்பு, நேர்த்தி, தாழ்த்தல் என வரும். சாய்ந்தது, நேர்ந்தது என்பன மெல்லெழுத்து வந்தன. தமிழில் ஈரொற்றுடனிலைக்கு எடுத்துக்காட்டுக்கள் குறைவாக உள்ளன. எனவே இருமொழிகூடி ஒருசொல் நீர்மைத்தாய் வழங்குவனவற்றை உரையாசிரியர்கள் காட்டுகின்றனர். (காய்ங்கனி, நேர்ங்கல், தாழ்ஞ்சினை, வீழ்ம்படை எல்லாம் அருகிய வழக்குப் போலவும் உள்ளன.)

## ஒலித்துணை உயிர்கள்

மொழியிறுதியில் வரும் ஒலித்துணை உகரமே குற்றியலுகரம் எனலாம். தமிழில் இயல்பாக அமைவதுடன், சில விடத்துப் பொருள் வேறுபாடும் தருவதால் அது தனியே சார்பெழுத்தெனப்பட்டது. பிறமொழி வல்லோசை இறுதிகளைத் தமிழ்ப்படுத்துமிடத்து அவை ஒலித்துணை கருதியே வருகின்றன.

தமிழிலேயே எழுத்துப்பேறாகவோ, சாரியையாகவோ இவை சேர்க்கப்பட்டு ஒலி எளிமைக்குத் துணை செய்கின்றன.

யார்க்கும் – யாருக்கும்

பார்க்குள்ளே – பாருக்குள்ளே

இங்ஙனம் ஈரொற்று வருமிடத்து 'உகரம்' வந்து ஒலிப்பை எளிமைப்படுத்துகிறது.

வடசொற்களாகத் தமிழில் வந்து வழங்கும் சொற்களில் அ, இ, உ ஆகிய மூன்று உயிர்கள் சேர்ந்து அவற்றைத் தமிழியல்புடையனவாக மாற்ற முயல்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| | **வர்க்கம்** | **–** | **வருக்கம்** |
| **உ** | **தர்மம்** | **–** | **தருமம்** |
| | **நிர்வாகம்** | **–** | **நிருவாகம்** |
| | **வக்ரம்** | **–** | **வக்கிரம்** |
| **இ** | **கார்யம்** | **–** | **காரியம்** |
| | **பாக்யம்** | **–** | **பாக்கியம்** |
| **அ** | **ரஸ்னா** | **–** | **ரசனை** |
| | **பிரஸ்னா** | **–** | **பிரச்சனை** |

## பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துதல்

இம் மெய்ம்மயக்க விதிகள் பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தும்போது பெரிதும் பயன்படும்.

தமிழ் எளிமை நோக்கியும் இனிமை நோக்கியும் ஏற்கும் விதிகளைப் புலப்படுத்தும்.

பக்தி, முக்தி எனப் பழகிவிட்டாலும் பத்தி, முத்தி என்றால்தான் தமிழாகும் என்ற மரபையாவது உணர வேண்டாமா? சத்யம் சத்தியமானால் தமிழாகிறது. சுப்பிரமணியன் – தமிழன். இதில் எந்த எழுத்தையும் மாற்றவோ, விடவோ கூடாது. ஸுப்ரஹ்மண்ய –நாடு கடத்தப்பட வேண்டியவன்.

மாக்டோனால்ட், பாக்டாட், மில்டன், பக்ரீத் என்றெல்லாம் பல்வகைப் பெயர்களை உச்சரிப்பு மாற்றின் பொருள் விளங்காதென்பதால் அவ்வாறே ஒலிக்கிறோம். பெயர்களில் தமிழ் மரபைப் பின்பற்ற முடியாதென்பதால், தமிழ் மரபையே விட்டுவிடலாமா? கம்பர் பெயர்களைத் தமிழ்ப்படுத்தும்போது பின்பற்றிய நெறிமுறைகளை மறக்கலாமா? தமிழின் தனியியல்பு எது? பிறருடன் பழகியதால் ஏற்பட்ட அன்னியமரபு எது? இது தமிழ்மரபு, இது பிறர்மரபு; இங்கு தமிழ்மரபே வரும், இங்கு பிறர் மரபும் ஏற்கப்படும்; இங்கு உறழ்ந்துவரும் என்றெல்லாம் தமிழ் இலக்கணத்தைப் பகுத்துணர்த்த வேண்டிய காலம் வந்துள்ளது.

✣ ✣ ✣

த.7.

# 18. பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஆளும் முறைகள்

தமிழ்ச் சொல்லின் கட்டமைப்பு, முதலில் வரும் எழுத்துக்கள், இறுதியில் வரும் எழுத்துக்கள், இடையில் ஏற்படும் மெய்ம்மயக்கம் ஆகியவை வெறும் இலக்கணங்கள் அல்ல. ஒரு தமிழ்ப் பெண்ணை இனங்காட்டும் சாயல்கள் போன்ற தோற்றங்களும் பண்புகளுமாகும். அவை பிறமொழிச் சொற்களிலிருந்து தமிழ்ச் சொற்களை வேறுபிரித்தறிய உதவுகின்றன.

## இருவகைச் சொற்கள்

தமிழில் இருவகைச் சொற்களை நாம் நம்முடைய சொத்து என ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். ஒன்று தமிழ் அடிச்சொல்லில் பிறந்த, தமிழான தமிழ்ச்சொற்கள்; இரண்டு வேற்று மொழியிலிருந்து வந்த தமிழான, தமிழில் ஒரு பொருள்தன்மையோடு வளர்ந்த தமிழ் ஒலிப்புக்குட்பட்ட வடிவமுடைய, தமிழ் மரபுக்கு மாறித் தோன்றாத சொற்கள்.

தொல்காப்பியர் 'வடசொல்' என்று திசைக்குறியுடன் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டது இது கருதியேயாகும்.

இவ்வாறு ஒரு மொழியில் சொற்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்:– 1) மொழியில் பொதுவாக ஏற்றுக்கொள்வது (2) தனிமனிதன் ஏற்றுக்கொள்வது. 'இந்தப் பேருந்து எத்தனை மணிக்கு வரும்?' 'என் பட்டறிவுக்கு விளங்கவில்லை', 'அதற்கான தலைக்கீடு தோன்றவில்லை', 'உன் அகவை என்ன?' என்று பலரும் பேசினால், எழுதினால் போற்றி வரவேற்க வேண்டும். தனித்தமிழ் இயக்கம் என்பது தமிழ்க் காப்பு இயக்கம்; தமிழுணர்ந்த இயக்கம் என்றுமுள தென் தமிழை இளமை குன்றாமல் காக்கும் இயக்கம். பழந்தமிழ்ச் சொற்களையும் தனித் தமிழ்ச் சொற்களையும் வீழ்ந்து மறைந்து போகாமல் காத்து மீண்டும் வாழ்வளிக்கும் மறுமலர்ச்சி இயக்கம்.

காரியதரிசி போய்ச் செயலாளர் வந்தார்
உபந்யாசம் விடுபட்டுச் சொற்பொழிவு வந்தது
விவாகம் மாறித் திருமணம் ஆயிற்று
பத்திரிகை மறைந்து அழைப்பிதழ் ஆனது
வருஷத்தை விட்டு ஆண்டைக் கைக்கொண்டனர்
அக்ராசனாதிபதி தலைவர் ஆனார்
அபேட்சைமனு தொலைந்து வேட்புமனு ஆயிற்று
நமஸ்காரத்தை மறந்து வணக்கம் செலுத்தினர்
விலாசம் எல்லாம் முகவரி ஆயின
பாஷை கூட மொழி ஆயிற்று

எண்ணி எண்ணிப் பார்த்தால் எத்தனையோ வழக்காற்று மாற்றங்கள். வீடுகளுக்கு எல்லாம் தமிழ்ப்பெயர்கள், அவ்வீட்டில் பிறந்த மக்கட்கெல்லாம் தமிழ்ப்பெயர்கள்.

முன்பு 'கந்த நிவாஸ்' கிரகத்தில் ராமசாமிக்குச் சரஸ்வதி, புருஷோத்தமன் என மக்கள் பிறந்தனர். பின்பு முருக நிலையத்தில் செங்குட்டுவனுக்குத் தமிழரசி, அன்பழகன் என மக்கள் பிறக்கலாயினர். இப்போது செங்குட்டுவன் தன் 'திரு மனை'யை விற்றுவிட்டு, ''ஸ்ரீகிருபா' கிரகத்திற்குக் குடியேறி உஷா, வெங்கட் என்ற குழந்தைகளைப் பெற்றுச் சந்தோஷிக்கின்றான்.

மேலே கண்டவை வெறும் மொழி மாற்றங்கள் அல்ல. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மொழி வளர்ச்சி இயக்கங்களின் தாக்குரவும், அதனால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளும் அவற்றால் உணர்த்தப்படுகின்றன.

தனித்தமிழ் இலக்கணத்தை நெஞ்சாரப் போற்றும் அதே நினைவுடன் பிறிதொன்றையும் எண்ணிப் பார்ப்போம் :–

**'இந்தக் கார் எத்தனை மணிக்கு வரும்?'**
**'என் அனுபவத்திற்கு விளங்கவில்லை'**
**'அதற்கான காரணம் தோன்றவில்லை'**
**'உன் வயது என்ன?'**

இவ்வாறு பொதுவாகப் பலரும் பேசினால், கதை இலக்கியங்களிலோ, பொதுமக்கள் மிகுதியும் படிக்கும் இதழ்களிலோ வந்தால் அவற்றை எதிர்க்க வேண்டியதில்லை. இச் சொற்கள் தமிழ்வடிவம் பெற்றுவிட்டன; தமிழ் ஒலிப்புக்குப் புறம்போகவில்லை. இவற்றுட்சில பல நூற்றாண்டுகளாக வழங்கி வருகின்றன. மொழி முதல் எழுத்து, இறுதியெழுத்து, மெய்ம் மயக்கத்திற்கு மாறுபட்டு விடவில்லை. தமிழ் அகரவரிசையிலுள்ளள எழுத்துக்களுக்குள் இவை அடங்கியுள்ளன. சில பிறமொழிச் சொற்கள் தமிழிலேயே வழங்கி வழங்கி, தனிப்பொருள் வளர்ச்சியும் கண்டுள்ளன.

பிரமாதம்
கேவலம்

என்ற சொற்களுக்கு வடமொழியில் முறையே குற்றம், தனிமை என்ற பொருள்களுள. தமிழில் மிகச் சிறப்பு. இழிவு என்று இவை பொருள்படுகின்றன.

தமிழ் வடிவிலுள்ள பல வடசொற்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவை தமிழா, வடமொழியா என்பதிலேயே கருத்து வேறுபாடு இருக்கிறது. 'பூஜா' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். அது 'பூசெய்' என்பதிலிருந்தே வந்ததென்று, வங்காள மொழியறிஞர் – தம்மை நன்னெறி முருகன் எனப் பெருமையோடு அழைத்துக்கொள்ளும் சுனிதகுமார் சட்டர்ச்சி கூறுகிறார். ஆடு முதலியவற்றைப் பலிகொடுத்து, வேள்வி செய்து வழிபடுதல் அக்கால வடவர் மரபு. பூவைக் காணிக்கை செலுத்தி இறையுருவை வழிபடுதல் திராவிடர் மரபு. ஆதலின் பூசெய் என்ற சொல் திராவிடர்களிடம் தோன்றியதேயாகும் என்பது அவர் கருத்தாகும்.

தமிழில் உள்ள சொல்வளத்தை நாம் குறைத்துக்கொள்ள வேண்டியதில்லை. தொல்காப்பியரைவிட மொழியறிஞர் யாரும் இலர். அவர் காட்டும் வழியைப் பின்பற்றுவதால் தமிழ் தழைக்குமே தவிரக் குறைவுறாது. தமிழில் அனைவருக்கும் விளங்கும் கட்டளைத் தமிழாகிய இயற்சொல் செந்தமிழ்ச் சொல்வளம்; தமிழ் இலக்கியங்களிலும் புலவர்களிடையேயும் காணப்படுவனவாய் அரிதின்வழங்கும் உருமாறிய திரிசொற்கள், மற்றும் வட்டாரந்தோறும் மக்களிடையே வழங்கும் சொற்கள் ஆகிய சொல்வளம்; பிற மொழிகளிலிருந்து வந்து, தமிழாகவே உருமாறிக்கலந்துவிட்ட பிறமொழிச் சொல்வளம் – இவை நான்கையும் நாம் தவிர்க்க இயலாது என்ற உண்மையை உணர்ந்தேயாக வேண்டும்.

**சரி**
**கேலி**
**பதில்**
**தேதி**

போன்றவை தமிழ்ச் சொற்களல்ல என்றால் என்ன சொல்வீர்கள். எத்தனை முறை ஒரு நாளில் 'சரி சரி' என்கிறோம். ஆகவே 'சரி' தமிழ்தான் என்றால், நீங்களும் சரியென்று கூறியேயாகும் நிலையுளது. 'கேலி' தமிழன்று என்றால் நீங்களே என்னைக் கேலி, கிண்டலெல்லாம் செய்வீர்கள். 'ஏன் பதில் பேசாமல் இருக்கிறீர்கள்' என்று நான் கேட்காமலிருக்க முடியுமா? 'அதனால் பரவாயில்லை' என்றா சொல்கிறீர்கள். 'பரவாயில்லை' என்பதும் தமிழ்போல் வழங்கும் பிறமொழிச் சொல்தான். 'இன்றைக்குத் தேதி என்ன?' என்று கேட்டே ஆக வேண்டியுள்ளது. காலண்டர் கண்ட பிற நாட்டான் Date என்றான். டேட் என்பதைத் தேதி எனத் தமிழாக்கி ஒலித்த, அந்தத் தமிழனைக் கண்டு, வாழ்த்தலாம்தானே? 'இன்றைக்கு என்ன நாள்?' எத்தனையாவது நாள்?' என்று கேட்டால் போதாது என்றே கூறலாம். நம் வீட்டில் 'தேதிப்படம்' என்றுதான் காலண்டரைக் குறிப்பிடுகிறார்கள். மாதத்தின் உட்கூறு தேதி என்பது; 'தேதி' யும் இருக்கட்டும்; நாளையும் விட்டுவிடக் கூடாது.

'மாதம்' என்பது ஒரு தமிழ்ச்சொல்; முன்பு அதைத் 'திங்கள்' என்று அழைத்தார்கள். திங்கள், மதியம் என்பன சந்திரனைக் குறிக்கும். அச்சந்திரனின் தேய்வும் நிறைவும் கூட்டிய நாட்களைக் கொண்டு ஒரு மதியம் அல்லது ஒரு திங்கள் கணக்கிடப்பட்டது. அமாவாசை உவா முதல் நிறைமதி நாள் வரை பதினைந்து வளர்பிறையையும் பதினைந்து தேய்பிறையையும் கூட்டி ஒருமாதம் என்றனர். மதியம் – மாதம் உலக வழக்காயிருந்தது. திங்கள் இலக்கிய வழக்காயிருந்தது. உவா நாளில் மாதம் ஒருமுறை விடுமுறை விடப்பட்டதால் முன்பு பேச்சுத்தமிழில் விடுமுறைக்கு 'வாவு' என்று பெயர். 'இன்றைக்குப் பள்ளிக்கு வாவு' என்றால் உவா நாளில் விடுமுறை என்பது பொருள். (உவா – வாவு ஆனது) இந்த மாதத்தைச் சிலர் மாசம், மாஸம் என்றெல்லாம் எழுதினால் அது பிறமொழியாகிவிடுமா?

தமிழ் வடிவமுடைய, தமிழ் ஒலிப்பிற்குட்பட்ட, தமிழ் மரபு மாறாத (முதலாகு எழுத்து, ஈறாகு எழுத்து, மெய்ம் மயக்கம் யாவும் மாறாத) தமிழில் வந்து அடிப்பட வழங்கி மக்கட்கு நன்கு விளங்கும் என்றாகிவிட்ட, தமிழுக்கு

ஊறு செய்யாது வளர்ச்சிக்கு உதவுமென்று தோற்றுகிற சொற்களை நாணயத்தைத் தட்டிப்பார்ப்பது போல் தட்டிப்பார்த்து, தங்கத்தை உரைத்துப் பார்ப்பதுபோல உரைத்துப் பார்த்து – தமிழில் சேர்த்துக் கொள்ளலாம்.

**அலுமினியம்**

**போன்**

**கார்**

**பேனா**

இவற்றையும் இவைபோன்றவற்றையும் தள்ள வேண்டுமா? தள்ள இயலுமா? தள்ளுவதால் பயன் என்ன? இவற்றிற்கொத்த தமிழ்ச் சொற்களோடு இவற்றையும் வழங்கலாம். தொலைபேசி வேண்டாம்; போன்தான் வேண்டுமெனக் கூறக் கூடாது. கார் வேண்டாம்; உந்து போதுமெனலும் பொருந்தாது. அலுமினியமிருக்க அதற்கொரு சொல்லைத் தேடியலையவும் வேண்டியதில்லை என்றே தோற்றுகிறது.

## கட்டவிழ்த்துவிட்ட நிலைமை

வடமொழி, ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களை அப்படியப்படியே தமிழில் எடுத்தாள்வது – தமிழுக்கு இயல்பலாத பிறமொழி ஒலிகளை அவ்வாறே எழுதுவது இவையெல்லாம் கடியப்படவேண்டியவை. தேவைப்படுமேல் சட்டமியற்றியும் தண்டிக்கப்பட வேண்டியவை.

**லைட்ஸ் ஆன்**

**கவர் ஸ்டோரி**

**டிஸ்கஷன்**

**ப்ராப்ளம்**

**லெட்டர்ஸ்**

என்று தமிழ் வார இதழ்களில் தலைப்புகள் இடப்படுகின்றன. ஆங்கில நாளிதழ்கள், மாத வார இதழ்களில் வேலை பார்ப்பவர்கட்கு ஆங்கில மொழியறிவும் இதழியலறிவும் (Journalism) உண்டு. இதனால் அவை பேணப்படுகின்றன. தமிழ் நாளிதழ், மாத வார இதழ்களில் இருப்பவர்கட்கு இவ்விரண்டறிவுமே முறைப்படி அமைந்திருப்பதில்லை. ஒரு சிலரிடம் இதழியலறிவு ஓரளவு இருப்பினும் மொழியறிவு அறவே இல்லை. எனவே மனம் போனபோக்கில் அவர்கள் தமிழைக் கொலை செய்து வருகிறார்கள்.

**ஷாப்பிங் செய்வது சூப்பர் மார்க்கெட்டில்தான்.**

**இது மாம்பழ சீசன்.**

**என் ஷாப்பிங் இன்டரெஸ்ட் பிளாட்பார்மில்தான்.**

**லிஸ்ட் தாயர்ப்பண்ணி ஷாப்பிங் செய்தா கரெக்டா இருக்கும்:**

இவ்வாறும் தமிழ் இதழ்களில் எழுதுகிறார்கள். 'ஹலோ, ஹௌ டு யு டூ?' என்றும் எழுதுகிறார்கள் "I am OK" என்று அவன் சம்பாஷித்ததாக ரோமன் எழுத்துக்களிலேயேகூட எழுதுகிறார்கள்.

இவையெல்லாம் நெறிப்படுத்தப்பட வேண்டியவை. எப்படி நெறிப்படுத்துவதென்பதை, ஒற்றுமையாகக் கூடிப் பேசி முடிவு செய்ய வேண்டும். சட்டமியற்றித் திருத்தக் கூடியவற்றைச் சட்டத்தின் மூலமே வழிக்குக்கொணர வேண்டும். கருத்து வேற்றுமை பேசிக்கொண்டிருந்து காலங் கழிக்கக் கூடாது.

## ஐந்து கிரந்த எழுத்துக்கள்

தமிழில் ஹ, ஜ, ஷ, ஸ, க்ஷ என்ற ஐந்து கிரந்த எழுத்துக்களையும் எடுத்தாளும் பழக்கம் இடைக்காலத்தில் புகுத்தப்பட்டது. இவை சில தமிழ் ஒலிப்பிற்கு வேறுபட்டவை; சிலவற்றிற்குத் தமிழில் ஒலிப்புண்டு – எழுத்தில்லை.

**பஞ்சம் (ஜ, ஒலி), பாகம் (ஹ ஒலி), காசு (ஸ ஒலி)**

இன்று இவற்றை முழுவதும் ஏற்றுக் கொள்வதா அல்லது முழுவதும் அறவே விட்டுவிடுவதா என்ற கேள்வி எழுகிறது.

வேற்றுநாட்டுப் பெயர்கள், ஊர்ப்பெயர்கள், ஆட்பெயர்கள், வேற்றுநாட்டார் உண்டாக்கித் தந்து நாம் பயன்படுத்தும் பொருள்களின் பெயர்கள், உலகளாவிய – மொழிபெயர்த்தாலும் மூலச் சொல்லையும் உணர வேண்டிய கலைச் சொற்கள் போன்றவற்றைக் குறிக்கும்போது அவ்வவ்வாறே குறிக்க வேண்டியுளது.

அங்ஙனம் பிறமொழிச் சொற்களை எழுதும்பொழுது F என்ற ஒலி தவிரப் பிற பலவற்றை எழுத இவ் வைந்து எழுத்துக்களும் உதவுகின்றன.

| | | |
|---|---|---|
| **இராஜாஜி** | – | **இராசாசி** |
| **ஜாண்சந்தோஷம்** | – | **சாண்சந்தோசம்** |
| **ஷேக்ஷ்பியர்** | – | **சேக்குவியர்** |

ஜப்பான் – சப்பான்
விஸ்க்கான்சின் – விசுக்கானிசின்

பெயர்களை மிகவும் மாற்றுவதைச் சிலர் விரும்புவதில்லை. சேக்ஷ்பியர் என்று ஒருபுடையொப்புமையாகக் கூறாமல் சேக்குவியர், செகசிற்பியர் என்றெல்லாம் மாற்றினால் பெயர் வேறுபடும் என்கிறார்கள்.

பழந்தமிழ் இலக்கியங்கள் இந்த ஐந்தெழுத்தின்றியே ஆக்கப்பட்டுள்ளன. இன்றும் தமிழ்ச்சொல் வடிவங்களாக்க இடம்தரும் பிறமொழிச் சொற்கள் பல.

முன்னைய மதிப்பைக் காத்து, இன்றைய நிலைக்கும் இடம் தந்து, 'உறழ்ந்துவரும்' என்ற தமிழ் இலக்கண மரபைப் பின்பற்ற வேண்டும். பெரிதும் தமிழ் ஒலிப்புக்கு மாற்றுதல்; மாற்ற இயலா இடத்து மட்டும் இவ்வைந்து எழுத்துக்களுக்கும் இடம் தருதல் எனவும் சில சொற்களில் இராசகோபாலன் என எழுதினும் குற்றமில்லை எனக் கோடல் வேண்டும் எனவும் அறிஞர்கள் சிந்தித்து இலக்கணம் வகுக்கலாம்.

## ஒலிக்கலப்பும் சொற்கலப்பும்

பிறமொழிச் சொற் கலப்பு ஒரு மொழிக்குப் புறத்தே ஏற்படும் மாற்றம் போன்றது; ஒலிக்கலப்பு அகத்தே ஏற்படும் மாற்றமாகும். பிற சொற்களைத் தமிழ்ப்படுத்தி, தமிழ்மயமாக்கி ஆள்வதனமூலம் தமிழ் வளரும்; பிறமொழி ஒலிப்புக்களைப் புகுத்தப்புகுத்த ஒரு மொழி வேறொரு மொழி போல் மாறித் தோன்றத் தொடங்கும்.

ஒரு மொழியின் இலக்கண மரபுகள் அதன் வாழ்வாகும். அடிப்படை இலக்கண மரபுகளை மாற்றுவது, இனம் மாறிப் பிறிதொரு இனத்திற்கு ஆட்படுவதாகும்.

திராவிட மொழிகளில் தமிழிலுள்ள பண்புகள் பழங்காலந்தொட்டு இன்றளவும் மாறாதிருக்கவும், ஏனைய தெலுங்கு கன்னட மலையாள மொழிகள் ஒலி, சொல், இலக்கணப் பண்புகளைப் பெரிதும் விட்டுவிட்டன. பழைய தெலுங்கு, புதிய தெலுங்கு என்பன போன்ற மாற்றங்களும் அவற்றில் உள. தமிழ் தன் இளமையைக் காத்து நிற்பதற்கு அதன் இனிய இயல்புகளே காரணமாகும். இதனை உணர்ந்தாவது தமிழன் செயற்படுவது போற்றத்தக்கதாகும்.

## ஆங்கிலத்தின் நிலையும் ஆங்கிலநாட்டவரின் உணர்வும்

ஆங்கில நாட்டுத் தமிழறிஞர் ஒருவர் I.W. என்ற முன்னெழுத்துக்களையுடையவர். 'Tamil Culture' என்ற தமிழ்பற்றிய ஆங்கில முத்திங்களிதழில் கீழ் வருமாறு ஒரு குறிப்பு வெளியிட்டிருந்தார். கல்லூரிகளில் தமிழ் வழிக்கல்வியே சிறந்ததென அதில்வாதிட்டு வரும்போது, மொழியை ஆளும் போக்குப் பற்றியும் குறிப்பிட நேர்ந்து, அதில் அவர் பிறமொழிச் சொற்களை எவ்வாறு தமிழ்ப்படுத்தி ஒலிக்கலாம் என யோசனை தெரிவித்திருந்தார்.

"தேவைப்படுமேல் உலகப் பொதுவான கலைச்சொற்கள் சிலவற்றைத் தமிழில் எடுத்தாள்வதில் குற்றமில்லை. தமிழ் இயல்புக்குப் புறம்பானதென உறுதியாகத் தோன்றும் ஆங்கில வடிவங்களை அவ்வாறே தமிழில் ஆள வேண்டும் என்பதற்கு எவ்வித அடிப்படையும் இல்லை. பெரும்பான்மையான கலைச்சொற்கள் கிரேக்கம், இலத்தின் மொழிகளிலிருந்தே தோன்றியுள்ளன. எனவே மூலச் சொல்லை, ஒலிப்பெயர்வு செய்து, தமிழ் இறுதிநிலைகள் முதலியவற்றுடன் தமிழ்ப்படுத்தி ஏன் ஆளக்கூடாது? சில வாரங்களுக்கு முன்னால் ஒரு சர்ச்சில் குருக்கள் ஒருவர் மிஷனெறிகள் என்பதற்குப் பதிலாக 'மிசியோனாரிகள்' பற்றிப் பேசக் கேட்டபோது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அச்சொல் 'மிசியோனாரியஸ்' (Missionarius) என்ற இலத்தின் சொல்லுக்கு மிகவும் பொருத்தமாயிருந்ததுடன், தமிழின் சிறப்பியல்புக்கும் மிகவும் பொருந்தி வருகிறது". (Vol II No.2 Page 200).

இத்தகைய உணர்வு ஒவ்வொரு தமிழனுக்கும் வரின் மிகவும் சிறப்பாக இருக்கும். இன்றைய நிலையில் இவ்வுணர்வைக் 'கட்சிப் பிரச்சாரம் போல்' தெருத்தெருவாக கிராமம் கிராமமாகத் தெரிவிக்க வேண்டியுளது. அதற்கு முதற்கண்படித்தவர்களிடையே இதைப் பரப்ப வேண்டியுளது.

## உயிர் ஆறும் ஓடிவரும் வாய்க்கால்களும்

வழங்கும் மொழியில் பிறமொழிக் கலப்பு ஏற்படுவது இயல்பேயாகும். ஓடிவரும் ஆற்றில் வேண்டாத கால்வாய்களும் கலக்கும், அனைத்தையும் அவ்ஆறு தன்னகப்படுத்திக் கொண்டு, தன்னியல்பாக்கிக் கொண்டுவிடும். எனவே தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்கின்றனவே என யாரும் மனம்தளர வேண்டுவதில்லை.

## இருமொழியாளர் பல சமய வாதிகள்

சங்க காலம் முதற்கொண்டே பலசமய வாதிகள் இங்கு வாழத் தலைப்பட்டனர். அவர்களுக்கு சமயம் சார்ந்த பிறிதொரு மொழியும் தாய்மொழி போலவும், தந்தை மொழி போலவும், வீட்டுமொழி போலவும் பயன்படலாயிற்று. தமிழகத்தில் மட்டுமே இருமொழியாளர்கள் மிகுதி. தெலுங்கையும் கன்னடத்தையும் சௌராஷ்டிரத்தையும் ஆங்கிலத்தையும் தத்தம் தாய்மொழி என்று கருதுவோர் பலர் இங்கு வாழ்கின்றனர். அவர்களுக்குத் தமிழின் தனித்தன்மைகள் எனப் பல விளங்குவதில்லை; இயல்பாக அமைவதில்லை; இதில் அக்கறை காட்டுவதுமில்லை.

இந்துக்கள் எனக் கூறிக்கொள்வோர். 'சமஸ்கிருதத்தையே' தம் தொன்மை மொழியாக ஏற்கின்றனர். தமிழைக் குறைவாகவே மதிக்கின்றனர். சமஸ்கிருதத்தை வளர்த்ததில் தமிழர்களுக்கும் பெரும்பங்குண்டு. சமஸ்கிருதம் ஒரு காலத்தில் கலைமொழியாக, தொழில்மொழியாக, சமய மொழியாகச் செயற்பட்டுப் பொதுமொழியாக இருந்தது. தமிழர்களின் கலைக் கருவூலங்களும் கருத்துக் கருவூலங்களும் கூட வடமொழிமயமாக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில் தமிழின் தனித்தன்மை, இயல்புகள் பற்றிப் பேசும்போது, அது வடமொழிக்கு முரண்படுவதாகவும் பகைப்படுவதாகவும் எண்ணும் அறிவின்மை இங்கே கால் கொண்டுளது. அதைக் களைந்தெறிய வேண்டும். எடுத்துக்காட்டாகத் தமிழருச்சனை இயக்கம் வடமொழிக்கு மாறுபட்டது என்பது போன்ற மனக் கோளாறுகள் அடிவேர், ஆணிவேருடன் களைந்தெறியப்பட வேண்டும்.

களப்பிரர் பல்லவர் காலம் முதல் பல நூற்றாண்டுகள் இம் மாநிலம் பிறமொழியாளர்களால் ஆளப்பட்டது. நாயக்கர், ஐரோப்பியர், ஆங்கிலேயர், மகாராட்டிரர், இசுலாமியர், கிறித்தவர் எனப் பலராட்சியால் பலமொழிச் சொற்களைத் தமிழ் ஏற்றது.

களப்பிரர், பல்லவர்கள் கிரந்தம், பாலிமொழி, வடமொழி ஆர்வலர்களாய் ஆளத் தொடங்கித் தமிழ்மொழி அன்பர்களாய் மாறியமையை வரலாறு காட்டுகிறது. அது போலவே நாயக்கர்கள், மகாராட்டிரர், ஐரோப்பியர் போல்வார் அயன் மொழியாளர்களாய் ஆட்சியைத் தொடங்கித் தமிழ்மொழி நண்பர்களாய் மாறியமையையும் வரலாறுணர்த்துகிறது. நாட்டுப்புறத் தமிழ்ப் பொது மக்களின் ஊன்றிய தமிழ் மனமும் புலவர்களின் அசைவிலாத் தவமுமே தமிழியல்பின் நிலைபேற்றுக்குக் காரணங்களாகும்.

## அறிவியல் முன்னேற்றம்

உலகெங்கும் அறிவியல் மிக முன்னேறிவிட்டது. அவற்றிற்கான கலைச்சொற்கள் யாவும் தமிழிலும் தேவைப்படுகின்றன. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு துறையிலும் அயன் மொழிக் கல்வி அடிப்படைத் தேவைபோல் ஆகியுளது. உலகப் பொதுக் கலைச் சொற்களைத் தெரிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் வேண்டிய சூழ்நிலை உளது. அவற்றைத் தமிழியலாக்கவும் தமிழில் கொணரவும் வழிவகை காணவேண்டியுளது.

## ஒருங்கு இணையும் உலகம்

உலகம் ஒருங்கிணைந்து வருகிறது. காலத்தை வென்று, இடத்தைச் சுருக்கி உலக சமுதாயம் செயற்படுகிறது. சோவியத்தில் ஏற்படும் மாற்றமொன்று இந்தியாவைப் பாதிக்கலாம்; இந்திய அரசியல் மாற்றம் ஈழத்துத் தமிழ் விடுதலைப் புலிகளின் முயற்சியில் ஏற்றத்தை விளைவிக்கலாம் என்ற நிலை உளது. வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ்கள், இதழ்கள், திரைப்படம் யாவும் பொதுத்தொடர்பு நிறுவனங்களாய்ச் சாதாரணப் பொதுமக்களைப் போய் அடைகின்றன. இவை பயன்படுத்தும் மொழி கலப்பு மொழியாக, விளங்கவேண்டுமென்று கருதித் தரத்தைக் குறைத்த இழிவழக்கு மொழியாகச் சில வேளைகளில் ஆகிவிடுகிறது. இவற்றை நாம் நெறிப்படுத்தவும் நெறிப்படுத்தும் நோக்குடன் சிந்திக்கவும் வேண்டியுளது.

## மீண்டும் மணிப்பிரவாளம்

இடைக்காலத்தில் சமணர்கள், வைணவ சமய உரையாசிரியர்கள் தமிழும் வடமொழியும் சம அளவிற் கலந்த மணிப்பிரவாள நடையொன்றைக் கண்டார்கள். மணி, தமிழ் + பிரவாளம் (பவளம்) வடமொழி. மணியும் பவளமும் கலந்தமைந்த மாலை அழகாக இருப்பதுபோலத் தமிழும் வடமொழியும் கலந்த நடை நன்றாக இருக்கும் என அவர்கள் கருதினார்கள். அந்நடை அந்த உரைகளோடு நின்றுபோனது; நல்ல காலமாக மற்றவர்களால் பின்பற்றப்படவில்லை. ஆயினும் அம் முயற்சியால் தமிழில் தாராளமாக வடசொற்களை எடுத்தாளலாம் என்ற மனப்போக்கு ஏற்பட்டுவிட்டது. இன்று அந்த மாதிரியாக ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களைத் தமிழ் எழுத்தாளர் சிலரும், ஏடுகள் சிலவும் கலந்தெழுத முற்பட்டுவிட்டமை கருதத்தக்கதாகும். இதற்கெல்லாம் ஒரு விடிவுகாலம் தோன்ற வேண்டும். 'மீண்டும் மணிப்பிரவாளமா?' என்ற உணர்வு தலைதூக்க வேண்டும்.

✣ ✣ ✣

# 19. உலக வழக்கும் செய்யுள் வழக்கும்

'அவன் வந்தான்' என்பது ஒருமை. 'அவர் வந்தார்' பன்மை. 'கம்பன் பாடினான்' – ஒருமை. கம்பர் பாடினார் – பன்மை. பாடல்களில் 'பாடினான் கம்பன் பாரெலாம் புகழ' என்று ஒருமையில் கூறலாம். ஆனால் வழக்கில் 'கம்பன் பாடினான்' கற்பனை செய்தான் என்றெல்லாம் கூறினால் மதிப்புக் குறைவாகப்படுகிறது. எனவே ஒரு சொற்பொழிவில் 'கம்பர் பதினாயிரம் பாடல்கள் பாடினார்; அழகாகக் கற்பனை செய்தார்' என்று மதிப்புப் பன்மையுடன் பேசுகிறோம். இலக்கணப்படி அது தவறு. தொல்காப்பியர் காலத்திலேயே இத் தவறு தொடங்கிவிட்டது. ஒருவனை மரியாதைக்காக 'அவர், இவர்' என்று உயர்த்திக்கூறும் 'தவறான இலக்கணம்', பின்பற்றப்பட்டுவிட்டது. இஃது ஓர் உயர்வு கருதிய 'சமுதாய மதிப்புப் பற்றியதாகலின் தொல்காப்பியராலேயே ஏற்றுக்கொள்ளவும் பட்டது.

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர்சொற்கிளவி
இலக்கண மருங்கின் சொல்லாறல்ல (510).

என்பது தொல்காப்பியம். கதைகூறும்போது 'நரியார் வந்தார், அணியார் வாலை ஆட்டினார்' என்று 'ஒன்றனைக் கூறும் பன்மை' இடம்பெறுவதையும் அவர் 'வழக்குச்சொல்' என ஏற்கிறார்.

## என்றும் ஒன்றாக இருந்ததில்லை

தமிழின் இயல்புகளுள் ஒன்று; அதில் என்றும் உலக வழக்கும் செய்யுள் வழக்கும் ஒன்றாக இருந்ததில்லை. இன்றைய நடைமுறையில் கூறினால் பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் என்றும் ஒன்றுபோல் வழங்கியதில்லை. தொல்காப்பியர் காலத்திலேயே இவ்வேறுபாடு இருந்தது. செந்தமிழ் நிலத்திலேதான் 'இயற்சொல்' (Standard Tamil) வழங்கியது. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தும் பேச்சுத் தமிழான திசைவழக்குகள் – கொடுந்தமிழ் வழங்கின. கொடுந்தமிழ் வழங்கிய இடங்கள் இன்று வேற்றுமொழிகளாக மாறிவிட்டன.

கால்டுவெல் அவர்கள் 'தமிழ்மொழியில் உலக வழக்கும் செய்யுள் வழக்கும் என்றும் ஒன்றாக இருந்ததில்லை. மிக முற்பட்ட காலத்திலிருந்தே செந்தமிழ் கொடுந்தமிழிலிருந்து இன்று போல் வேறுபட்டே வழங்கி வந்திருக்கிறது', என்று கூறியுள்ளார். வீரமா முனிவர் செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் எனப் பிரித்து எழுதினார். வெளிநாட்டவருக்குப் பேச்சுத் தமிழும் இன்றியமையாததென உணர்ந்து அவர் அவ்வாறு எழுதினார்.

## செருமன்மொழி

செருமன் மொழியில் மூன்று வட்டார வழக்குகள் உள்ளன. அவை ஒருவர் பேசுவது மற்றவருக்கு விளங்காத அளவு வட்டாரத் தன்மையுடன் காணப்படுகின்றன. ஆனால் பொதுவான எழுத்து மொழி ஒன்றாகவுள்ளது. அஃது அந்த மூவருக்கும் விளங்கும் பொது மொழியாகவுள்ளது.

தமிழில் வட்டார வழக்குகள் பிறருக்கு விளங்காத அளவு திரிபடையவில்லை. எனினும் எழுத்துத் தமிழ் ஒரு தன்மையாக இருப்பது தமிழ்க்காப்புக்குப் பயன்படுகிறது.

**விளையாடுறானுங்க**

**விளையாடுறானுக**

**விளையாடறாங்கள்**

**விளையாடுறாக**

**விளையாடறானுங்க**

**விளையாடறாங்க**

இவ்வாறே வழக்கில் ஒலிப்பனவற்றை எழுத்தில் வழங்கும் பொழுது, 'விளையாடுகிறார்கள்' என்றே எழுதுகிறோம்; எழுத வேண்டும். முன்னையோர் இதை 'இழிவழக்கும் அழிவழக்கும்' எனத் தூற்றுவர். மேலும் இழிசனர் வழக்கும் அறிவிலார் பேச்சும் எனத் தள்ளுவர். இன்று பேச்சுமொழிக்கு என்னதான் உயர்வு கொடுத்தாலும், எழுத்தில் அவ்வாறே கொண்டுவர வேண்டுமென்பது தகாது.

## சமனிலைப் பயன்பாடு

தொல்காப்பியர் காலந்தொட்டுத் தமிழ் வழக்கில் ஒரு சமனிலை ஆட்சி செய்து வந்துளது. பேச்சுத் தமிழை – சேரி மொழியை நாட்டுப்புற இலக்கியத்தை அது புறக்கணிக்கவில்லை. அதே நேரத்தில் எழுத்துமொழியையே கட்டளைத் தமிழாக (Standard Tamil) அது பேணி வந்துள்ளது. இதனால் இவ்விரண்டிற்குமிடையே ஒரு சமன்பாட்டுப் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருந்திருக்கிறது. அது தமிழின் உயிர்ப்பைக் காத்து இளமையைப் பேண உதவியிருக்கிறது. இஃது ஒரு மொழிக்கோட்பாடு. இக் கோட்பாட்டைத் தனியே ஆராய வேண்டும். இதற்கு ஆங்கிலம் ஓரளவே பயன்படும். கிரேக்கம், இலத்தின், செருமன் மொழி போன்றவை மிகவும் பயன்படும். வெளிநாட்டு மொழியறிஞர்கள் இதுபற்றிக் குறியாது போயிருக்கலாம். நாம் அவர்கள் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாகவே முற்றிலும் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. நாமே சில கோட்பாடுகளைக் கண்டு மொழியின் நிலைபேற்றுக்குக் காரணம் என்ன என்று கண்டு அவற்றைப் பேணலாம்.

## நாட்டுப்புற இலக்கியம்

இன்று நாட்டுப்புறப்பாடல்களைத் தொகுத்தல், கதைகளைத் தொகுத்தல், பழமொழி, விடுகதைகளைத் தொகுத்தல் – என இவ்வாறு தொகுப்பும் ஆய்வும் பெருகி வருகின்றன. அப் பாடல்களை அவ்வாறே கொச்சையாகப் பதிப்பிக்க வேண்டும் – மக்கள் ஒலிப்புப் படியே போட வேண்டும் என்பர்.

'யாரடிச்சா ஏனழுதாய்? அடிச்சாரைச் சொல்லியழு'
'யாரடித்தார் ஏனழுதாய்? அடித்தாரைச் சொல்லியழு'

இவ்வாறு வழக்காற்றையும் எழுதி அடுத்து நல் வடிவத்தையும் எழுத வேண்டும்.

'கம்புக்குக் களையெடுத்தாப்லேயும் இருக்கும்
தம்பிக்குப் பொண்ணுபாத்தாப்லேயும் இருக்கும்'

கம்புக்குக் களையெடுத்தாற்போலவும் இருக்கும்
தம்பிக்குப் பெண் பார்த்தால் போலவும் இருக்கும்"

என இவ்வாறு இருவடிவங்களையும் ஏதோ ஒருவுகையில் தொடர்ந்து எழுதியெழுதி 'இயற்றமிழை' நினைவுபடுத்தியபடி இருக்க வேண்டும். இதனை நாட்டுப்பாடல் பதிப்பிக்கும் நெறிமுறையாகக் கற்பிக்க வேண்டும். பின்பற்றச்செய்ய வேண்டும். வழிகாட்ட வேண்டும்.

## படைப்பிலக்கியமும் ஆய்வேடுகளும்

கதை இலக்கியம் போன்றவற்றில் வட்டார வழக்குத்தன்மை மிகுந்து வருகிற வட்டாரத் தமிழ், சாதித்தமிழ், சமயத்தமிழ், நாட்டு எல்லை ஓரங்களில் வழங்கும் தமிழ் எல்லாம் பின்பற்றப்பட்டு வருகின்றன.

ஆங்கிலம் அளவுகடந்து கலந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

கட்டுரைகளில், அறிவியல் பற்றிய ஆய்வுரைகளில், ஆய்வேடுகளில் கட்டளைத் தமிழே பின்பற்றப்பட வேண்டும்.

தமிழில் பேச்சு வழக்கு வேறு; எழுத்து வழக்கு வேறு என்பதைப் பாலர் பாடம் தொடங்கிப் பள்ளியிறுதி வகுப்புவரை வெவ்வேறு நெறிமுறைகளில் படிப்படியாகக் கற்றுத்தர வேண்டும்

✣ ✣ ✣



தமிழண்ணல்

✧ சிவகங்கை மாவட்டம், நெற்குப்பையில் 12.8.1928 இல் பிறந்த இவர், உயர்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் 42 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய, ஒரு தமிழ் மாணவர்.

✧ சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, செவ்வியல் இலக்கியத் தொடர்பான நூல்கள் பல எழுதியவர்.

✧ பேரா. மு.வ. மூலம் 'அறிவுருவும்', அறிஞர் அண்ணா மூலம் 'உணர்வுருவும்' இளம் அகவையிலேயே இவரிடம் பதிவாயின.

✧ மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை, தாய் மொழியாம் தமிழ் ஒன்றே பாடமொழியும் பயிற்று மொழியும் ஆதல் வேண்டும்; பல்கலைக்கழக உயராய்வுப் பட்டங்கள் வரை– மருத்துவம், பொறியியலுட்பட – தமிழுக்கு, ஆங்கிலத்திற்கு நிகரான, 'மொழிச் சமநீதி' தரப்படவேண்டும்; தமிழை முழுமைபெறக் 'கல்வி மொழி' ஆக்க வேண்டுமெனப் போராடி வருபவர்.

✧ தமிழக அரசின் பொற்கிழிப் பரிசு, திரு. வி.க. விருது, சிறந்த நூற் பரிசு, நல்லாசிரியர் விருதுடன், தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் துணைத் தலைவர் – என்பதையும் பெற்றவர். தமிழக முதல்வர் கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' – நூலை வெளியிடும் வாய்ப்புப் பெற்றவர்.

✧ குன்றக்குடித் திருமடம்: கணக்காயர் பட்டம், மதுரைத் திருவள்ளுவர் கழகம்: தொல்காப்பியச் செம்மல், கோவிலூர்த் திருமடம்: அருந்தவச் செம்மல், ம.கா. பல்கலைக் கழகம்: தமிழ்ச் செம்மல், ச. மெய்யப்பர் பவள விழா விருது: தமிழியக்கச் செம்மல் என்பன சில இவர் பெற்றவை.

✧ 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை உடையவர். நிலத்தில் யார்க்கும், தம் கொள்கையை, உணர்வை, உறுதியை விட்டுக்கொடுக்க விரும்பாத நெறியை விரும்பிப் போற்றி வாழ்பவர்.

✧ இதனால் இவர் இழந்தவை பல; எனினும் மனத் தளர்ச்சிகள் கடுகளவும் இல! ஒவ்வொரு கணமும் இளமையையும் வலிமையையும் தந்து கொண்டிருப்பது இவர் கற்ற தமிழ்!